584

திரட்டு

சிறந்த மாதாந்தர கட்டுரைப் பொக்கிஷம்

REGISTRAR OF BOOKS
25 APR 1955
MADRAS

ஜய ௵ பங்குனி
மன்மத ௵ சித்திரை

போர்க்கலை

584
2-55

கீர பண்டரிபுரம்

சம்பத்து தானயப்

நன்றி மறவாத அரசன்

ஒரு ஜப்பானிய வே

ஜவஹரைப்பற்றி — ஹதிசிங்

லக்ஷ்மண பக்தியும் பரத பக்தியும்

தொடர் நாடகம், நாவல், பல
மான கட்டுரைகள், கதைகள்.

ஜூ
வைகாசி, 1955
1955-2-5
198758

April 1955
Vol. 2. No. 5.
128 Pages

8 அணா

SAMSONS DRESSES

ஸாம்ஸன்ஸ்
ரெடிமேட்
ஆடைகள்

★

சிறந்த துணி வகைகளில், நாகரீகமான பாணியில் நீடித்த உழைப்புக்காக தயாரிக்கப்படுகின்றன.

★

ஆடவர், பெண்டிர், சிறுவர் யாவருக்கும் தேவையான ஆடை வகைகள் யாவும் கிடைக்கின்றன.

★

பெங்களூர் டிரஸ்
மானுபாக்சரிங்
கம்பெனி,
12, லால் பாக் ரோட்,
பெங்களூர் - 2.

தமிழ் புத்தாண்டன்று
காணத்தவறாதீர்கள்!
மகிமை வாய்ந்த
பெண்ணரசி..
கண்ணாம்பா
பராக்கிரம
சேனாதிபதி..
நாகராஜன்
மனதைக்கவரும்
மந்திரிகுமாரி..
சூர்யகலா
அயல்நாட்டு
மூர்க்க அரசன்
மார்த்தாண்டன்..
வீரப்பா
தேசத்துரோகி
விஜயன்..
நம்பியார்
மோக வலைவீசும்
ஜீவா..
சுலோசனா
25 APR 1955
MADRAS
எம்.ஏ.வி.பிக்சர்ஸ்
பெண்ணரசி
டைரக்ஷன் K. சோமு · கதை, வசனம் A. P. நாகராஜன் · சங்கீதம் K. V. மஹாதேவன் · கேமிரா J. G. விஜயம்
ஸ்டுடியோ கோவை ஸெண்ட்ரல்
14—4—55 தமிழ் புத்தாண்டன்று
சென்னையில் சித்ரா, பிராட்வே, மகாலக்ஷ்மி, காமதேனு
மற்றும் தமிழ்நாடெங்கும்
காலை 9 முதல் 12 மணி வரை மேல் வகுப்புகளுக்கு அட்வான்ஸ் புக் உண்
MAV PICTURES COIMBATORE

உலகத்திலுள்ள இதர மைகளுக்கு ஓர் அறைகூவல்

சுலேகா

பௌண்டன் பேனா இங்க்

("எஸ்–100" ஸால்வென்ட் கூடியது)

தரத்தில் உயர்ந்தது

உயர் ரக பொருள்களை வாங்கி எமது
சுதேசியை பெரிதும் ஆதரியுங்கள்

SULEKHA WORKS LTD.

SULEKHA PARK :: CALCUTTA - 32

Branches: **Delhi - Bombay - Madras**

மதராஸ் ஆபிஸ்: 5, ஸ்டிரிங்கர் தெரு, சென்னை - 1.

ஸ்ரீ அம்பிகா எம்போரியம்

தாசர்புரம், திருநீண்டயூர் போஸ்டு
திண்ணனூர் ரயில்வே ஸ்டேஷன்.



உத்தரவாதமான பி. அண்டு சி. மில்
ரெடிமேட் ஆடைகளுக்கும் நூதன பைகளுக்கும்
சிறந்த இடம்:

உரிமையாளர்
எம். கே. ரங்கனாதன்

திரட்டு

Vol. 2 **பொருளடக்கம்** No. 5

வேதங்களை வணங்குவோம் ... 4
பழமுதிர்சோலை ... 6
கண்ணும் காதுமின்றி சகலகலாவல்லியான மாது ... 9
சுகம் எங்கே? ... 17
புத்தக அபிப்பிராயம் ... 22
காவாசிமா ... 25
ப்ரியவ்ரதன் ... 32
சம்பத்து தான யக்ஞம் ... 34
நீ— ... 42
கீர பண்டரிபுரம் ... 43
க்ஷேத்ரக்ஞர் ... 45
ஜவஹரைப்பற்றி அவர் தங்கை ... 47
துறவிக்கு துறவைப் போதித்த பெண்மணி ... 50
திரும்பிப்பாராதே! ... 52
யோகக் கலை ... 54
வீடுகளைப் பூட்டாத தேசம் ... 56
ஆடம்பரபக்தி உண்மை பக்தி அல்ல ... 57
ச்ருங்கேரியில் தோன்றிய ஞானச்சுடர் ... 61
வஜ்ரஸூசி உபநிஷத் ... 64
மீண்ட வாழ்க்கை ... 67
உலோகங்களுக்கும் உண்டா களைப்பு? ... 73
காலச் சக்கரம் ... 74
கலிகாலமல்லவா! ... 76
உயிர்க்கனல் ... 81
நன்றி மறவாத அரசன் ... 89
மேவாரின் வீழ்ச்சி ... 93
தனக்கென வாழாதவன் ... 100
பக்தியில் இரு வகை உண்டு ... 102
உதிர்ந்த மலர்கள் ... 108
பழமையில் மோகம் ... 109
மணமும் வாழ்க்கையும் ... 125

ஆவணக் காப்பக நூலகம்
சென்னை-600 008
198258

"THIRATTU" Tamil Monthly Digest.

திரட்டு

சிறந்த மாதாந்தரக் கட்டுரைப் பொக்கிஷம்

ஏப்ரல் ○ 1955

வேதங்களை வணங்குவோம்

பாரதநாட்டு மக்களின் வாழ்க்கைக்கு அடிப்படை—நம் பண்பாட்டின் சின்னமும் அதன் மூலமும்—பாரத மக்களின் வாழ்க்கை உத்தமும் உன்னதமுமாய் விளங்கும் செய்கைகளனைவற்றிற்கும் ஒரு தூண்டுகோல்—இந்த லக்ஷணங்கள் யாவும் பொருந்தியதே நம் வேதங்கள்.

யுகாந்திரமாய் இந்த வேதங்களுக்குக் கேடு வராமல் கையாண்டது பாரத மக்களின் பெரும் சாதனையாகும், இந்த ஞான தீபத்தை மங்காமல் பாதுகாப்பது இன்றைய பாரத மக்களின் கடமையாகும்.
பாரதத்தைப் போல் பெரிய ராஜ்யங்களிலுள்ள ஜனத்தொகுதிகளுக்கும் ஒன்றோடொன்று முக்காலங்களுக்கும் தொடர்பளிப்பதற்கும் எல்லாத் தொகுதிகளையும் ஒன்றாகச் சங்கிலியால் இறுகக் கட்டுவதுபோல் இணைப்பதற்கும் வேதங்கள் துணை புரிந்துள்ளன.

மேல்நாட்டு நாகரிகத்தின்மீது மோகங்கொண்டு நம் நாட்டு விலைமதிப்பற்ற இந்த வேதமென்ற பொக்கி

ஷத்தை இழப்பதைப் போல் கண்டனத்திற்குரிய செயல் வேறொன்றுமேயில்லை.

புராதனமாயுள்ள வேதங்களைக் கற்பதற்கும் பாது காப்பதற்கும் நூதன வழிகளை வகுக்கவேண்டும். வேதங்களின் சுரங்கள் மறந்துபோகாமலிருக்க அவற்றை இசைத்தட்டுகளில் ஒலிப்பதிவு செய்ய வேண்டும்.

வேதங்கள் ஞானக்கடலாகும். அவற்றைப்பற்றி கணக்கற்ற பாஷ்யங்களும் அபிப்பிராயங்களும் வெளிவந்துள்ளன.

மேல் நாடுகளில் அநேக ராஜ்யங்களில் நம் வேதங் களை மிகச் சிரத்தையுடன் கற்று வருகின்றனர். வேதங்களைக் கற்றுக்கொடுப்பதற்கு ஒரு ஸ்தாபனம் இந்தியாவில் இல்லாதிருப்பது எவ்வளவு பரிதாபகர மானது.

ஸம்ஸ்கிருத கிரந்தங்களை மத நூல்களாக மட்டும் பாவித்தால் போதாது. மனிதனுல் இயற்றப்பட்ட உன்னதமான நூல்களனைத்தும் ஸம்ஸ்கிருதத்தில் தான் உள்ளது. இந்த ஸம்ஸ்கிருதத்தை நாம் பாது காப்பதோடு நின்றுவிடக்கூடாது.

பகீரதன் கங்கோத்திரியிலிருந்து கங்கையைப் பூமிக்குக் கொண்டுவந்து உலகத்திற்கு உதவியது போல் நாமும் ஸம்ஸ்கிருதத்தை பொதுமக்களுக்கு ஒரு அருந்துணையாக்க முயற்சிக்கவேண்டும்.

ஸம்ஸ்கிருதத்தை புராதன முறைகளில் கற்பதோடு அந்த தேவபாஷையை பாரத மக்கள் தினந்தோறும் கையாளும் கருவியாக்கி புத்துயிர் அளிக்க வேண்டும்.

—*K. M. Munshi.*

''சூரர்கிளை மாளவென்ற...சோலை மலை
மேவிநின்ற கதிர்வேலன்''



பழமுதிர் சோலை (அழகர் கோயில்)

''புவனமூன்றும் வாழப் புராரிதன் நுதற்கண்நோக்கிப்
அவிச்சுடர் ஒளியாய்த்தோன்றி அறுமுகத்தேவாய் அன்பர்
பவபயம்ஒழித்துக் காக்கப்பழமுதிர் சோலைமேவும்
சிவசுப்ரமண்யன் வேலைச் சேவிப்பதெமக்குவேலை''

பழமுதிர் சோலை என்னும் பெயருக்கேற்றபடி தென்னஞ் சோலைகளும் அநேக மரஞ்செடிகளும், மலைச்சாரலும், நீர்வீழ்ச்சியும் காண்பதால்தான் குளுமையும், அழகும் பொருந்திய பெயரை அமைத்தனர் போலும். பெரிய கோபுரமுண்டு. பெரிய கோயில். ஷண்முகப் பெருமானின் ஆறுவது படைவீடு. அருணகிரிநாதர், நக்கீரர் ஆகியோரால் பாடப்பெற்ற ஸ்தலம். இக்கோயிலின் கற்சிற்பங்கள் மிகவும் அழகான வேலைப்பாட்டுடன் காணப்படுகின்றன. இப்போது இவ்வாலயம் விஷ்ணு ஸ்தலமாய் இருக்கிறது. மூலஸ்தானத்தில் நாச்சியார் சமேதராய் பெருமான் ஒரே பீடத்தில் காட்சியளிக்கிருர். கள்ளழகர் கோவில் என்ருல்தான் அனைவருக்கும் தெரியும், மலைச்சாரலில் அமைந்திருக்கிறது. கோயிலிலிருந்து சற்று தூரத்தில் நீர்வீழ்ச்சி இருக்கிறது. அங்கு



சென்று ஸ்நானம் செய்யலாம். கோயில் பெரிய கோபுரத்துக்குமுன் 18-ம் படி கருப்பண்ண சாமி கோயில் இருக்கிறது. எப்போதும் கதவு தாளிட்டிருக்கிறது. மூடியிருக்கும் கதவுக்குத்தான் சந்தனம், புஷ்பம் முதலியன சாற்றுகிறார்கள். நைவேத்தியம் பழம், தேங்காய் முதலியன வைத்து தீபாராதனை நடக்கிறது. இங்கு பேய், பிசாசு பிடித்தவர்கள் வந்தால் தாமாக ஆடி நிவர்த்தியாகிறது. மற்றும் அநேக பிரார்த்தனைகள் இங்கு நடக்கின்றன. இங்கு குரங்குகள் அதிகம். இந்த ஸ்தலம் மதுரை ரெயில் நிலையத்திலிருந்து பன்னிரண்டு மைல் தொலைவிலுள்ளது. பஸ் வசதி உண்டு.

மூலம் :— காளத்தி நடேச முதலியார் இயற்றியுள்ள "இறைவனின் உறைவிடங்கள்" என்ற நூல்.



"பெண்ணரசி"

சத்தியமும் தேசபக்தியும் என்றும் ஒரு தேசத்தைக் காக்குமென்ற உண்மையை மிகவும் திறமையாகவும் சாமர்த்தியமாகவும் ஒரு நாட்டையாண்ட பெண்ணரசியின் மூலம் சித்திரிக்கும் ஒரு சரித்திர சம்பந்தமான சித்திரமாகும். ஸ்ரீ எம். ஏ. வேணு அவர்களால் தயாரிக்கப்பட்ட "பெண்ணரசி"

பராக்கிரம கத்திச் சண்டைகள், திடுக்கிடும் சம்பவங்கள், காதுக்கினிய கானங்கள், கண்ணுக்கினிய அற்புத நடனங்கள், நெஞ்சையள்ளும் வசனங்கள் யாவும் ஒருங்கே கொண்ட இந்தப் "பெண்ணரசி" 14—4—55 முதல் தமிழ் நாடெங்கும் திரையிடப்படுகிறது.

கண்ணும் காதுமின்றி
சகலகலாவல்லியான மாது

●

வட அலபாமா மாகாணத்தைச் சேர்ந்த டஸ்கும்பியா என்ற சிறிய நகரில் ஜூன் 27, 1880-ல் நான் பிறந்தேன். என் வாழ்க்கையின் ஆரம்பம் எளியதாகத்தான் இருந்தது; எந்தச் சின்ன வாழ்க்கையின் ஆரம்பத்தையும் போலத்தான் இருந்தது. குடும்பத்திலே முதல் குழந்தை வரும், பார்க்கும், வெற்றிபெறும்.

★

ஆதி நாட்களிலிருந்தே நான் அழுத்தமுள்ளவளாகவும், பிடிவாதக்காரியாகவும், குறுகுறுப்புள்ளவளாகவும் இருந்தேன் என்று சொல்லுகிறார்கள். யார் எது செய்தாலும் அதைப்போலவே நானும் செய்வேனும்! பிடிவாதம் பிடித்துச் செய்வேனும்! பிறந்த ஆறுவது மாசத்திலேயே "How d'ye" (சௌக்கியமாக) என்று கேட்க ஆரம்பித்து விட்டேனும். ஒரு நாள் 'டீ! டீ! டீ!" என்று ஸ்பஷ்டமாகக் கூச்சல் போட்டு எல்லோருடைய கவனத்தையும் கவர்ந்து விட்டேனும். எனக்கு வியாதி வந்த பிறகும்கூட பழைய வார்த்தைகளில் ஒன்று எனக்கு நன்றாக ஞாபகம் இருந்தது. "தண்ணீர்" [water] என்கிற வார்த்தை. பேசச் சக்தியற்றுப் போய்விட்ட பிறகும்கூட அந்த வார்த்தையை எண்ணி எதையோ உச்சரிப்பதை நான் நிறுத்தவில்லை. எழுத்துக் கூட்ட வருகிறவரையில் "வா...வா" [Water என்பதற்கு] என்று சொல்வதை நான் நிறுத்தவில்லை. எனக்கு ஒரு வயசு பூர்த்தியானபோது நான் நடக்கத் தொடங்கிவிட்டேன் என்று சொல்கிறார்கள்.

★

அடுத்துவந்த துயரம் நிறைந்த பிப்ரவரி மாதத்தில் எனக்கு நோய் கண்டது. படுத்துவிட்டேன். என் கண்களை மூடிக் காதுகளையும் அடைத்துவிட்ட நோய் அது. புதுசாகப் பிறந்த குழந்தைபோல அந்த நோயின்போது எனக்குப் பிரக்ஞையே அற்றுவிட்டது. வயிற்றிலும் மூளையிலும் அடைப்பு ஏற்பட்டு விட்டது என்கிறார்கள். நான் பிழைக்கவேமாட்டேன் என்று தான் டாக்டர் நினைத்தாராம். ஒரு நாள் அதிகாலையில், வந்த மாதிரியே அவசரமாகக் காரணமில்லாமலே, ஜுரம் திடீரென்று நின்றுவிட்டது. அன்று என் குடும்பத்தார் சந்தோஷப்பட்டார்கள். ஆனால் அவர்களில் யாருக்கும், ஏன், அந்த டாக்டருக்கும் கூட தெரியாது, எனக்கு இனிக் கண் திறக்காது என்றோ, காது இனிக் கேளாது என்றோ அவர்களில் யாரும் நினைக்கவேயில்லை.

ஒரு நாள் நான் புதுப் பொம்மையை வைத்து விளையாடிக் கொண்டிருந்தேன். என்னுடைய பெரிய துணிப்பொம்மையை என் மடிமேல் போட்டாள் மிஸ் ஸல்லிவன். அதே சமயம் என் உள்ளங்கையில் விரலால் d-o-l-l என்று எழுதினாள். பொம்மை என்கிற பெயர் இரண்டு பொம்மைகளுக்குமே பொருந்தும் என்று எனக்கு அறிவூட்ட முயன்றாள். அதே தினம் காலையில் "சொம்பு தண்ணீர்" என்கிற வார்த்தைகள் பற்றி எனக்கும் மிஸ் ஸல்லிவனுக்கும் ஒரு போராட்டம் நடந்தது. சொம்பு என்றால் சொம்பு தான் என்றும், தண்ணீர் என்றால் தண்ணீர்தான் என்றும் எனக்குத் தெரிவிக்க மிஸ் ஸல்லிவன் வெகுவாகப் பாடுபட்டாள். ஆனால் எனக்குப் பிடிபடவில்லை. சொம்பைத் தண்ணீர் என்றும், தண்ணீரைச் சொம்பு என்றும் எழுதினேன் நான். அதிகமாகத் தொந்திரவு செய்யாமல் அந்த விஷயத்தை அத்துடன் விட்டு விட்டாள் அவள். ஆனால் கூடிய சீக்கிரமே மறுபடியும் சந்தர்ப்பம் கிடைத்தவுடன் சொம்பு, தண்ணீர் என்று மிஸ் ஸல்லிவன் ஆரம்பித்தாள். எனக்கு ஒரே ஆத்திரமாக வந்தது. புதுப் பொம்மையை எடுத்துத் தரையில் ஓங்கி அடித்தேன். அது தூள் தூளாக உடைந்து தெறித்தது. காலடியில் கிடந்த பொம்மைத் துணுக்குகள் எனக்கு எல்லையில்லா ஆனந்த மூட்டின. உடைந்த பொம்மையைக் கூட்டி ஓர் ஓரமாக என் உபாத்தியாயினி ஒதுக்குவதை உணர்ந்த எனக்கு கொஞ்சம் ஆறுதலாகக்கூட இருந்தது. என் தொப்பியை எடுத்து வந்தாள் மிஸ் ஸல்லிவன். வெளியே, வெப்பமான சூரிய ஒளியில் போகப் போகிறோம் என்று ஊகித்துக்கொண்டேன். வார்த்தைகள் அற்ற ஒரு நிலையைச் சிந்தனையென்று சொல்லலாமா? அது எனக்குத் தெரியாது. ஆனால் இந்த எண்ணத்தினால் குதித்துக்கொண்டே கிளம்பினேன்.

★

பாஷைத் திறவுகோல் இப்போது எனக்குக் கிடைத்து விட்டது. அதை உபயோகித்துக் கற்றுக் கொள்ள நான் துடியாகத் துடித்தேன். காதால் வார்த்தைகளைக் கேட்டுக் குழந்தைகள் அதிகமாகச் சிரமப்படாமல் பாஷையைக் கற்றுக்கொண்டு விடுகின்றன. பிறர் வாயிலிருந்து வருகிற வார்த்தைகளைப் பறக்கும் பக்ஷிகளைப் பிடிப்பதுபோல அவர்கள் ஆனந்தமாகப் பிடித்துவிடுகிறார்கள். காதில்லாத குழந்தையின் விஷயம் இப்படியல்ல; மெதுவாக சிரமப்பட்டுத்தான் வார்த்தைகளை அது கற்றுக் கொள்ள முடியும். வழி எதுவானால் என்ன? முடிவு ஆச்சரியகரமானது, ஆனந்தமானது, ஒரு வஸ்துவின் பெயரைச் சொல்ல அறிந்துகொள்வது முதல் படிப்படியாக நகர்ந்து முன்னேறி வெகு

தூரம் செல்கிறோம் நாம். திக்கித் திணறிச் சொல்லும் நம் முதல் வார்த்தைக்கும் ஷேக்ஸ்பியரின் கவிதையில் ஒரு வரியில் காணும் கருத்து ஆழத்துக்கும் உள்ள தூரம் அளவில் அடங்காது.

★

"அன்பு'' என்கிற வார்த்தையின் அர்த்தத்தைப் பற்றி நான் முதல் முதலாகக் கேட்டறிந்துகொண்ட காலைப்பொழுது எனக்கு ஞாபகம் வருகிறது. எனக்கு அப்போது அதிகமாக வார்த்தைகள் தெரியாது. உரிய காலத்திற்கு முன் எங்கள் தோட்டத்தில் பூத்திருந்த வயலெட் புஷ்பங்களைக் கொணர்ந்து என் உபாத்தியாயினிடம் தந்தேன். அவள் எனக்கு ஒரு முத்தம் தர முயன்றாள். ஆனால் அப்போது எனக்கு என் தாயாரைத் தவிர யார் முத்தமிட்டாலும் பிடிக்காது. என்னைக் கட்டியணைத்துக் கொண்டு மிஸ் ஸல்லிவன் "நான் ஹெலனிடம் அன்பாயிருக்கிறேன்'; ஒன்று என் கையில் ஒழுதினாள்.

''அன்பு [காதல்] என்றால் என்ன?'' என்று நான் கேட்டேன்.

என்னை இன்னும் இறுக அணைத்துக் கொண்டாள் மிஸ் ஸ்ல்லிவன். ''அன்பு என்பது இங்கிருக்கிறது' என்று என் இதயத்தைத் தொட்டுக் காட்டினாள். என் இதயம் "பட் பட்'' என்று அடித்துத் துடித்துக் கொண்டிருந்தது எனக்கு அப்போதுதான் தெரியவந்தது. அவள் வார்த்தைகள் எனக்குச் சட்டென்று புரியவில்லை. என கையால் தொடமுடியாத எதையும் புரிந்து கொள்ள எனக்கு அப்போது சக்தியில்லை.

என் உபாத்தியாயினியின் கையிலிருந்த வயலெட் பூக்களை முகர்ந்தபடியே பாதி சைகைகளாகவும் பாதி வார்த்தையாகவும் கேட்டேன்: "மலரின் மணம்தான் அன்பா?'' என்று.

"இல்லை.''

சிறிது நேரம் யோசித்தேன். சூரிய உஷ்ணம் கத கதப்பாக இருந்தது.

"இதுதானே அன்பு?'' அந்தக் கதகதப்பு வந்த திசையைக் காட்டி, "இதுதானே அன்பு?'' என்று கேட்டேன்.

சூரியனின் கதகதப்பான உஷ்ணம்தான் உலகில் எல்லாவற்றையும் வளரச்செய்கிறது. சூரியனைவிட அழகானது வேறு என்னதான் இருக்கமுடியும்? ஆனால் மிஸ் ஸல்லிவன் "இல்லை'' என்று தலையை ஆட்டினாள். எனக்கு ஏமாற்றமாக இருந்தது. திகைப்பாகவும் இருந்தது. அன்பு என்றால் என்ன என்று என் உபாத்தியாயினியால் சொல்ல முடியவில்லை என்பது எனக்கு அசாதாரணமானதாகப்பட்டது; அசாத்தியமானதாகவும் பட்டது.

செவிடர்களும் குருடர்களும் சாதாரணமாக எந்தச் சம்பாஷணையிலுமே கலந்துகொள்வது என்பது துர்லபம்தான். ஒரே சமயத்தில் செவிடாகவும் குருடாகவும் இருப்பவர்களுக்கு இந்தச் சிரமம் இரட்டிக்கிறது. மனிதர்களின் குரலில் உள்ள பாவம் எதுவும் இவர்களுக்குத் தெரியாது. வார்த்தைக்கு அர்த்தபுஷ்டி தரும் குரல் என்பதே என்ன என்பது இவர்களுக்குத் தெரியாது. தவிரவும் பேசும்போது எற்படுகிற முகபாவத்தையும் இவர்களால் காணமுடியாது. நாக்கையும்விடக் கண்களால் வார்த்தைகளுக்கு அதிகமான அர்த்தபாவம் ஏற்பட முடியும் என்பது உலகம் அறிந்த விஷயம்தானே?

★

என் கல்வியில் மிகவும் முக்கியமான கட்டம் நான் படிக்கக் கற்றுக்கொண்டதுதான்.

சில வார்த்தைகளை எழுத்துக் கூட்ட நான் கற்றுக் கொண்டதுமே என் உபாத்தியாயினி எனக்குச் சில அட்டைகளைத் தந்தாள். அந்த அட்டைகளில் கைவிரலால் தடவி உணரும்படி எழுத்துக்கள் எழுதப்பட்டிருந்தன. அச்சிட்ட ஒவ்வொரு வார்த்தையும் ஒரு வஸ்து, ஒரு காரியம் அல்லது ஒரு குணத்தின் பெயர் என்பதை நான் அதி சீக்கிரமே உணர்ந்துகொண்டேன். சிறு சிறு வாக்கியங்கள் அமைக்கும்படியாக என்னிடம் ஒரு சட்டம் இருந்தது. ஆனால் அதில் வாக்கியங்கள் எழுதக் கற்றுக் கொள்ளுமுன் நான் வார்த்தை அட்டைகளைக்கொண்டே வாக்கியங்களை அமைப்பேன். "பொம்மை" "படுக்கையில்" "இருக்கிறது" என்கிற மூன்று வார்த்தைகளுக்குரிய அட்டைகளையும் எடுத்துச் சேர்த்து வைப்பேன், அதே சமயம் என் பொம்மையையும் எடுத்துப் படுக்கையில் போடுவேன்.

★

"பெண்" என்கிற வார்த்தை அட்டையை என் சட்டையில் குத்திக்கொண்டு நான் நின்றேன் என்று மிஸ் ஸல்லிவன் சொல்லுகிறாள். எனக்குப் பக்கத்தில் "இங்கே" "நிற்கிறாள்" என்கிற வார்த்தைகளையும் எடுத்து வைத்துக் கொண்டேனாம். இந்தமாதிரி வார்த்தைகளையும், வார்த்தை அட்டைகளையும் வைத்துக்கொண்டு விளையாடுவதில் எனக்கு இருந்த ஆனந்தம் வேறு எதிலும் இல்லை. என் உபாத்தியாயினியும் மணிக் கணக்காக என்னுடன் இந்த விளையாட்டில் கலந்து கொள்வாள், என் அறையில் இருந்த சாமான்களை எல்லாம் வைத்து, வார்த்தை அட்டைகளையும் சேர்த்து வாக்கியங்களாகச் செய்து ஆனந்திப்பேன் நான்.

ஒருதரம் ஒரு கண்ணாடி ஜாடியில் ஜலத்தில் பதினோரு தவளைக் குஞ்சுகள் இருந்தன. அந்த ஜாடியும் செடிகளுக்கு மத்தியில் ஒரு ஜன்னலில்தான் வைக்கப்பட்டிருந்தது. எவ்வளவு ஆவலுடன் அவற்றைப் பற்றி அறிந்துகொண்டேன் என்பது எனக்கு நன்றாக ஞாபகம் இருக்கிறது. என் கையை ஜலத்தில் விட்டு அந்தத் தவளைக் குஞ்சுகள் குதித்து விளையாடுவதைப் பார்ப்பேன். அவை என் விரல்களுக்கிடுக்கில் புகுந்து புறப்படும். ஒரு நாள் தவளைக் குஞ்சு அந்தக் கண்ணாடி ஜாடி விளிம்புக்கு அப்பால் எட்டிக் குதித்துவிட்டது. தரையில் அது செத்துவிட்டமாதிரிக் கிடந்தது. அதன் வால் மட்டும் ஆடியதிலிருந்து அதற்கு உயிர் இருப்பது தெரிந்தது. நான் அதைத் திரும்பவும் தண்ணீரில் எடுத்துப் போட்டேன். ஆனந்தத்துடன் அந்தத் தவளைக் குஞ்சு தண்ணீரில் சுற்றிச் சுற்றி நீந்தி வந்தது. எம்பிக் குதித்துப் பரந்த உலகத்தைப் பார்த்துவிட்டு வந்த தவளை அது, பெரிய தவளையாகும் வரையில் அந்தக் கண்ணாடி ஜாடிக்குள்ளேயே அடைப்பட்டுக்கிடக்க அது தயாராக இருந்தது. தவளையானதும் தோட்டத்தின் இருந்த நிழலடர்ந்த தடாகத்தில் குடியேறி கோடை இரவுகளில் தன்னுடைய காதல் கீதத்தை இசைத்தது.

★

ராகன்ஹில்டு காடா என்கிற பெண் நார்வே தேசத்தைச் சேர்ந்தவள். குருடி; செவிடி; ஆனால் அவளுக்குப் பேசக் கற்றுக் கொடுத்துவிட்டார்கள். இந்தப் பெண்ணைப்பற்றி கேட்டதும் என் ஆவல் கட்டுக்கடங்காததாகி விட்டது, நானும் பேசக் கற்றுக் கொண்டு விடுவது என்று தீர்மானித்துவிட்டேன்.

★

நார்வே தேசத்தில் கையாண்ட வழி இதுதான். என் கைகளால் உபாத்யாயினி பேசும்பொழுது அவள் முகத்தையும் உதடுகளையும் தடவிப்பார்க்கச் சொல்லுவாள். உதடுகள், நாக்கு இவற்றை எப்படி வைத்துக்கொண்டு அவள் ஒரு ஒலியை எழுப்பினாள் என்று என்னை விரல்களால் தடவிப்பார்க்கச் சொன்னாள். அவள் செய்த மாதிரியே நானும் செய்தேன்; ஒரு மணி நேரத்திற்குள் ஆறு ஒலிகள் வந்து விட்டன எனக்கு; M, P, A. S, T, I, மிஸ் புல்லர் எனக்குப் பதினொரு பாடங்கள் தான் சொல்லித்தந்தாள். அதற்குள் எனக்குப் பேச வந்துவிட்டது. ''இப்போது உஷ்ணமாக இருக்கிறது'' என்று நான் சொன்ன முதன் முதல் வாக்கியம் என் உள்ளத்தை ஆனந்தத்தாலும் ஆச்சரியத்தாலும் நிரப்பியது உண்மைதான்; புதுப்பலம் பெற்று என் ஆத்மாவைப் பிணைத்திருந்த தளைகள் எல்லாம் பற்று அற்று விழுந்துவிட்டன

என்று தோன்றியது எனக்கு. பேச்சு என்கிற சாதனத்தின் மூலம் உலகிலுள்ள அறிவு எல்லாவற்றையும் எட்டி விடலாம் என்று தைரியம் ஏற்பட்டது.

★

காதால் கேட்காத வார்த்தைகளைப் பேச முயலும் எந்தச் செவிட்டுக் குழந்தைக்கும் தெரியும். அது பேசுகிற முதல் வார்த்தைகள் ஓர் அற்புத அனுபவம். அந்தக் குழந்தையைச் சூழ்ந்திருக்கும் மௌனம் என்னும் சிறையிலிருந்து அது விடுதலை பெறும் வைபவம் மகத்தானது. எப்படிப்பட்ட மௌனச் சிறை அது; அன்பு என்கிற ஒலி அங்கில்லை; பக்ஷிகளின் குரல் கேட்காது; சங்கீதத்தின் சிறு அம்சங்கூட அங்கு கிடையாது. அப்படிப்பட்ட மௌனத்திலிருந்து விடுபட்ட அந்தக் குழந்தை சொல்கிற முதல் வார்த்தை எவ்வளவு நம்பிக்கைக்கும், எவ்வளவு ஆனந்தத்துக்கும், அஸ்திவாரமாக அமையும் என்று ஊகித்து அறிந்து கொள்ள முடியுமே தவிர, சொல்லிமுடியாது. என் பொம்மைகளிடமும், கற்களிடமும், மரங்களிடமும், பக்ஷிகளிடமும் நான் பேசத் தொடங்கிய வேகம் இதனால் ஏற்பட்டதுதான். நான் கூப்பிடும் போது அதைப் புரிந்துகொண்டு மில்டிரெட் ஓடி வந்தாள் என்பது எனக்குக் கரை காணாத சந்தோஷத்தைத் தந்தது. என் நாய்களை விரட்டிப் பல காரியங்களைச் செய்ய ஏவினேன். ஒருவரும் குறுக்கிட்டு அர்த்தப்படுத்த வேண்டாத முறையில் நான் நேரடியாகப் பிறருக்குத் தெரியும்படியாக என் மனசிலிருந்ததைச் சொல்ல முடிந்தது என்பது கடவுளின் அதிசயங்களில் ஒன்றாகத் தோன்றியது. இதைவிடச் சிறந்த காரியம் வேறு என்ன இருக்க முடியும்? விரல்களுக்கிடையில் சிக்கித் தவித்த என் சிந்தனைகள் இப்போது சிறகடித்துப் பறந்து உல்லாசமாக வெளி வந்தன.

★

ஆனால் சில மாதங்களுக்குள்ளாகவே நான் பேசக் கற்றுக் கொண்டு விட்டேன் என்று நினைப்பது தவறு. பேசுவதற்கு அஸ்திவாரமான ஒலிகளை மட்டும்தான் நான் பல வாரங்களில் கற்றுக் கொண்டேன். மிஸ் புல்லருக்கும், மிஸ் ஸல்லிவனுக்கும் என் பேச்சு புரிந்தது. மற்றவர்களுக்கோவெனில் நான் சொல்கிற வார்த்தைகளில் நூற்றுக்கு ஒன்றுகூடப் புரியாது. பேச்சுக்கு அஸ்திவாரமான ஒலிகளை அறிந்துகொண்ட பிற்பாடும் கூட எனக்குப் பேச்சு சுலபத்தில் வந்துவிடவில்லை. நானாகச் செய்யக் கூடியது ஒன்றும் இல்லை. மிஸ் ஸல்லிவனின் மேதையும், அலுப்புச் சலிப்புமில்லாத உழைப்பும், பிரியமும் இல்லாவிட்டால், என்னால் எதிலும் எந்தத் திசையிலும் முன்னேறி யிருக்கவே முடியாது.

இந்தப் பேச்சு விஷயத்திலும் அது உண்மையே. ஒவ்வொரு ஒலியையும் தெளிவாகச் சொல்லி, பலவிதமான அர்த்த புஷ்டியான வார்த்தைகளை வாக்கியங்களாகக் கோர்ப்பதற்கு எனக்கு மிஸ் ஸல்லிவனின் இடைவிடாத உதவி தேவையாக இருந்தது. இப்பொழுதும் கூட அவள் என் உச்சரிப்பில் ஏதாவது தவறு இருந்தால் திருத்துகிருள்.

★

செவிடர்களுக்குப் பேசச் சொல்லித் தரும் காரியத்தில் ஈடுபட்டுள்ளவர்களுக்குத் தெரியும் இதிலுள்ள சிரமங்கள். பேச்சை அடைய நான் எப்படிப்பட்ட போராட்டம் நடத்தினேன் என்பதைப் புரிந்துகொள்ள அவர்களால் தான் முடியும். என் உபாத்தியாயினிடம் உதடுகள் அசைவதைத் தொட்டுப் பார்த்து நான் ஒளியின் வடிவை அடையவேண்டும்; இதற்கு என் கை விரல்களைத் தவிர வேறு எவ்வித சாதனமும் இல்லை. தொண்டை, வாய், வாயின் அசைவுகள், முகத்தின் பாவம் எல்லாவற்றையும் கை விரல்களை மட்டும் கொண்டு அறிய முற்படுகிறவர்களுக்கு எவ்வளவு ஆயாசம் இருக்கும் என்று சொல்லாமலே ஊகித்துக் கொள்ளலாம். இந்த மாதிரி சந்தர்ப்பங்களில் நான் ஒவ்வொரு ஒலியையும் நூறு தடவைக்கு ஆயிரம் தடவையாகத் திரும்பித் திரும்பிச் சொல்லவேண்டும்; என் குரலில் எனக்கே திடமும் நம்பிக்கையும் பிறந்து, பிறருக்கும் புரிகிற அளவுக்கும் சொல்ல வேண்டும். பழகிப் பழகிக் கற்றுக்கொண்டேன்; வாய் வலிக்கப் பேசப் பழகினேன். அடிக்கடி அலுப்புத் தட்டிவிடும்; எடுத்துக் கொண்ட காரியம் முடியாது போலிருக்கிறதே என்று அதைரியம் ஏற்பட்டுவிடும். ஆனல் அடுத்த நிமிஷமே வீடு திரும்பி என்னிடம் அன்பு வைத்திருந்தவர்களிடம் நாவால் பேசலாம் என்கிற ஆசை ஏற்பட்டு என்னைப் பேசிப்பழகத் தூண்டிவிடும். ஓய்ந்து உட்கார்ந்து விடமாட்டேன்.

★

கில்மன் பள்ளிக்கூடத்தில் என்னுடைய இரண்டாவது வருஷம் நம்பிக்கை நிறைந்திருந்தது. முதலில் சில வாரங்களில் எதிர்பாராத பல இடையூறுகள் ஏற்பட்டன. அந்த வருஷம் நான் முக்யமாகக் கணக்குக் கற்றுக்கொள்வதில் கவனம் செலுத்த வேண்டும் என்று மிஸ்டர் கில்மன் தீர்மானித்திருந்தார். அது தவிர பௌதிக சாஸ்திரம், அல்ஜீப்ரா, க்ஷேத்திர கணிதம், வான சாஸ்திரம், கிரேக்க லத்தீன் பாஷைகள் முதலிய பாடங்களையும் படிக்க வேண்டும். வகுப்பில் மற்றவர்களுடன் பாடங்களைத் தொடங்குவதற்கு ஏற்றவகையில் எனக்காக பிரத்தியேகமாகத் தயாரிக்கப் பட்ட குருட்டுப் புஸ்தகங்கள் தயாராகி வரவில்லை. சில பாடங்

களுக்கு வேண்டிய சாதனங்கள் சிலவும் சமயத்தில் கிடைக்கவில்லை. எனக்காகப் பிரத்தியேகமாகக் கல்வி சொல்லித் தருவது என்பது சிரமமான காரியமாக இருந்தது. எல்லாப் பாடங்களையும் கேட்டு எனக்கு எழுத்துக் கூட்டிச் சொல்ல வேண்டியது மிஸ் ஸல்லிவனின் பொறுப்பாயிற்று.

★

1899-ல், ஜூன் 29, 30 தேதிகளில், ராட்கிளிப் கல்லூரிக்குச் சேருவதற்கான முடிவான பரீக்ஷைகள் எழுதினேன் நான்.

மிஸ் ஸல்லிவன் கேள்வித் தாள்களை எனக்குப் படித்துக் காட்டக்கூடாது என்று சொல்லிவிட்டார்கள் கலாசாலை அதிகாரிகள். பெர்கின்ஸ் ஸ்தாபனத்தைச் சேர்ந்த மிஸ்டர் யூஜின் ஸீ. வைனிங் என்பவர் வந்தார். அவர் கேள்வித் தாள்களை அமெரிக்க ப்ரெய்ல் எழுத்தில் எழுதித் தந்தார். மிஸ்டர் வைனிங் எனக்கு முன் பின் அறிமுகமாகாதவர். என்னுடன் ப்ரெய்ல் எழுத்து எழுதித்தான் அவர் பேச முடியும்.

★

கண்ணும் காதும் உள்ளவர்களுக்கு அந்தப் பொறிகள் எப்படி உதவுகின்றனவோ அப்படி எனக்கு அந்தப் பொறிகளுக்குப் பதில், புஸ்தகங்கள் உதவியிருக்கின்றன. உண்மையில், என் கல்வியில் புஸ்தகங்களுக்குள்ள முக்யத்வம் அலாதியானது; மற்றவர்களுக்குத் தந்ததைவிட எனக்குப் புஸ்தகங்கள் அதிக அர்த்தம் தந்தன.

★

என் வாழ்க்கையை பூரணமாக்கியவர்கள் என் நண்பர்கள் தான் என்று நான் கருதுகிறேன். ஆயிரக்கணக்கான வழிகளில் என் குறைபாடுகளையும், கண்ணில்லாமையையும் கூடப் பயன்படுமாறு செய்து என் வாழ்வுக்கு அர்த்தம் தருபவர்கள் என் நண்பர்கள், புலன்கள் இரண்டு இல்லாத குறையையும் மறந்து சந்தோஷமாக நான் வாழ்க்கை நடத்துவது இன்று சாத்தியமாக இருப்பது இந்த நண்பர்களின் உதவியால்தான்!

மூலம்:—என் கதை ஹெலன் கெல்லர்—மொழிபெயர்ப்பு—க. நா. சுப்ரமண்யம், ஜோதி நிலையம் வெளியீடு, சென்னை-5.

சுகம் எங்கே?

●

அந்தணர் ஒருவர், பகுகுடும்பி. ஸம்பத்தைக் கொடுக்க மறந்த தெய்வம், ஸந்தானத்தை நிறைய அருளி இருந்தார். ஒரு கவளம் சாப்பாட்டிற்கு பஞ்சமாகிவிட்டது. அத்தனை சிசுக்களின் வயிறுகளையும் நிரப்பி, பத்தினியின் இச்சையை பூர்த்தி செய்ய முடியாது தத்தளித்தார் அந்தணர். ஒரு நாள் இந்த கஷ்டத்தை பொறுக்க முடியாமல் தன்னை சிருஷ்டித்த பிரும்மாவை நோக்கி தியானிக்கலானார். பிரும்மா பக்தனின் மானஸீகக் கூக்குரலை கேட்டு, உடனே பிரத்யக்ஷமாகி "பக்தா! நீ இப்பொழுது எதற்காக என்னைக் கூப்பிட்டாய்? உனக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டார்.

"ஏ பிரும்மா! உனக்கு சிருஷ்டிக்கும் சக்தி இருக்கிறது. அந்த வித்தையை விளையாட்டாக விளையாடும் நீ இஷ்டம்போல் மனம் போனபடி பலவித ஜீவராசிகளை படைக்கிறாய். அவற்றைக் கைப்பொம்மைகளாய் இஷ்டம் போல ஆட்டுகிறாய். ஆனால், எவ்வளவோ சுகபோகங்களையும் கூடவே அருளி இருக்கிறாய். என்னைப் படைத்ததின் கருத்தென்ன? பாழும் ஏழை பிராமணனாக பிறப்பித்து இருக்கும் சிசுக்களை எல்லாம் வேறு கொடுத்துவிட்டாய். பசியோ சகிக்கவே முடியவில்லை. வீட்டிலோ தரித்திரம் தாண்டவமாடுகிறது. எத்தனை உன்னை பூஜித்தாலும் என் தரித்திரம் விடிவதாக இல்லை. இப்படியே எத்தனை காலத்திற்கு கஷ்டப்பட வைக்கப் போகிறாய்? நான் வாழ்வில் சுகமே காண வேண்டாமா?" இதைக் கேட்ட பிரும்மா கலகலவென்று நகைத்தார்.

"பக்தா! ஒரு சின்ன விஷயம் சொல்லுகிறேன். முதலில் அதை ஆராய்ந்து விட்டுப் பிறகு உன் இஷ்டத்தை தெரிவி."

"பிரபோ! தாங்கள் எதைச் சொன்னாலும் செய்யத் தயாராக இருக்கிறேன். என் கஷ்டத்தை தவிர்க்கவேண்டும். அதற்காக தாங்கள் இடும் ஆக்ஞைகளை சிரமேற்கொண்டு பூர்த்தி செய்வேன்," என்றார் அந்தணர்.

"பக்தா! இந்த ஏழு உலகங்களையும் சுற்றிப் பார்க்கும் சக்தியை உனக்கு கொடுக்கிறேன். ஒவ்வோரு உலகத்திலும் சகல இடங்களிலும் சென்று பலவிதமான சுகங்களை காண்பாய். அதில் எந்த மாதிரி சுகம் உனக்கு வேண்டுமோ, அதை என்னிடம் கேள். நீ திரும்பும் வரை உன் குழந்தைகளை நான் ரக்ஷிக்கிறேன். இப்பொழுதே பயணப்படு" என்றார். பிராமணரும் பிரயாணத்தைத் தொடங்கினர்.

ஒவ்வொரு உலகத்திலும் பல வகையான சிற்றின்பங்களே இருந்தனவேயன்றி எங்கும் உண்மையான சுகமே காணப்படவில்லை, ஒரு இடத்திலே செல்வம், ஒரு இடத்திலே பஞ்சம், பட்டினி, பசி, மற்றோர் இடத்திலே வியாதியால் மக்கள் துடித்துக்கொண்டிருந்தனர்; ஒரு இடத்திலே அந்தஸ்துக்கு மீறிய குழந்தை, மற்றோர் இடத்திலே மிதமிஞ்சிய சொத்து, ஆனால், மருந்துக்குக் கூட ஒரு குழந்தை இல்லை. ஸம்பத்து இருந்தால் சந்தானம் இல்லை, சந்தானம் இருந்தால் ஸம்பத்து இல்லை. ஸரஸ்வதி இருந்தால் லக்ஷ்மீ கடாக்ஷம் இல்லை. சரஸ்வதி பிரத்யக்ஷமாகி இருக்கும் இடத்தில் தரித்திர லக்ஷ்மி தாண்டவமாடினாள். சில இடத்திலே ஜனங்கள் மதியிழந்து காமம், குரோதம், லோபம், மோகம் முதலியவைகளின் வயப்பட்டு மிருகத்தையொத்திருந்தனர். குடும்பஸ்தர், கடைசியாக ஒரு கிருஹத்தை அடைந்தார். அந்த கிருஹத்தை பார்த்த மாத்திரத்திலேயே அவர் பரவசமாகிவிட்டார். வேறு எந்த உலகத்திலும் இம்மாதிரி தூய்மையான ஓர் இடத்தை அவர் காணவேயில்லை. வீட்டின் வாயிலிலேயே கிளி கொஞ்சியது. தெருப்பாதையை பசுஞ்சாணத்தால் மெழுகி பளிச்சென்று கோலமிட்டிருந்தது. வீட்டின் வாயிலிலே

ஏழெட்டு குழந்தைகள் அடுக்கு வரிசையொத்த பாலகர்கள் விளையாடிக் கொண்டிருந்தனர். அந்தணர் வீட்டிற்குள்ளே நுழைந்தார். கலியாண கூடத்திலே ஜகஜ்ஜோதியாக குத்துவிளக்கு ஐந்து முகமும் எரிந்து கொண்டிருந்தது; அதன் குளிரொளியில் அங்கிருக்கும் தெய்வ உருவங்கள் ஜோதி மயமாகத் தென்பட்டன.

கூடத்து ஊஞ்சலிலே அந்த கிருகத்து எஜமானர் கம்பீரமாக வீற்றிருந்தார். அவரது தர்ம பத்தினி அழகே அவதாரமாக தெய்விக சோபை பொங்க, கணவனுக்கு பணிவிடை செய்து கொண்டிருந்தாள்: உடலிலே வைரம், தங்கம், கோமேதகம் முதலிய விலையுயர்ந்த கற்களால் செய்யப்பட்ட நகைகள் கணக்கில்லாமல் தொங்கின. கூடத்தின் ஒருபுறம் தானியங்கள் மலை மலையாக குவிந்திருந்தன. எங்கும் லக்ஷ்மி தாண்டவமாடிக் கொண்டிருந்தாள். ஸம்பத்தையும் ஸந்தானத்தையும் வஞ்சனையின்றி ஒரு சமமாக அளித்திருந்தார் பிரம்மதேவன். திருமாலின் கட்டளையால் லக்ஷ்மி அவருக்கு அடிபணிய வந்திருப்பது போன்றிருந்தது. இதைக் கண்ட அந்தணர், "அடாடாடா.........! ஸ்வர்க்கத்தினுலும் கூட இந்த சுகபோகம் கிடைக்காது. கிடைத்தால் இம்மாதிரி சுகமல்லவா கிடைக்கவேண்டும்! இத்தனை செல்வத்தையும் ஒன்று கூட்டி பெற்ற அந்த மகானுபாவரே சிறந்தவர். அவரே தெய்வத்தின் அத்யந்த அன்பைப் பெற்றவர்! என்று நினைத்து கரங்களை குவித்தபடியே 'தடா' லென்று அவரது பாதங்களிலே விழுந்தார்.

"ஸ்வாமி, எழுந்திரும். எம்பெருமானின் திருவடிகளை விட்டு இந்தப் பாவியின் கால்களிலே விழுகிறீரே! நானல்லவா உமக்கு அதிதி பூஜை செய்யவேண்டும்?" என்று தட்டுத் தடுமாறிக்கொண்டே கூறினர்.

"ஸ்வாமி; தங்களை போலல்லவா ஜன்மம் எடுக்க வேண்டும். ஏற்றத் தாழ்வில்லாது அத்தனை செல்வங்

களையும் உம்மிடம் காண்கிறேன். சுகத்தின் பூரண உருவத்தையும் இங்குதான் கண்டேன். இப்படிப்பட்ட கடாக்ஷம் யாருக்கு கிடைக்கும்?'' என்று ஓயாது புகழ்ந்தார். செல்வந்தரின் முகத்திலே சந்தோஷத்திற்கு பதில் துயரமே படர்ந்திருந்தது. கண்களிலே கண்ணீர் கோத்திருந்தது.

''ஈசுவரா! உன் திருவிளையாடல்தான் என்ன! நான் சுகஜீவியாம், செல்வந்தனும்; இந்தப் பிறவிகளின் புகழ்ச்சிகளுக்கு அர்த்தம்தான் என்ன! எனக்குள்ள குறையை நீயன்றி யாரறிவர்.'' செல்வந்தரின் பேச்சைக் கேட்ட அந்தணர் அரவம் தீண்டியவரைப் போல் திடுக்கிட்டார். இவருக்குக் கூட குறை இருக்கிறதா? என்று வியந்தார்.

'' தனவந்தரே! ஆச்சர்யமாகவல்லவா இருக்கிறது! உமக்கா குறை?''

'' அந்தணரே! ஏன் இல்லை. மற்றவர்களுக்கு இல்லாத குறை எனக்கிருக்கிறது!''

''எந்தச் செல்வத்திலும் குறையைக் காணவில்லையே; பஞ்சத்தின் பெயரே இக்கிருஹத்தில் எடுக்க முடியாது. பணமோ ஏராளமாகக் கொட்டிக் கிடக்கிறது. கண்ணுக்கினிய பத்தினி. வயிறு பசியாத பஞ்ச பட்ச பரமான்ன போஜனம். அலுப்பு தீரக் கொஞ்சிக் குலாவ எத்தனை குழந்தைகள்! ஸம்பத்து, ஸந்தானம், சுகபோகம் எல்லாம் ஒன்றுபட்டு உம்மிடம் சேவகம் செய்யும் இந்த சுகத்தை விட மேலானது ஏது? இதிலே எங்கு குறைவிருக்கிறது.''

'' அந்தணரே வெளிக்கு அமைதியான வாழ்க்கைப் படகு உள்ளே பொத்தலானதுதான். பார்ப்போர் கண்களைக் கவரும் என் கிருகத்தில் யாரும் குறை கண்டு பிடிக்க முடியாது. அது என் இதயம் ஒன்றைதான் அரிக்கிறது. நீர் காணும் இக் குழந்தைகள் எனக்கு பிறந்ததல்ல. அவை சமையற்காரனின் உடமைகள். ஸ்வாமி! எனக்கு ஸந்தான பாக்கியம் அளிக்கவில்லை.'' பதில் அந்

தணரை சம்பட்டி கொண்டு அடிப்பது போன்றிருந்தது, அங்கிருந்து எடுத்தார் ஓட்டம், நேராக பிரும்மாவின் பாதாரவிந்தங்களிலே விழுந்தார்.

''பிரபோ க்ஷமிக்கவேண்டும்! க்ஷமிக்கவேண்டும்! தங்களது திருவிளையாடல்களையும், சக்தியையும் புரிந்து கொள்ளாமல் தங்களை நிந்தித்ததற்கு என்னை மன்னித்தருளவேண்டும். பிரபோ! தங்களின் பாதமே சரணம். இதையன்றி வேறு சுகம் எனக்கு வேண்டாம். தங்கள் திருவுருவம் என்றென்றும் என் இச்சடலத்திலே இருந்து தெம்பூட்டி வந்தால் அதுவே போதும். தங்கள் திருநாமமே போஜனமாக இருக்க வேண்டும். இத்தனை பெரிய பக்தனை இருந்து அற்ப சுகத்தைத் தேடி ஓடினேன். நிலையான பரம்பொருளை விட்டு மாயையான அநித்யத்திடம் மனதை விட்டதற்கு என்னை ரக்ஷிக்கவேண்டும்.''

''பக்தா! எழுந்திரு, இனியாகிலும் தெரிந்து கொள். ஆக்கும சக்தியை கொண்ட நானே நர ஜன்மங்களின் வாழ்க்கையை அறியேன். ஜீவனை படைத்தபின், பின்புறமாக வைத்து, லிபிகோலால் போன ஜன்மாவின் பாவ புண்யத்திற்கு தகுந்த பலனை அடைவாய் என்று எழுதிவிட்டு திருப்பிப் பார்ப்பேன். அப்பொழுதுதான் அவர்களின் விதியைக் கண்டு எனக்கே சற்று பச்சாதாபம் எற்படுவதுண்டு. ஆனல், அவை நான் விளையாடும் விளையாட்டாக இருந்தபோதிலும், அவரவர்களின் கர்ம வினைப்படி படைக்கும் ஒரு விதியைக் கொண்டுதான் படைக்கிறேன்.'' அஞ்ஞானத்தை விட்டு ஞானத்துடன் வாழ்வாயாக என்று ஆசிர்வதித்து மறைந்தார்.

'' அஸ்வினி ''

புத்தக அபிப்பிராயம்

குழந்தைகளுக்கு விருந்து

[ரோஜாப் பெண், ஆசிரியர் தி. ஜ. ர. ஆடவல்லான் பிரசுரம் 8, சின்னரெட்டித் தெரு எழும்பூர் சென்னை-8. விலை ரூ. 1.]

சிறுவர்களுக்கென்றே பிரத்தியேகமாக கதைகள் எழுதுவது தனிக் கலையாகும். சிறந்ததும், சற்றுகடினமானதுமானகலையும் கூட. முதியோர்களுக்கென்றேயுள்ள கதைகளில் சம்பவங்கள் பிரதானம். அடுத்தபடியாக கதா பாத்திரங்களை யொட்டிய வர்ணனை, பிறகு கதாபாத்திரங்களின் சந்தர்பங்களுக்கேற்ற சம்பாஷணை; இந்த அம்சங்கள் மூன்றும் பூரணமாக இல்லாத கதைகளைப் படிப்பதில் முதியவர்களுக்குச் சுவாரஸ்யமிராது.

சிறுவர்களுக்காக எழுதப்படும் கதைகளில் இந்த அம்சங்களிருந்தாலும், இல்லாவிடிலும் கதை சொல்லும் பாணி மிகவும் முக்கியமானது. வீடுகள் தோறும் குழந்தைகளுக்குத்தாய்மார்கள் கூறும் கதைகளைக் கவனியுங்கள்.

"ஒரே ஒரு குருவி குப்பையை, குப்பையைத் தோண்டிற்றும்" என்று தொடங்கி பாட்டியும், கன்றுகுட்டியும், மாடும் நீர்ப்பிரவாகத்தில் மிதக்கும் வரையிலும் குழந்தை எவ்வளவு ஆர்வத்துடனும் விழித்த கண்களை மூடாமல் கேட்கிறது. இம்மாதிரிக் கதையில் மனத்தை உருக்குமாறோ தலை ரோமங்கள் குத்திட்டு நிற்குமாறோ கட்டங்கள் இல்லையேனும் கதை கேட்போர்களுக்கு எவ்வளவு மகிழ்ச்சியைத் தருகிறது! இந்த மகிழ்ச்சிக்குக் காரணம் கதையைச் சொல்லும் பாணியேதான்.

தன்மயத்துவமாக கதைகளை சொல்வதே ஒரு வரப்பிரசாதம் தான். இந்த வரப்பிரசாதத்தைப் பூரணமாகப் பெற்றுள்ள அதிருஷ்டசாலிகளில் ஒருவரானார். இந்த சிறுவர் கதை தொகுப்பின் ஆசிரியரான தி ஜ. ர. அவர்கள். அநேக சுவையான கட்டுரைகளும் கதைகளும் எழுதிப் புகழ்பெற்ற இந்த நிபுணர் இந்தத் துறையிலும் வல்லவராயிருப்பது தமிழ் நாட்டு சிறுவர்களின் பாக்கியமேயாகும்.

எழுதப்படிக்கத் தெரிந்த சிறுவர்களனைவருக்கும் "ரோஜாப் பெண்" ஒரு அரிய விருந்து.

—"Dorai"

கலியுகோபநிஷத்

[மகாத்மாஜியின் சுயசரிதம்—சுருக்கம் —தமிழாக்கம் எல், கிருஷ்ணசாமி பாரதி. சர்வோதயப் பிரசுராலயம், தஞ்

சாவூர். 360 பக்கங்கள் விலை ரூ. 2]

பிரபல அமெரிக்க எழுத்தாளர் ஒருவர் *கனிவுள்ள ஒளியே! வழி காட்டு'' என்ற நூலில் காந்திஜியின் சத்தியாக்கிரக இயக்கங்கள் இவர் மனப்பான்மையை எவ்வாறு பாதித்த தென்பதைப் பற்றி விவரித்துள்ளார்.

உப்பு சத்தியாக்கிரக இயக்கங்கள் தண்டி; தர்சனு போன்ற குக்கிராமங்களில் நடைபெற்றன. அச்சந்தர்ப்பங்களில் மேற்கூறிய எழுத்தாளர் அமெரிக்க உள்நாட்டில் எங்கேயோ ஒரு குக்கிராமத்திலிருந்தார். ஆனாலும் உப்பு என்பது உலகமெங்கும் மனிதர் யாவருக்கும் இன்றியமையாதது. இந்தப் பொருளுக்காக ஒரு மனிதன் தடியடிபட்டு ரத்தத்தைச் சிந்தி சிறைக்குச் செல்வதென்ற நிலைமை மேற்கூறிய எழுத்தாளரின் மனத்தை உருக்கியது.

''என் மனம் துடித்தது; நான் யார்? இந்த காந்தி யார்? எங்களிருவருக்கும் என்ன சம்பந்தம்? நானிருக்கும் குக்கிராமப் பண்ணையிலிருந்து எத்தனை ஆயிரம் மைல் தொலைவில் இவர் சத்தியாக்கிரக இயக்கத்தை நடத்துகிறார். ஆனாலும் இந்த தூரத்தையெல்லாங்கடந்து என்னை இந்த இயக்கம் வசீகரிக்க காரணம் உண்டா? மனிதருக்குள்ள ஒருமையும் காந்திஜியின் செய்கையின் உன்னதத் தன்மையும் தான் இதற்கு காரணம்'' என்று எழுதியுள்ளார் இந்த அமெரிக்க எழுத்தாளர்.

பிறகு காந்திஜியின் ஜீவிதத்தைப் பற்றியும் இந்நாட்டு வாழ்க்கையின் வேதாந்த அடிப்படையைப் பற்றியும் கற்றுக் கொண்டு காந்திஜியைப் பற்றி ஏசுநாதரை நினைத்து கிறிஸ்துவர்கள் புரியும் பிரார்த்தனையை காந்திஜிக்கும் செலுத்தலாம் என்ற அபிப்பிராயம் கொண்டு விட்டார்.

மேற்கூறிய அமெரிக்க எழுத்தாளரின் புத்தகத்தில் காந்திஜியின் மரணத்தை பற்றி விவரிக்கும் அத்தியாயத்திற்கு இவர் கொடுத்திருக்கும் தலைப்பு உபநிஷத் 1947 என்பதாகும்.

இவ்வாறு உபநிஷத்துகள் அளிக்கும் நல்ல படிப்பினைகளுக்குச் சமமாக காந்திஜியின் ஜீவிதத்தை இந்த அமெரிக்க எழுத்தாளர் கருதுவதை பாரத மக்கள் அனைவரும் ஆமோதிப்பார்கள்.

காந்திஜியின் சுயசரித்திரத்தை அநேக மேல் நாட்டுப் பெரியோர்கள் கிறிஸ்துவ வேதமான பைபிளுக்கும் இது போன்ற மற்ற பிரபல சிறந்த நூல்களுக்கும் இணையாக ஒப்பிடுகிறார்கள். எளிய நடையும் மனித வாழ்க்கைக்கு மிக முக்கியமான கருத்துக்களையும் சங்

* *Lead, Kindly Light by* Vincent Sheean.

தார்ப்பங்களையும் பற்றி விவாதிக்கும் நயமும் கொண்ட காந்திஜியின் சுயசரிதம் அனைவருக்கும் ஒரு வாழ்க்கைத் திறவுகோலாயிருக்கிறது.

சர்வோதயப் பிரசுரத்தாரால் வெளியிடப்பட்டுள்ள இந்த நூலின் ஒரு சுருக்கம் மிக அருமையான பொக்கிஷம். ஒரு மகாபுருஷனின் புனிதமான வாழ்க்கைக்கும், சமூகத்தொண்டுக்கும் சர்வோதயப் பிரசுரத்தாரின் இந்த அழகான வெளியீடு ஒரு தக்க ஞாபகச் சின்னம்.

ஸ்ரீமதிகளுக்குத் துணை

[சமைத்துப்பார்: ஆசிரியை எஸ். மீனாட்சி அம்மாள், கிடைக்குமிடம்:- 99, பிராடீஸ் ரோடு, சென்னை-28. விலை முதற் பாகம் ரூபாய் 3—8—0, இரண்டாம் பாகம் 4—0—0]

நம் நாட்டு மக்களின் வாழ்க்கையில் எத்தனையோ அம்சங்களில் வித்தியாசங்கள் மலிந்துள்ளன. இந்த வித்தியாசங்கள் அரசியல், சமூக விஷயங்களில் மட்டுமல்ல; அடுப்பங்கரையைக் கூட இவை விட்டுவைக்கவில்லை.

உதாரணமாக தமிழ்நாட்டின் பல பழக்கவழக்கங்களைப்பற்றி மலையாளத்திலும் மலையாளத்துப் பழக்கங்களைப் பற்றித் தமிழ் நாட்டிலும் அரைகுறையாகவும், அனர்த்தமாகவும் அபிப்பிராயங்கள் பரவியுள்ளது போல் தான் இவ்விரு பிரதேசங்களிலும் வழக்கத்திலுள்ள உணவு பதார்த்தங்களைப் பற்றியும், உணவு தயாரிப்பு முறைகளைப் பற்றியும் பொருந்தாத அபிப்பிராயங்களும் தவறான அபிப்பிராயங்களும் நிலவி வருகின்றன. ஒரு ஆங்கிலப் பழமொழிப் பிரகாரம். "சமையலின் ருசியைச் சாப்பாட்டில் காணலாம்." (The proof of the pudding is in the eating)

ஸ்ரீமதி மீனாட்சி அம்மாள் இந்தக் கொள்கையைக் கைக்கொண்டே இப் புத்தகத்தை இயற்றியுள்ளார். ஒரு பிரதேசத்தார் சமையலைப்பற்றி மற்றொரு பிரதேசத்தார் கேலி செய்வதை விட அந்தப் பதார்த்தங்களைச் சமைத்து பார்த்து அவற்றின் சுவையைத் தெரிந்துகொள்வதே நலம்.

தென்னிந்தியர்களுக்கிடையே பழக்கத்திலுள்ள சமையல் முறைகள் அனைத்தையும் இப் புத்தகத்தில் காணலாம். சமையற் கலையில் அவ்வளவு தேர்ச்சியில்லாதவர்களுக்கு வியப்புத் தரக்கூடிய சமையல் வகைகள் கூட இப்புத்தகத்தில் சேர்க்கப் பட்டிருக்கின்றன.

"மனிதன் ஹிருதயத்திற்குவழி அவன் வயிறு மூலமாகத்தான்" என்பது ஒரு பழமொழி. நம்மிடையே இப்போதில்லாத ஒரு ஒற்றுமைக்கு இந்த புத்தகம் வழிகாட்டியாகலாம். இந்த வழிகாட்டியைச் சிருஷ்டித்தது ஒரு சிறந்த தொண்டுதான்.

—N. S. M.

[ஒரு ஜப்பானிய வேவுகாரியைப் பற்றி.]

★ காவாசிமா ★

குமாரி காவாசிமா ஒரு அரச குமாரி. மஞ்சு தேசத்தரசனுடைய குமாரி. அவளுடைய பெரியப்பாவின் குமாரராகிய காங்க்தேஷ் மஞ்சு தேசத்து சிம்மாசனத்தில் ஜப்பானியர்களின் கைப் பாவையாக இருந்து பல ஆண்டுகள் அரசாண்டிருக்கிறார்.

காவாசிமாவின் இயற்பெயர் துங்சினோ. 1906-ஆம் ஆண்டில் மஞ்சு நாட்டு அரண்மனையில் துங்சினோ பிறந்தாள். அவளுக்கு ஐந்து ஆண்டுகள் கூட நிரம்பவில்லை. அதற்குள்ளாக மஞ்சு நாட்டிலே வசிக்கின்ற சீனர்கள் அவள் தந்தைக்கு விரோதமாகக் கலகம் செய்து அவரைக் கொன்றுவிட்டார்கள். ஆனால் இராஜ விசுவாசமுள்ள பணியாட்கள் சிலரால் துங்சினோ எப்படியோ ஜாக்கிரதையாகக் காப்பாற்றப்பட்டு ஜப்பான் வந்துசேர்ந்தாள். அங்கிருந்த கோடீச்வரராகிய "நவீவா காவாசிமா" அவளை சுவீகாரம் எடுத்துக்கொண்டார். இந்த ஐந்து வயது நிரம்பிய புத்திசாலிப் பெண், காவாசிமாவின் ஜாகீரிலிருந்த அஸாமா என்ற கிராமத்தில் கல்வி பயின்றாள். இங்கிருக்கும் பொழுது தான் "துங்சினோ" "காவாசிமா" என்ற பெயர் பெற்று, வளர்ந்து பெரியவளானாள்.

இந்த கிராமத்திலேயே "யோசிகாவும்" "தோயாமா" என்ற வாலிபனும் உடன் சேர்ந்து விளையாடி வளர்ந்து வந்தார்கள். இவர்களிடையே நேசமும் பருவமும் போட்டியிட்டுக்கொண்டு வளர்ந்தன. ஒரு நாள் யோசிகா இருபது வயது நிரம்பிய வாலிபன் தோயாமாவைத்தான் நேசிக்கத் தொடங்கி இருப்பதை உணர்ந்தாள். ஆனால் அவளுக்குத் தன் நேசத்தின் எதிரொலியாக ஒன்றும் புலப்படவில்லை. தோயாமா யோசிகாவை விட்டுவிட்டு திடீரென்று போய்விட்டான். அன்று முதல் அவள் வாலிபர்களின் இனத்தையே வெறுக்கத் தொடங்கினாள். இதன் பயனாக பதினெட்டுவயது நிரம்பிய அவ்வழகிய ராஜகுமாரியின் மனத்தில் தானும் வாலிபனாக வேண்டும் என்று ஒரு விருப்பம் உண்டாயிற்று. அது முதல் பிரசித்தமான சமுராயி வம்சத்தில் வளர்ந்த ராஜகன்னிகை யோசிகா அடிக்கடி ஆணுடையில் வெளியே உலாவத்தொடங்கினாள். நாட்கள் செல்லச்செல்ல ஜனங்கள் இதைப்பற்றி அவது

ளுகப் பேச ஆரம்பித்தார்கள். சுவீகாரத் தகப்பனாராகிய காவாசிமாவின் காதிற்கு இச் செய்தி எட்டியது; அவர் ஸ்வீ காரப் பெண்ணைத் தடுத்துப் பார்த்தார். ஆனால் அவள் கேட்கவில்லை. கடைசியாகக் கோபமடைந்து அவர் அவளை வீட்டிலிருந்து துரத்திவிட்டார். தன் சொத்து முழுவதையும் மற் றவர்கள் பெயருக்கே எழுதிவிட் டார்.

இப்பொழுது யோசிகாஎன்ன செய்வாள்? கையில் காசு இல்லை, இருக்க வீடில்லை, உண்ண உண வும் இல்லை! அவள் அஸாமாவி லிருந்து ஒருவருக்கும் தெரியா மல் வெளியேறி தைரனுக்கு வந்தாள். அங்கு மங்கோலிய அரசகுமாரனொருவனுடன் அவ ளுக்குப் பழக்கமுண்டாயிற்று. இருவரும் பரஸ்பரம் கவரப்படு வதை உணர்ந்தார்கள். எனவே மணந்துகொண்டு உல்லாச யாத் திரையாக மங்கோலியாவிற்கு வந்தார்கள். மங்கோலியப் புல் வெளிகளிலும் வரண்டநிலப் பகுதிகளிலும் சுற்றிவந்த அவள் மனத்தில் மறுபடியும் வாலிப ளுகவேண்டும் என்ற ஆசை முளைத்தது. அவள் தன் கணவ னிடம் படைகளுக்கு தளபதி யாகத் தன்னை நியமிக்கும்படி கூறினாள். அவளுடைய வடி வழகில் மயங்கி உண்மைப் பார்வையை இழந்துவிட்ட அவன் சாக்குபோக்கு ஒன்றும் சொல்லமுடியவில்லை. மறு நாளே, மங்கோலியாவின் ஒரு சிறு பகுதிக்கு யோசிகா படைத் தலைவியானாள். அவள் தலை மைக்கு மிகுந்த மோகன சக்தி யிருந்தது. அவளிடமிருந்த மனோ தைரியமும் நிர்மாணத் திறமை யும் மனித சுவபாவத்திற்கு ஒட் டிய தனதாகப்பாராட்டும் குண மும் ஒவ்வொரு வீரனையும் பரவ சப்படுத்திவிட்டன. இதற்கு முன் பாக எந்த தளபதியும் அவர் களிடம் இவ்வளவு ஒத்துழைப் புடனும்; தனதாகவும், நடந்து கொண்டதில்லை.

சிறிது சிறிதாகப் படைகள் முழுவதும் யோசிகாவினிடம் மிகுந்த அன்புகொண்டுவிட்டன. இதைக்கண்ட அரசகுமாரனுக்கு யோசிகாவின் கட்டளைக்கு முன் பாக தன் கட்டளையை ஒரு வேளை படைகள் தகர்த்துவிட் டால் என்ன செய்வது? என்ற காரணமில்லாத சந்தேகம் தோன்றியதால் அவன் மனம் நடுங்கினான். அவனுக்குத் தன் மனைவியின் மேல் பொறாமை உண்டாயிற்று. காதலனுக்குரிய அன்பிலே குட்டிச்சாத்தான் இடம் பிடித்துக்கொண்டான். இதன் முடிவாக யோசிகா தன் கணவனை விவாகரத்து செய்து விட்டு சைனாவின் பிரசித்தி பெற்ற நகரமான தீந்த்சிங் வந்து சேர்ந்துவிட்டாள்.

அது 1931-வது ஆண்டில் நடந்தது. 1931-ஆம் வருஷம் டிசம்பர் மாதம் ஜப்பான் மஞ் சூரியாவின் மேல் படையெடுத்து விட்டது. சீனப்படை ஷாங் காய்க்கு அருகாமையில் ஜப்பா னியப் படையோடு போரிட்டுக்

கொண்டிருந்தது. ஜப்பானியப் படைவீரர்களைக்காட்டிலும் ஜப்பானிய ஒற்றர்களின் தொகையே ஒருவேளை அதிகமாக இருக்குமோ என்றுதோன்றியது சீனர்கள் தினசரி 10 ஜப்பானிய ஒற்றர்களையாவதுபிடித்துக்கொண்டுபோய் மரண தண்டனை கொடுக்க முடிந்தது. ஒரு பக்கமாக ஜப்பானியப் படையும் டாங்கிகளும் விமானங்களும் சீனப்படைகள் மேல் அலைபோல் மோதிக்கொண்டிருந்தன. மற்றொரு பக்கம் ஜப்பானிய ஒற்றர்கள் சீனப்பட்டணங்களில் நாள் தவருமல் யாரையேனும் ஒரு சீனத் தலைவனையோ அல்லது அரசாங்க அதிகாரியையோ படுகொலை செய்து கொண்டிருந்தார்கள். அப்பொழுது ஜப்பானிய ஒற்றர்களின் கெடுபிடியான நடவடிக்கைகள் வளர்ந்து சீனப் பெருந்தளபதியாகிய சியாங்கே ஷேக்கிற்கே அது பெருத்த தலைவலியாகிவிட்டது. சாதாரண சீனனைப் பற்றிக் கேட்பானேன்? இதற்கு ஏதாவது வழிசெய்ய வேண்டுமென்று எண்ணிய சியாங்கே ஷேக் கோமிங்டான் கட்சியின் இரகசியக்கூட்டத்தை 'குலிங்' நகரத்தில் கூட்டி அதில் பேசும்போது ஒவ்வொரு ஜப்பானியனும் அந்நாட்டு அரசாங்கத்தின் ஒற்றன். ஒவ்வொரு ஜப்பானிய மாதும் வேசிகள் என்ற வாறு பேசினுர்.

'ஆனல் மிக்க கண்ணியமுள்ள ஒற்றர்களுக்கு மிகுந்த ஆதரவு கொடுக்கப்படுவது வழக்கம்' என்பது ஜப்பானியர் கொடுத்த விளக்கமாகும். அந்த ஒற்றர்களுக்குப் போதிய அதிகாரமும் கொடுக்கப்பட்டிருந்தது. இத்தகைய சிறந்த ஒற்றர்களுள் காவாசிமாவும் ஒருத்தி. 'ஜப்பானின் விசுவாசம்' என்று அன்புடனும் ஆதரவுடனும் ஜப்பானியர் அவளைக் கூப்பிடுவது வழக்கம். தூரக்கிழக்குப் பகுதியில் 'ஜப்பானின் விசுவாசத்தைப் பற்றி அறியாத அறிவாளி மிகக் குறைவு என்று சொல்லலாம். தங்களுடைய வலிமையுள்ள விரோதியும், ஜப்பானுக்கு எதிராகக் கலகம் செய்தவருமாகிய மஞ்சூரியத் தலைமை தளபதி மேஜர் ஜனரல் 'கேன்ஜி தோய்ஹாராவை' இந்த யோசிகா தான் தன்னுடைய அபார சாமர்த்தியத்தால் கைக்குள் போட்டுக்கொண்டு வெற்றியடைந்தாள்.

திந்த்லிங் என்ற விடத்தில் தால் காங்தேஹ் 'தாபூ என்ற மஞ்சூரியாவின் வருங்கால சக்ரவர்த்தியை யோசிகா சந்தித்தாள். சீனுவின் போலீஸார் காங்தேஹை கைது செய்ய விரும்பினர்கள். யோசிகாவுக்கு இது தெரிந்துபோய்விட்டது ஆதலால், கைது செய்யவேண்டிய வாரண்டுடன் சீனப்போலீஸார் காங்தேஹின் அரண்மனையின் தலைவாயிலில் நுழைந்துகொண்டிருக்கும் அதே சமயத்தில் திங்ஸிங்கிற்கு பத்து மைல் தூரத்தில் மோட்டாரில் வெளியேறிக்கொண்டிருந்தார். யோசிகா தானேமோட்டாரைச்செலுத்திக்

கொண்டிருந்தாள். இம்மாதிரியாகத் தன்னுயிரைக் காப்பாற்றிய சகோதரன் பெண்ணிடத்தில் காங்தேஹ் கொண்ட நன்றியறிதல் சொல்லத்தரமன்று. அவர் அவளைத் தன்னுடனேயே வைத்துக்கொண்டுவிட்டார்.

1932-ஆம் ஆண்டு ஜப்பானியர்கள் ஷாங்கையின் மேல் படையெடுத்தார்கள். யோசிகா அவர்களுக்கு மிகுந்த உதவி புரிந்தாள். அவள் மாறு வேடங் கொண்டு சீனவீரர்களுடைய பாசறைகளுக்குள் சென்று தளபதிகளுடன் மிக்க சுதந்திரமாக உரையாடுவாள். பலவிதமாக அவர்களுக்கு ஆசைகாட்டி ரகசியங்களைத் தெரிந்துகொண்டு விடுவாள். 19-வது சீனப்படை சியாங்கே ஷேக்கிடம் அதிருப்தி கொண்டிருக்கிறது; அவர்கள் வேறு கதி யில்லையே என்று சண்டை போடுகிறார்கள் என்ற செய்தியை ஷாங்கையிலிருந்த ஜப்பானிய தளபதிக்குயோசிகா அறிவித்த அன்றைய தினம் ஜப்பானிய சிப்பாய்களிடையே மகிழ்ச்சி கரை புரண்டோடியது. மறுநாள் ஜப்பானியர் 19-வது சீனப்படையை பணிய வைத்துக்கொண்டனர்.

இதே சமயத்தில், சீனாவின் கடற்படை தளபதி குறித்த ஓர் இடத்தில் ஜப்பானியக் கொடிக் கப்பலான 'இஜூமோ என்ற யுத்தக் கப்பலை வெடி வைத்துத் தகர்க்கப் போவதையும் யோசிகா கண்டு பிடித்துக் கொண்டாள். யோசிகா அனுப்பிய செய்தி மூலம் அந்த யுத்தக் கப்பல் தப்புவிக்கப்பட்டது. 1932 முதல் 1937 வரை சீனக் கடற்படை தளகர்த்தர்கள் 'இஜூமோ'வை எப்படியாவது தொலைத்துவிடவேண்டும் என்று முயன்று வந்தார்கள். ஆனால் யோசிகாவின் ஒற்றத் திறமை ஒவ்வொரு சமயத்திலும் இஜூமோவைக் காப்பாற்றியது. ஒவ்வொரு முறையும் தம் முயற்சி வீணாவதைக் கண்டு ஆத்திரமடைந்த சீன தளபதிகள் 'நம்முடைய அந்தரங்க நடவடிக்கைகளை அறிந்து விரோதிக்குச்சொல்வது யார்?'' என்பதைக் கண்டு பிடிக்க எண்ணி ஒற்றர்களை ஏற்படுத்தினார்கள். அவ்வொற்றர்களின் சலியாத முயற்சியால் யோசிகாவின் காரியம் தெரிந்து போயிற்று. சீனத் தளபதிகள் அவளைக் கொலைசெய்ய முடிவு செய்தாகள். கைத் துப்பாக்கியை மார்போடு மறைத்தபடி, உயிரையும் துரும்பாக மதிக்கும் லட்சக்கணக்கான சீன வாலிபர்கள் சமயம் கிடைத்ததும் யோசிகாவைத் தீர்த்து விடும் நோக்கத்துடன் தேடத் தலைப்பட்டார்கள். நான்கின் நகரத்தில் அப்படி ஒரு சந்தர்ப்பம் கிடைத்தபோது சுடவும் சுட்டார்கள். ஆனால் அவள் இறக்கவில்லை; காயத்துடன் தப்பிவிட்டாள். இந்தச் சம்பவத்தால் ஜப்பானியரின் உள்ளத்தில் யோசிகாவைப் பற்றிய கௌரவம் இன்னும் உயர்ந்தது. ஷாங்கையிலிருந்த ஜப்பானிய தளபதி

அவளிடம் கேட்காமல் எப்பகுதியிலும் தாக்குவதில்லை என்ற அளவுக்கு அவள் பெருமையடைந்துவிட்டாள்.

அடிக்கடி ஷாங்கையிலுள்ள மலைச்சாரல்களில் யோசிகா தன்னுடைய காதலிகள் பலருடன் ஆண் வேடத்தில் போட்டியில்லாதபடி உலாவி வந்தாள். நினைத்தால் ஆண் வேடத்தில் குழியில் புழுதியைக் கிளப்பிக் கொண்டு சவாரி செய்தபடி மலைச்சாரலில் அமைந்துள்ள சீன கிராமத்திற்கு போவாள். எப்பொழுதாவது சத்திரத்தில் தங்க நேர்ந்தால் அங்கு கிடைக்கக்கூடிய உணவு முழுவதையும் தானே விலை கொடுத்து வாங்கிக் கொண்டு தன் பரிவாரங்களுக்கெல்லாம் கொடுத்து மகிழ்வாள். மீதமுள்ளதை ஏழைகளுக்குக் கொடுத்துவிடுவாள். அங்குள்ள விடுதிகளின் சொந்தக்காரர்கள் — சீனராயினும்— ஜப்பானியராயினும் மிகவும் ஆவலோடு யோசிகாவின் வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருப்பார்கள். இம்மாதிரி பல முறைகளாலும் ஜனங்களைத் தன் வசப்படுத்தி அவள் காரியத்தைச் சாதித்து வந்தாள்.

ஒரு முறை அவள் ஒரு விடுதியில் தங்கியிருக்கும்போது எதிர்பாராத விதமாக ஒரு சீன தளபதியை சந்திக்க நேர்ந்தது. நல்ல வேளையாக அப்பொழுது அவள் தன் ரூபத்திலேயே இருந்தாள். அவளுடைய பேச்சு, நடந்துகொள்ளும் முறை, அழகு இவைகளால் பரவசப்பட்டுப் போன தளபதி அவளைத் தன் முகாமில் விருந்துண்ண அழைப்பனுப்பினன். யோசிகா மிகுந்த மகிழ்ச்சியோடு அழைப்பை ஏற்றுக்கொண்டுவிட்டாள். குறித்த காலத்தில் யோசிகா முகாமிற்குள் சென்றாள். வெகு நேரம் வேடிக்கையாகப் பேசிக்கொண்டிருந்தார்கள். கூடாரத்திற்குள் பேச்சு நடந்துகொண்டிருந்தது. பேச்சோடு பேச்சாக யோசிகா சாராயத்தை மிதமிஞ்சி யூட்டி தளபதியிடமிருந்து "ஜோஹோல்" என்ற இடத்தில் நடந்த சண்டையில் கைதாகிய மூவாயிரம் ஜப்பானிய வீரர்கள் அந்த முகாமில் தானிருக்கிறார்கள் என்பதைத் தெரிந்துகொண்டாள்.

சமயம் வாய்த்ததும் இச் செய்தியை ஷாங்காயிலிருந்த தன் நண்பராகிய ஜப்பானிய தளபதிக்கு அறிவித்தாள். இருவரும் சேர்ந்து அவர்களை விடுவிக்க வழியென்னவென்று யோசனை செய்ய ஆரம்பித்தனர்.

யோசிகா தான் சில பாரசூட் படையினருடன் இரவில் கைதி முகாமில் நுழைந்து அவர்களை விடுவிப்பதாகக் கூறினாள். ஜப்பானிய தளபதிக்கு இது மிகவும் ஆபத்தானது என்று தோன்றியதால் ஒப்புக்கொள்ள மறுத்துவிட்டார். ஆனால் அவளைத் தன்னுடைய உதவி யதிகாரியாக ஆக்கிக்கொண்டு சீன தளபதியிடம் அனுப்பினார். சீன தளபதியுடன் பேச்சு வார்த்தை நடத்த

யோசிகா ஒப்புக் கொள்ளும் நிபந்தனைக்குத்தானும் உடன்படுவதாகவும் கூறினார். ஆனால் தந்திரம் செய்துவிட்டாள். சீன தளபதியின் காதலி என்று அவள் அங்கு சென்றாள். நன்றாகக் குடித்துவிட்டு இருவரும் உலாவிவர வெளியே சென்றார்கள். ஒரு குறித்த இடத்திற்கு வந்தவுடன் ஜப்பானிய வீரர்கள் சீன தளபதியைக் கைது செய்துவிட்டார்கள். தளபதி கைதாகிவிட்ட செய்தி சீனப்படையில் கலவரமுண்டாக்கியது. இப்பொழுது ஜப்பானிய உதவி உத்தியோகஸ்தனைப் போல உடையணிந்து கொண்டு அவள் சீனர் பாசறைக்குப் போனாள். 3000 ஜப்பானியர்களையும் விடுதலை செய்துவிட்டால் தளபதியை விட்டுவிடுவதாகக் கூறி அனைவரையும் விடுதலைசெய்துகொண்டு வந்துவிட்டாள்.

ஆகையால் 1931 வருஷம் சீனர்களின் 'ஜேஹோல்' என்ற பகுதியை ஜப்பானியர் பிடித்துக் கொண்டதென்பது யோசிகாவின் ஆக்ரமிப்பையே குறிப்பிடுவதாகும். அவளே அன்றைய தினம் ஜேஹோல் அரசாங்க மாளிகையில் 'உதித்த சூரியனை, (ஜப்பானிய தேசியக் கொடி) ஏற்றிவைத்தாள். ஜப்பானியர் ஜேஹோல் என்ற பகுதியில் அடைந்த வெற்றி யோசிகாவினுடைய புத்திசாலித்தனத்தின் விளைவேயாகும். அவள் ஒரு குதிரைப் படையைத் திரட்டினாள். பல போர்களில் சீனப் படைகளை தோற்கடித்துமிருக்கிறாள்.

யுத்தம் முடிந்த பிறகு 'திந்த்லிங்' நகரில் அவள் ஒரு பொது விடுதியொன்றை ஏற்படுத்தினாள். இந்தப் பொது விடுதியை ஏற்படுத்திக்கொண்டதன் மூலம் அவள் கண்டுபிடித்த ரகசியங்களுக்குக் கணக்கேயில்லை. மனம் மயங்கிய பலதரப்பட்ட சீனரும் ஜப்பானியரும் விடுதித் தலைவியின் எழிலில் வசமிழந்து ரகசியங்களைத் தங்களை அறியாமலேயே கக்கிவிடுவார்கள்.

ஒரு நாள் 'வாங்சூலின்' என்ற சீனக் கோடீசுவரர் அந்த விடுதிக்கு வந்தார். அவர் திந்த்லிங் பட்டணத்தின் செல்வாக்கு நிறைந்த பிரமுகர். சீன வர்த்தக சங்கத்தின் தலைவனாகவுமிருந்தார். யோசிகா தன் கவர்ச்சி, சக்தி முழுவதையும் உபயோகித்து அவரைத் தன் சீடனாக்கிக் கொண்டுவிட்டாள். வாங்சூலின் அவளைத் தன் ஆயுள் காதலியாகவே மதிக்கத் தொடங்கினார். ஆனால் யோசிகா அவரைச் செய்தியறிந்துகொள்ளும் உயர்ந்த ஒரு கருவியாக மட்டுமே எண்ணினாள். சீன ஒற்றர்களுக்கு அவ்விருவர் பேரிலும் சந்தேகம் தோன்றியது. இதன் விளைவாக சீனப் புரட்சிக்காரர்கள் 1938-இல் வாங்சூலினைத் துப்பாக்கிக்கு பலியாக்கி விட்டனர்.

அவர்கள் யோசிகாவையும் கொன்றுவிட யத்தனித்தபோதிலும் அவள் மயிரிழையில் தப்பி

விட்டாள். ஆனால் எதுவரை இப்படி முடியும்? 1939-ஆம் வருஷம் ஜனவரி மாதம் முதல் தேதி பிறந்தது. யோசிகா வாங்சூலின்னுடைய மாளிகையின் முன்பு மோட்டாரில் வந்து இறங்கினாள். இறந்துபோன வாங்சூலின்னின் மனைவியாரிடம் துக்கம் கேட்வே வந்திருந்தாள். இறங்கியதும் பக்கத்தில் நின்றுகொண்டிருந்த நான்கு சீன வாலிபர்கள் அவள் மேல் கைத் துப்பாக்கியால் படபடவென்று சுட்டுத் தள்ளினர்கள். அந்த நால்வரும் உடனுக்குடன் கைது செய்யப்பட்டார்கள். அவர்களுடைய தலைகள் அவ்விடத்திலேயே துண்டிக்கப்பட்டு நிலத்தில் உருண்டன. என்ன நடந்து என்ன பயன்? யோசிகா பிழைக்கமுடியுமா? இரண்டு மாதம் வரை திந்த்லிங் ஆஸ்பத்திரியில் படுத்த படுக்கையாயிருந்து மார்ச்சு மாதம் 3-ந் தேதி இவ்வுலகத்திலிருந்து மறைந்தாள்.

—"சிராகி'

மாலா

கலை, இலக்கிய மாதப் பத்திரிகை.

விலை 6 அணா

பிரதி மாதம் முதல் வாரம் வெளிவருகிறது

சிறந்த கதைகளும், கட்டுரைகளும்,
சினிமா செய்திகளும், படங்களும் வெளிவருகின்றன

விவரங்களுக்கு :—

மாலா
சதர்ன் அவின்யூ
ஆள்வார்பேட்டை, மதராஸ்-18

ப்ரிய வ்ரதன்

●

பாகவத புராணத்தில் ஐந்தாவது ஸ்கந்தத்தின் ஆரம்பத்தில் ப்ரியவ்ரதன் என்னும் மன்னவனைப் பற்றிக் கூறப்படுகிறது.

ப்ரியவ்ரதன் அறிவு நிறைந்த ஞானியாக இருந்தபோதிலும் இல்லறத்தில் ஈடுபட்டு, அரசாட்சியில் முழு சிரத்தை காட்டியது ஸம்பந்தமாக பாகவதம் விரிவாக விளக்கம் கொடுத்திருக்கிறது.

ப்ரியவ்ரதன் மனுவின் புதல்வன். ஸ்வாயம்புவமனு தனக்குப்பின் ஆட்சிப் பொறுப்பை அவனிடம் ஒப்படைத்தான். அரசாட்சியில் ஈடுபட்டால்உலக ஸம்பந்தமான பல குறைபாடுகள் தன்னிடம் தோன்றிவிடும் என்று அவனுக்குத் தெரியும். தேஹத்தின் நிலையாமை, உலகத்தில் மக்கள் ஈடுபடும் விஷயங்களின் சாச்வதமற்ற தன்மை இவற்றை அவன் அறிந்திருந்தான். இந்த அறிவின் காரணமாக, அந்த மன்னவன் ஆட்சிப் பொறுப்பை ஏற்காமல் ஒதுங்கி விடுவானோ என்ற பயம் ப்ரஹ்ம தேவனுக்கு ஏற்பட்டது. எனவே அவன் பூமிக்கு இறங்கி வந்து, அம் மன்னவனுக்கு சில உபதேசங்கள் செய்து ஆட்சிப் பொறுப்பை அவன் ஏற்கும்படி செய்தான்.

இந்த்ரியங்களை வென்றவனுக்கு இல்லற வாழ்க்கை ஒரு கெடுதியையும் விளைக்காது என்று ப்ரஹ்ம தேவன் அம்மன்னவனுக்கு விளக்கினான்.

ப்ரஹ்ம தேவன் கூறுகிறான்.-

"சத்ருக்கள் க்ஷீணித்த பின்பு மன்னவனைப் போலவே ஞானியும் இஷ்டப்படி வெளியில் திரியலாம். எனவே நீ இந்த்ரியங்களை வென்றவனாயிருப்பதால் உலக விஷயங்களில் நீ ஈடுபடுவதால் உனக்கு ஒரு தீங்கும் நேரிடாது."

ப்ரியவ்ரதன் ப்ரஹ்ம தேவனுடைய சொல்லுக்கு இணங்கி பர்ஹிஷ்மதி என்பவளை மணந்து மூன்று பிள்ளைகளைப் பெற்றான். அந்த மூவர் இந்த்ரியங்களை வென்று பரமஹம்ஸர்களின் ஆச்ரமத்தைக் கைப்பற்றினார்கள். மற்றுமொருவளை அந்த மன்னவன் மணந்து இன்னும் மூன்று பிள்ளைகளைப்பெற்றான். இந்த மூவரும் மன்வந்தராதிபதிகளானார்கள்.

ப்ரியவ்ரதன் மன்னவனாயிருந்த காலத்தில் செய்த முக்கியமான காரியங்கள் பாகவதத்தில் விரிவாக விளக்கப்படுகின்றன.

"சூர்யன் மேரு பர்வதத்தைச் சுற்றிப் பூமண்டலத்தைப் பாதியே விளங்கச் செய்து வந்ததனால், மற்ற பாதி சூர்யப்ரகாசமின்றியே இருந்து வந்தது. பூமண்டலம் முழுவதையும் ப்ரகாசமாக்கவேண்டுமென்று அம் மன்னவன் நினைத்தான்.

எனவே சூர்யனுக்கு நிகரான வேகமுடையதும் அவனைப்போல் ப்ரகாசமானதுமான தேரில் ஏறி பூமண்டலத்தைச் சுற்றி வந்தான். அவ்வாறு அம்மன்னவன் சுற்றும்பொழுது அவனுடைய ரதத்தின் சக்கரக்கட்டு ஊன்றின விடங்களில், அகழிகள் போல் ஆழ்ந்த ஏழு பள்ளங்கள் ஏற்பட்டன. அவையே ஏழு ஸமுத்ரங்களாயின," என்று வேடிக்கையாகக் கூறிக் கொண்டு போகிறது பாகவதம்.

பூமி தட்டையாக இருந்த தென்றும், அதன் நடுவில் மேரு இருந்ததென்றும். அதைச் சுற்றி சூரியன் நகர்ந்து வந்ததாகவும் நம்பிக்கையிருந்து வந்ததற்கு இது சான்று. நவீன காலப் புரட்சியாளர்கள் இதை வைத்துக்கொண்டு பாகவதத்தை கேலி செய்யவேண்டிய அவசியமில்லை. நவீன காலத்தில் பூமி உருண்டையாய் இருப்பதாகவும், சூரியனைச்சுற்றி பூமி வருவதாகவும், பூமி தன்னைத்தானே, சுற்றிவருவதாகவும் நம்பிக்கை இருந்து வருகிறது. இது நம்பிக்கை தான். சரியாக இருக்கலாம். ஆனால் நியூடன் சொன்னதனால் எல்லோரும் நம்பிய நம்பிக்கை என்று தானே இதையும் சொல்லவேண்டும்? யார் நேரில் சென்று பார்த்தார்கள்? வெறும் விஞ்ஞான அனுமானம் தானே!

விஞ்ஞானத்தில் முன்னேற்றம் ஏற்பட்டு வந்தபோதிலும், மனிதனிடம் மனிதத்தன்மை அறவே அழிந்துவிட்ட இந்தக் காலத்து ஜனங்கள், பாகவத பாத்திரங்களை கேலி செய்ய வேண்டியதில்லை. தர்மத்திற்கு அப்போதெல்லாம் கௌரவம் இருந்தது. "டிப்ளோமஸி" (Diplomacy) என்ற பெயரால் அயோக்கியத்தனம் நடந்து வரும் இக்காலத்து மானிடர்கள் எதைக் குறித்துக் கௌரவம் அடைய முடியும்?

ப்ரியவ்ரதனுடைய தேர்ச் சக்கரத்தினால் ஏழு சமுத்திரங்கள் உண்டாக்கப்பட்டன என்று நம்பிய [அல்லது கற்பனைச்செல்வத்தினால் வேடிக்கையாகக் கூறத்தெரிந்த] பாகவத ஆசிரியருக்கு நமது வணக்கங்கள் உரித்தானவைதான். ஏனென்றால் அவர் விளக்கியிருக்கும் தத்துவங்கள் சாச்வதமானவை. வேடிக்கையான கதைகளின் வாயிலாக அவரது போதனைகள் என்றும் அழியாமல் நம்மிடையே நிலைத்து நிற்கும்.

"ஸ்ரீரா"

ASOKA SCENTED BETELNUT POWDER

சம்பத்து தான யக்ஞம்

உடலுழைப்பில்லாமல் செல்வம் உண்டாவதில்லை. பணக்காரரிடம் சேர்ந்திருக்கும் செல்வம் ஏழைகளின் உடல் உழைப்பின் பலன் தான்.

தவிர ஏழைகள் ஒத்துழைக்காமல் சீமான்கள் செல்வம் சம்பாதிக்க முடியாது. தன்னிடம் சேர்த்து வைக்கவும் முடியாது.

அதை உபயோகிக்கவோ, அனுபவிக்கவோ இயலாது.

நியாய நோக்குடன் பார்த்தால், தேவைக்கு மேலாக செல்வம் வைத்துக்கொள்ளவும், சம்பாதிக்கவும் ஒருவருக்கும் அதிகாரம் இல்லை என்று தீர்ப்பு கூறவேண்டும். தேவையின் அளவு என்ன? என்ற கேள்வி எழுகிறது. மனிதன் என்ற முறையில் அதிக வித்தியாசம் ஏற்படக்கூடாது.

நோயாளி — திடகாத்திரன், குழந்தை — வாலிபன், மேலும் தங்கள் தங்கள் மாறுபட்ட பழக்கத்தின் காரணமாகவும் கொஞ்சம் வித்தியாஸம் ஏற்படலாம். அதை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். நியாய நோக்குடன் பார்த்தால் தேவைகளைப்பற்றி நிர்ணயிப்பது கஷ்டமில்லை. தன் சுயநலமும், உலக மோகமும், பண ஆசையும் ஆகிய தோஷங்கள் தலைவிரித்தாடும் போதுதான் இப்பிரச்னை சிக்கலாகிறது. தேவை என்பது பற்றி ஆழ்ந்து பார்க்கத் தேவையில்லை.

இன்றைய சமூக பொருளாதார ஏற்ற தாழ்வு கொடுமையானது. நியாயமற்றது என்பதுபோதும். இதை மாற்ற வேண்டும். இந்தக் காலத்தின் கோரிக்கையைத் தள்ளிப் போட முடியாது. இந்த வேற்றுமை ஒவ்வொரு இடத்திலும் இருக்கிறது, பல ஆயிர வருஷங்களாக இருக்கிறது.

சாதுக்களும், உத்தம சீடர்களும், எல்லா மதத்த வரும் எப்போதும் உபதேசம் செய்தது இதுவே: ஏழை களைக் கவனி, தன்னிடம் அதிகமாய் உள்ளதை பிறருக்குக் கொடு. தானம், தர்மம், பிச்சை என்ற எவ்வளவோ முறை யிருந்தும் ஏழ்மை பிரச்னை தீர்ந்தபாடில்லை.

மேற்கூறின வழிகளால் இது தீரும் என்று தோன்றவு மில்லை. இப்போது சில காலமாக உலகத்தில் கருணை என்ற இடத்தில் சமத்துவம் என்ற கருத்து உலவி வரு கிறது. பரிபூர்ண சமத்துவம் ஏற்படுவது கஷ்டமாயினும், தற்போது உள்ள ஏற்றத் தாழ்வைப் பொறுத்துக்கொள் வது முடியுமென்று தோன்றவில்லை. இவ்வேற்றுமை எப்படிப் போகும்? சில இடங்களில் மக்கள் பலாத்கார முறையைக் கையாண்டனர். அதனால் ஏற்பட்ட தீமை களை இதுவரை தீர்க்க முடியவில்லை. ஏற்றத் தாழ்வைப் போக்க சட்டமும் சிறிது உதவுகிறது. சில அம்சங்களில் நம் நாட்டிலும் இம்மாதிரி சட்டங்கள் அமுலில் இருக் கின்றன.

ஆனால் சட்டங்கள் மூலம் மனிதன் இயற்கை குணங் களும், நல்ல எண்ணமும் வளரமுடியாது. நாம் பிரத்தியட் சமாக ஆராய்ந்த வகையிலும், இந்தியப் பரம்பரை எவ் வாறு இருக்கிறது என்று நோக்குங்கால் இங்கு ஏற்றத் தாழ்வு பிரச்னையை வெகுவாக தீர்க்க வல்லது மகாத் மாஜி நமக்கு அளித்த அஹிம்சை கருத்து முறை தான் என்று படுகிறது. இதில் பணக்காரர்களின் பூரண ஒத் துழைப்பு கிடைக்கவேண்டும். அவர்கள் மனம் மாற வேண்டும்.

இதன் பிரபாவம் சட்டம் வகுக்கும் சக்தியில் பிரதி பலிக்கும்; நம் எல்லா செயல் துறையிலும், சமூகத்திலும் நற்குணங்கள் வளரும். அரசியல் சுதந்திரப் பிரச்னை பெரிய அளவுக்கு அஹிம்சா மார்க்கத்தில் தீர்ந்தபடியே பொரு

ளர்தார—சமூக சமத்துவப் பிரச்னையும் இந்தியாவில் அஹிம்சா முறையில் தீரும் என்று நாம் நம்பவேண்டும்.

நாடே குடும்பம்

ஐந்து பேர்கொண்ட ஓர் குடும்பம். அவர்கள் சோற்றுக்கு நான்குசேர் உணவு அவசியம் என்று இருக்கட்டும். நான்கு சேர் உணவு கிடைத்தால் எல்லாரும் வயிறு நிறைய உண்ணலாம். மூன்று சேர் மட்டும் கிடைத்தால் என்ன செய்வர்! ஓரிருவரை பட்டினிபோட்டு மற்றவர்கள் வயிருற உண்பார்களா? குடும்பத்தில் இப்படி நடக்காது.

தேவைக்கும் குறைவாகக் கிடைத்தால் எல்லோரும் கொஞ்சம் குறைவாக ஏற்று சமாளிப்பார்கள். குழந்தைகளையும், பலஹீனமானவர்களையும் முதலில் கவனிப்பார்கள். சமூக நோக்கத்தில்இதே நியாயம் சமூகத்தில் உள்ள மக்கள் அனைவருக்கும் பொருந்தவேண்டும்.

அரசு செலுத்துபவரும், சமூகமும் நாடு ஒரு குடும்பம் என்ற நோக்கம் கொண்டுள்ளது. நாட்டில் செல்வம் அதிகமிருந்தால் அதை அனைவரும் முழுவதும் அனுபவிக்கட்டும்; செல்வம் குறைவு என்ற நிலையில் ஒவ்வொருவரும் சிறிது கஷ்டத்தைப் பொறுக்கவும், சிறிது தியாகம் செய்யவும் தயாராக வேண்டும். தர்மமும் இதையே கற்பிக்கிறது. "நான்—பிறர் என்ற பேதம் தவறு,

அனைவரிடமும் ஆத்மா சமமே; கடவுள் அனைவரையும் படைத்தார், நாம் அனைவரும் சகோதர–சகோதரிகள் சரிநிகர் சமமே" என்ற வேதாந்த தத்துவம் நம் வாயில் குடிகொண்டிருக்கிறது. இவ்வுண்மை கருத்துக்களை எப்போதும் நம் வாழ்க்கை நடைமுறையில் இணைக்க முயற்சி செய்யவேண்டும்.

"தானமும்," சம்பத்துக்களின் உடமையும்

இந்த யக்ஞங்களில் வரும் "தானம்" என்ற சொல்லின் உண்மைப் பொருள் அறிய வேண்டியது அவசியம்.

ஏதோ ஒருவன் மற்றவனுக்கு இரங்கி ஏதாவது கொடுப்பதும், தன் பரலோக நன்மைக்காக ஏதாவது செலவு செய்வதும் இதுவரை "தானம்" என்ற சொல்லின் பொருளாக கருதப்பட்டு வந்தது, "தானம்" என்ருல் சரியான பங்கீடு-"நியாயமான விநியோகம்" என்று ஸ்ரீ சங்கராச்சாரியார் பொருள்படுத்தியிருக்கிருர் என்று விநோபா சொல்லுகிருர். இப்பொர்ருளுக்கு ஏற்றபடியே "தானம்" என்ற சொல் இங்கு வழங்கப்படுகிறது.

தானம் கொடுப்பவன் எப்பொருளை தானம் செய்தாலும் அப்பொருள் கொடையாளரின் உடமை என்றும் அதை அவன் தன் வசம் வைத்துக்கொள்ள உரிமையுடையவன் என்றும் சாதாரண தானம் என்ற வார்த்தையில் நாம் ஒப்புக்கொண்டிருந்தோம். ஆனல் பூமிதான யக்ஞத்தில் இக்கருத்து மாறுபட்டது; தன் தேவைக்கு அதிகமான நிலம் தன் வசம் வைத்துக்கொள்ள ஒருவனுக்கு உரிமை இல்லை என்று ஆயிற்று. பல காரணங்களாக நம்மிடம் நிலம் வந்துவிட்டது. இதுவரை நம் வசம் அதை வைத்திருந்த தவறைத் திருத்த வேண்டும் என்று ஆயிற்று. மறுபக்கம் பார்த்தால் இன்று நிலம் வாங்கிக் கொள்ளும் நிலமற்ற ஏழை தன் ஏழ்மையின் காரணமாக, தனக்கு உரிமையில்லாத ஒரு பொருளை, மற்றவர்கள் தயவின் உருவாகப் பெறுகிறேம் என்று நினைக்காமல் இந்த நிலத்தை அடைவது என் உரிமை என்று அறிந்து அதை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்றும் ஏற்படுகிறது.

செல்வம் எப்படி உண்டாகிறது?

செல்வம் எப்படி வருகிறது என்று இங்கு சிறிது ஆராய்வோம். ரூபாய், நோட், தங்கம், வெள்ளி முதலியன செல்வம் என நினைப்பது தவறு. இவை செல்வத்தின் அளவுக்கு ஏற்பட்ட சாதனங்களே. எந்த விதத்திலாவது மனிதனுக்கு உபயோகப்படக்கூடிய பொருள்களே செல்வமாகும். சில பொருள்கள் மனிதன் உயிர்வாழ இன்றியமை

யாதவை, மற்றும் சில சுகத்திற்கும், வசதிக்கும் தேவைப் படுகின்றன.

உணவு, உடை, வீடு ஆகிய அடிப்படைத் தேவைப் பொருள்கள் இல்லாமல் மனிதன் வாழமுடியாது. இதைத் தவிர மற்றும் பல பொருள்கள் இல்லாமல்கூட மனிதன் சமாளித்துக்கொள்ளலாம். செல்வம் என்ற இப் பொருள்கள் எப்படி உண்டாகின்றன? இவை தாஞகவே உற்பத்தியாவதில்லை, ஆகாயத்திலிருந்து கொட்டுவதும் இல்லை. பிறக்கும் போது யாரும் கொண்டுவருவதும் இல்லை. அதற்கு மாருக பிறக்கும்போதே சில தேவைகள் தான் ஏற்பட்டு விடுகின்றன. இத்தேவைகளைப் பூர்த்தி செய்ய வாழ்நாள் முழுவதும் பூசலாகவே அமைகிறது.

இயற்கைச் செல்வங்களில் மனிதன் உடலால் உழைக் கிருன். அப்பொழுதுதான் உபயோகமான இப்பொருள் கள் கிடைக்கின்றன. எனவே செல்வத்தின் முக்கிய சாத னங்கள் இரண்டு; இயற்கை வளம், மக்கள் உடல் உழைப்பு. யந்திரங்களில் சில பொருள்கள் ஆவதுபோல் தோன்று கிறது.

உழைப்பாளி—அறிவாளி—மேலோன் யார்?

வாழ்க்கை நடத்தவோ, பணம் சம்பாதிக்கவோ பல தொழில்கள் நடக்கின்றன. இவைகளைச் சாதாரணமாக இரு கூருக்கலாம்; உடல்உழைப்பு தேவைப்படும் தொழில் அறிவு உபயோகிக்கும் தொழில். முதலாவது உழைப்பாளி என்றும் இரண்டாவது அறிவாளி என்றும் சொல்லலாம். ஆட்சி நடத்தும் அமைச்சரும், அரசாங்க நிர்வாகத்தில் பெரிய பதவியிலிருந்து சில்லறை குமாஸ்தாவரையில் இருப்பவரும், நீதிபதி நியாயவாதி, மருத்துவர், ஆசிரியர், வியாபாரி ஆகிய அனைவரும் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள “அறிவுத்தொழில்” செய்தே வாழ்கிருர்கள்.

உடல்உழைப்பின் மூலமே தன்னை நிர்வகிக்கும் குடியா னவர், தொழிலாளி, தச்சர், கொத்தர், கருமான், சக்கிலி

தோட்டி ஆகியவர் மற்ற பகுதியைச் சேர்ந்தவராவர். சமூக நடவடிக்கைகளுக்கு உழைப்பாளி அறிவாளி இவ்விரு மக்களின் உழைப்புத் தொழிலும், அறிவுத் தொழிலும் தேவை. ஆனல் சமூக நோக்கத்தில் இவ்விரு தொழில்களின் மதிப்பில் அதிக வித்தியாசம் இருக்கிறது. உடல் உழைப்பைப் போலவேதான் அறிவு உழைப்பு என்றும், அறிவு உழைப்பின் பெருமை உடல் உழைப்பைவிட குறைந்ததாகாது, அதிகமாகவே மதிப்பிடவேண்டும் என்றும் வாதாடப்படுகிறது. ஆனல் சிறிது ஆழ்ந்து யோசிப்போமானல் சமூகக் கருத்தும் இன்றைய நிலேயும் வெவ்வேருக இருக்கும். உடல் உழைப்பவர்கள் திடீரென்று தன் தொழிலே நிறுத்திவிட நிச்சயித்தால் என்ன பலனாகும் என்று கற்பனை செய்து பாருங்கள். மனித வாழ்க்கைக்கு அத்யாவசியமான பொருள்கள் கூட உற்பத்தியாகாது; சமூகம் உயிர்வாழ முடியாது. இதற்கு மாருக, அறிவால் உழைப்பவர்கள் தங்கள் தொழிலேவிட்டு விடுவாரானல் சமூகத்தில் ஒழுங்கற்ற முறை சிறிது ஏற்படும். சமூகம் சிறக்காது.

அறிவாளிகள் வாழ்வும் உழைப்பாளிகளின் தொழிலே நம்பியே இருக்கிறது. எனவே சமூகம் நிலேத்திருக்க உழைப்பாளிகள் எவ்வளவு அவசியம் என்று கற்பனை செய்யலாம். அப்படியிருந்தும், தொழிலாளிகளின் ஊதியம், வரும்படி குறைவாகவும், சமூகத்தில் அவர்களுக்கு மதிப்பு இல்லாமலும், மிக கஷ்டப்பட்டு தான் வாழ்க்கை நடத்தவேண்டியிருப்பதும் தெய்வ சாபம்! குழந்தைகளுக்கு படிப்பு வசதியோ, நோய் வந்தால் மருத்துவ வசதியோ, ஓய்வு வேளேக்கு கலா நிகழ்ச்சியோ என்பதெல்லாம் இவர்களுக்கு வெகு தூரம், இதற்கு நேர்மாருக அறிவுத் துறையில் உழைப்பவன் ஊதியம் அதிகம்; சமூகத்தில் பெருமதிப்பு, சுகவாழ்விற்கு வேண்டியதெல்லாம் கிடைக்கிறது. இந்த முறையில் தவறு இருப்பதாக

இன்று சமூகத்திற்குத் தோன்றவில்லை. சட்டமும் இந்நிலையை ஆமோதிக்கிறது. அப்படி யிருப்பினும் இது நியாயமா என்ற பிரச்னை தீர்ந்தபாடில்லை.

பணத்தாசை குறையவேண்டும்

ஏழைகளுக்கு உதவ வேண்டியது உண்மை. அவர்களுக்கு உதவவே இந்த யக்ஞங்கள். அவர்களிடமிருந்தும் கொஞ்சமாவது தானம் கோரப்படுகிறது என்றால் அவர்களிடமும் பணத்தாசை குறையவேண்டும் என்பதற்கே. இன்று நம் பொருளாதாரத்தில் அடிப்படைக் குறையை ஏழைகளும் உணரவில்லை. அவர்களுக்குப் பணக்காரர் ஆக வாய்ப்புக் கிடைத்தால் அவர்கள் பலனடைய விரும்புவார்கள். பணக்காரனோ ஏழையோ, மத்யதர வகுப்பினனோ, யாராய் இருந்தாலும் சரி, அனைவருக்கும் பணக்காரன் ஆகவேண்டும் என்ற ஆசைதான், பணக்காரனில்லாமல் பணக்காரர்களைக் குறை கூறுபவரும் தான் பணக்காரனாகவேண்டும் என்றே விரும்புகிறான்,

எங்கு பார்த்தாலும் பணத்திற்காகவே ஆட்டபாட்டம். தொழிற்சாலைகளில் முதலாளிகளுக்கும் தொழிலாளிகளுக்கும் எப்போதும் போராட்டம். ஏழைகள், உழைப்பாளிகள் நிலையை சீராக்கி அவர்கள் வருவாயைப் பெருக்குவது அவசியமே, ஆனால் அவர்களுடைய நோக்கம் தன் சீர்திருத்தத்தைவிட அதிகப் பணம் சம்பாதிப்பது என்ற வழியிலேயே இருந்து வருகிறது. நாட்டில் நமமைவிட வேறு பல ஏழைகள் இருக்கிறார்களென்றும், இந்த தொழிற்சாலைகளின் காரணமாகவே மற்றவர்களிடம் வேலையில்லாத் திண்டாட்டம் பெருகுகிறது என்றும் அவர்கள் எண்ணுவதில்லை.

முதலாளிகளைப் போலவே தொழிலாளிகளும் தன் தொழிற்சாலையில் அதிக லாபத்தை வரவேற்கிறார்கள். ஏனெனில், அந்த லாபத்தில் அவர்களுக்கும் கொஞ்சம்

பங்கு கிடைத்து விடுகிறது. இவ்வாறு, பொருள்களை வாங்கி உபயோகிக்கும் யேழையின் நலனைக் கருதாது லாப நோக்கமே தொழிற்சாலையில் காணப்படுகிறது. சமூகத்திலே எல்லா வகுப்பு மக்களிடமும் பணம் சம்பாதிக்க வேண்டும் என்ற ஆசையைக் கட்டுப்படுத்தவேண்டும். இவ்வுண்மையை அறிந்து ஒவ்வொருவரிடமும் தியாக எண்ணம் வளரவேண்டும். இந்த யக்ஞகங்கள் இதற்கு உதவும். நல்லமுறையில் உணர்ந்து, மன மாறுதல் ஏற்பட்டு, இச் சூழ்நிலை பரவுமானல் பணக்காரர்களும் இதிலிருந்து தள்ளி நிற்க முடியாது.

[மேற்கூறிய கொள்கைகளை மக்களிடையே மிகத் தீவிரமாகப் பரப்பிக்கொண்டிருக்கிறார். விநோபாஜி தங்கள் செல்வத்தில் ஒரு பங்கை ஏழைகளுக்காக ஒதுக்கி வைப்பது பணக்காரர்களின் புனிதமான கடமை என்று வற்புறுத்துகிறார். செல்வந்தர்கள் அனைவரிடத்திலும் சென்று "உங்கள் சொத்தில் ஆறில் ஒரு பங்கை ஏழை மக்களுக்காகத் தானம் செய்யுங்கள்" என்று கோருகிறார். வங்காளத்திற்கும் பீகாருக்கும் அவர் சமீபத்தில் சென்றபோது அநேக பணக்காரர்களிடம் "என்னை உங்கள் குடும்பத்தில் ஒரு அங்கத்தினராகச் சேர்த்துக்கொண்டு ஒரு சமபங்கை எனக்கு தரித்திர நாராயணன் சார்பாக அளியுங்கள்" என்று கேட்டுக் கொண்டார். இந்தக் கோரிக்கைக்கு அநேகரும் இணங்கி தங்கள் சொத்தில் ஒரு பங்குக்குத் தானபத்திரத்தை யளித்து விட்டார்கள்.

இப்படி சம்பத்தை ஏழை மக்களுக்கு உதவுவதற்காக திரட்டுவதுதான் சம்பத்து தானம் என்ற விநோபாஜியின் இயக்கம்.

இந்த இயக்கத்தைப் பற்றி தஞ்சாவூர் சர்வோதயப் பிரசுரத்தார் "சம்பத்து தான யக்ஞம்" என்ற பெயரில் ஒரு சிறு புத்தகம் வெளியிட்டுள்ளார்கள். இதிலுள்ள சில பகுதிகளைத் தான் இக்கட்டுரையில் திரட்டப்பட்டிருக்கிறது. சம்பத்து தானத்தின் பொருளாதாரத் தத்துவம் அதன் அரசியல் முக்கியத்துவம் நம் வேதாந்தங்களில் அதற்குக் காணும் அடிப்படை முதலிய சுவையான அம்சங்கள் இந்தப் புத்தகத்தில் விவரிக்கப்பட்டிருக்கிறது. இதன் விலை அணு நான்கு].



நீ..........

●

விழியும் ஒளியும் நீ
விருப்பும் வெறுப்பும் நீ
அழியும் பொருளல் லால்
அறிவும் தெளிவும் நீ.
கவிதைத் தேனும் நீ
கருத்தின் வித்தும் நீ
புவியின் இன்பம் நீ
பொறுமைக் கடலும் நீ.
கட்டிக் கரும்பும் நீ
கனியும் சுவையும் நீ
சுட்டித் தனம் செய்யும்
சுந்தர ரூபம் நீ.
விண்ணில் தவழ்ந் தோடும்
முழுவெண் மதியும் நீ
கண்ணில் நின்றாடும்
காதல் மயிலும் நீ.
எண்ணும் எழுத்தும் நீ
இரவும் பகலும் நீ
பண்ணும் சுதியும் நீ
பாரில் எங்கும் நீ.
உறக்கங் கொள்ளாமல்
உனையே நினைந் திட்டேன்
இரக்கங் கொள்ளாயோ
இன் சொல் சொல்லாயோ.

அங்கமங்கலம் குப்பு

கீரபண்டரிபுரம்

ஆந்திர மாகாணத்தின் கடற்கரை யோரமாக உள்ள ஒரு வெகு புராதன நகரமாகும் மசூலிப்பட்டினம். இந்தியாவிலும் வெளி நாடுகளிலும் மிகவும் புகழ்பெற்ற பல வக்கீல்கள், டாக்டர்கள், கலா நிபுணர்கள் இந்த நகரத்தில் தோன்றியவர்களாகும்.

சமீபத்தில் ஒரு பக்தர் இங்கு தோன்றி பாண்டுரங்கருக்காக ஒரு ஆலயத்தைக் கட்டிவைத்துள்ளார். இந்த பக்தன் மிகவும் விநயமானவர். பாண்டுரங்கனை வழிபடுவதே இவரது வாழ்க்கையின் முக்கிய குறிக்கோள்.

இந்த பக்தரின் பெயர் நரசிம்மர். இந்த பொற்கொல்லர் வகுப்பைச் சேர்ந்தவர். விசாகப் பட்டிணம் ஜில்லாவில் ஒரு சிறு கிராமத்தைச் சேர்ந்தவர்களும் ஆழ்ந்த தெய்வபக்தி கொண்டவர்களுமான கங்காதரத்திற்கும் ராமம்மா என்பவருக்கும் பிறந்தவர்.

இளம் பிராயத்திலேயே தெய்வபக்தி நிறைந்தவராய்க் காணப்பட்டார் நரசிம்மம். வாலிபப் பருவத்தில் சூரம்மா என்பவளை மணந்துகொண்டார். இவரது பதினெட்டாவது வயதில் இவர் கடுமை நோயுற்று அந்த நோய் குணமாவதற்குத் திருப்பதிக்குச் செல்வதாக வேண்டிக்கொண்டார். நோய் குணமானதும் திருப்பதிக்கு புறப்பட்டு பெஜவாடவிற்குச் சென்று இரண்டு தினங்கள் தங்கினார். புனிதமான கிருஷ்ணா நதியில் நீராடி திருப்பதிக்குச் செல்லலாமென்று நினைத்து பெஜவாடா வந்தடைந்த நரசிம்மனுக்குத் தன் பெற்றோர்களின் ஞாபகம் வரவே மசூலிப்பட்டினத்திற்குச் சென்றுவிட்டான். திருப்பதிக்குச் செல்லவேண்டிய கடமைப் பற்றி மறந்துவிட்டார். மசூலிப்பட்டினத்தில் ஒரு வியாபாரத்தைத் தொடங்கி பெருத்த செல்வந்தரானார். ஓரிரவில் கனவில் பாண்டுரங்கர் தோன்றி தனக்கு ஓர் ஆலயம் கட்டவேண்டுமென்று நரசிம்மனுக்குக் கட்டளை யிட்டார். நரசிம்மன் ஒரு கணம்கூட வீணாக்காமல் இந்தத் திருப்பணியில் ஈடுபட்டார். அவருடைய தீவிர முயற்சியின் பயனாக ஆந்திர மாகாணத்திலேயே மிகவும் அழகான ஒரு ஆலயம் மசூலிப்பட்டினத்தில் நிர்மாணிக்கப்பட்டது.

ஆந்திர மாகாணத்திலுள்ள மற்ற அநேக ஆலயங்களைவிட நரசிம்மன் நிர்மாணித்த ஆலயம் தனிச் சிறப்பும் புகழும் பெற்றுள்ளது. இந்த ஆலயம் இருக்குமிடம் கீரபண்டரிபுரம் என்று வழங்கி வருகிறது.

ஆந்திர மாகாணத்திலுள்ள அநேக பக்தர்கள் வெகு காலமாக இந்த ஆலயத்திலுள்ள பாண்டுரங்கனை வழிபட்டு வந்திருக்கிறார்கள்.

மசூலிப்பட்டினத்தின் ஒரு மூலையில் இந்த ஆலயமிருந்தாலும் அநேக பக்தர்கள் தினந்தோறும் பாண்டுரங்கனை வந்து தரிசிக்கின்றனர். நகரத்தின் சந்தடியினின்று தொலைவிலிருக்கும் இந்த கம்பீரமும், அழகும் வாய்ந்த ஆலயம் இயற்கை அழகும் நிறையப் பெற்றிருப்பதால் யாத்திரிகர்களுக்கும் பக்தர்களுக்கும் இந்த பாண்டுரங்கர் சந்நிதி மிகவும் மகிழ்ச்சியையளிக்கிறது. வருஷோற்சவத்தின் போது லட்சக்கணக்கான பக்தகோடிகள் பாண்டுரங்கனின் தரிசனத்திற்காக வருகிறார்கள்.

பாரத நாட்டிலேயே மிகவும் தூய்மையும் துப்புரவுமான ஆலயம் ஸ்ரீபண்டரிபுரநாதர் சந்நிதி தான் என்பது அங்கு செல்லும் பக்தர்களுக்குப் புலப்படும் உண்மையாகும்.

—*South Rail News*



எப்போதும் உற்சாகம் அளிப்பது
அசோகா சுகந்த பாக்குத்தூள்



க்ஷேத்ரக்ஞர்

இவர் த்ரிலிங்க பிராஹ்மணர். இவரது ஊர் முவ்வபுரி. தெலுங்கு பாஷையில் சிறந்த ஞானம் உடையவர். ஸங்கீத ஸாஹித்ய ஞானம் பொருந்திய பெரிய பண்டிதர். இவருடைய பால்ய வயதில் ஒரு மகாயோகியின் மூலம் கோபால மூலமந்திரம் இவருக்கு உபதேசமாகி முவ்வபுரியில் விளங்கிய கிருஷ்ணனுடைய ஆலயத்தில் இவர் வெகு காலம் பக்தியுடன் மந்திர ஜபம் செய்து கொண்டிருக்கையில் சிருங்கார ரஸத்திற்கு அதி தேவதையாகிய கண்ணன் தரிசனமளித்து அனுக்ரஹிக்க, உடனேயே இவர் "ஸ்ரீ பதி ஸுது பாரிகிநே நோபலேக நிறு வேடிதே கோபாலா முவ்வ கோபாலா" என்று இயலிசையாகப் பதங்களை இயற்ற ஆரம்பித்து விட்டனராம்.

இவருடைய பதங்களுக்கு ஈடாக, சிருங்கார ரஸம் ததும்பும் கைசிகி ரீதியிலோ, இனிய பதங்கள் நிரம்பியிருப்பதிலோ, நாயகீ நாயக லக்ஷணங்கள் தப்பாமல் அர்த்த புஷ்டியுடனும் அந்தந்த ஸந்தர்ப்பங்களுக்குரிய ராகங்களுடனும், தாதுவுடனும் விளங்குவதிலோ, இவருக்கு முன்போ, பிற்காலத்திலோ பதங்கள் இயற்றக்கூடியவர்கள் தோன்றியதில்லையென்று எள்ளளவும் ஸந்தேஹமின்றிக் கூறலாம். இவருடைய பதங்களை சப்தார்த்தங்களை நன்கறிந்துகொண்டு, ரஸாநுபவத்துடன் விளம்ப (சௌக) காலத்தில் பாடினால் தான் அவை ருசிக்கும். தாதுவை மாத்திரம் எழுதிப் பார்த்தால், வந்ததே திரும்பத் திரும்ப வருவதுபோலிருக்கும். இப்படி வருவதே பதங்களின் ஸாஹித்ய மரபு. தாதுவில் ஒரு முறை வந்தது திரும்ப வராமலிருப்பது கீர்த்தனங்களின் மரபு. க்ஷேத்ரக்ஞர் மதுரை, தஞ்சாவூர், கோல்கொண்டா, ஆகிய ஸமஸ்தான மன்னர்களின் ஸபையில் அநேக பதங்களை இயற்றினர் என்பதற்கு அவர் தேசீய தேவகாந்தாரி ராகத்தில் பாடியுள்ள "வேடுகதோ நடுசுகொந்ந விடராயடே" என்ற பதத்தில் போதிய சான்று உளது. இதைத் தவிர, தஞ்சாவூர் மன்னராகிய விஜயராகவ பூபாலரின் வேண்டுகோளின்படி அம்மன்னரின் முத்திரையுடன் பஞ்சரத்தினம் எனப்பட்ட ஐந்து பதங்களை க்ஷேத்ரய்யா இயற்றியுள்ளார்.

இவருடைய பதங்களில் பெரும்பான்மையானவை 'முவ்வகோபால' என்ற முத்திரையுடனேயே விளங்குகின்றன. சில பதங்கள் "கஞ்சி வரதுடு" "செவ்வந்தி லிங்கடு" என்றி

ருந்தபோதிலும் மூவ்வகோபால முத்திரையில்லாமலிரா.

சிறந்த ரஸிகரான விஜயராகவ பூபாலர், க்ஷேத்ரக்ஞருக்கு தான் அளித்த பரிசு முதலான உபசாரங்களைக்கண்டு பொறுமைக்கொண்ட சில கவிஞர்கள் தம்மிடம் வந்து "மகாராஜா! இதென்ன! என்னடா, வாடா, போடாவென்று கவனம் செய்கிற இந்த க்ஷேத்ரக்ஞன் மீது என்ன மோகம்? இவனுக்கு ஏன் இந்த பரிசுகளும், உபசாரமும்?" என்று கூறிய விஷயத்தை க்ஷேத்ரக்ஞர் ஒரு முறை வந்தபொழுது அவரிடம் உரைத்தார்.

க்ஷேத்ரக்ஞர் அதைக் கேட்டு "அவர்கள் கூறியது உண்மையே" என்ருர். பிறகு காம்போஜி ராகத்தில் "வதரக போவே" என்ற பதத்தின் பல்லவி, அனுபல்லவியோடு இரு சரணங்களையும் கவனம் செய்து மூன்ருவது சரணத்தில் "பாமரோ சகுனமுலடிகிதி மூவ்வகோபாலுடு வச்சுநநு, காமிம்சி நாதுல கலயு செலுவ ஜூசி கரகி சிந்த நெர்நதிதி" என்கிற வரையில் பாடி, இந்தச் சரணத்தில் கடைசி பதத்தை மட்டும் கவிஞர்கள் பூர்த்தி செய்யட்டும் என்று மன்னனிடம் கூறி, ஸேது யாத்திரை போய் வருவதாகக் கூறிப் புறப்பட்டுச் சென்ருர்.

மறுதினம் கவிஞர்கள் ஸபைக்கு வந்தவுடன் அவர்களிடம் மேற்கண்ட பதத்தை அளித்து அதன் மூன்ருவது சரணத்தின் கடைசிக் கண்டத்தை மட்டும் பூர்த்தி செய்யுங்கள் என்று அரசன் விளம்பினர். அக்கவிஞர்கள் அனைவரும்கூடி க்ஷேத்ரக்ஞர் திரும்பிவரும்வரை யோசித்தும் அக்கடைசி கண்டத்தின் பொருள் விளங்காமல் விழித்துக்கொண்டிருந்தனர். க்ஷேத்ரக்ஞர் திரும்பியவுடனேயே அவரிடம் புலவர்களனைவரும் போய் வேண்டிக்கொண்டனராம். அவரும் "ராம ராம ஈ மேனிதோ வானிமோமுஜூட வலெனா மொதடி பொந்தே சாலு" என்று பதத்தை முடித்ததைக்கேட்டுப் புலவர்கள் "நீர் ஸாக்ஷாத் கோபாலனே" என்று புகழ்ந்து அரசனிடம் போய் இவ்விஷயத்தைக்கூறி பலவிதமாகத் துதித்தனர்.

ஸ்ரீ ஸுப்பராம தீக்ஷிதரவர்களிடம் இருக்கும் பழைய புத்தகத்தில் மேற்கூறிய பஞ்சரத்தினத்தையும் சேர்த்து ஐநூறு பதங்கள் உள்ளன. இப்போதுள்ள அச்சுப் புத்தகத்தில் பல பதங்களின் சாஹித்தியங்கள் மாற்றப்பட்டுள்ளன. இதைத் தவிர, அர்த்தம், ரஸம், ஸந்தர்ப்பம் முதலியன அறியாத நவீன பாடகர்கள் ராகங்களை மாற்றியுள்ளார்கள். இவருடைய காலம் மேற்கூறிய விஜய ராகவ நாயக்கரின் காலமே.

மூலம்:—ஸ்ரீ ஸுப்பராம தீக்ஷிதர் இயற்றிய இயலிசைப் புலவர் வரலாறு என்ற தெலுங்கு நூல். தமிழாக்கம்: தி. ஸ்ரீ. பார்த்தஸாரதி.

ஜவஹரைப்பற்றி அவர் தங்கை

இன்று உலகோரால் போற்றப் படுபவரும் தேச பிதா காந்திஜியின் வாரிசு என்று மதிப்பு பெற்றவருமான நமது பிரதமர் ஜவஹர்லால் நேருவைப் பற்றி அவரது இளைய சகோதரி ஸ்ரீமதி கிருஷ்ணா ஹதிசிங் அளித்துள்ள சில தகவல்கள் :—

"நான் எப்பொழுதுமே ஜவஹரைப் போற்றுகிறேன். சென்ற முப்பது ஆண்டுகளில் இடைவிடாது சுதந்தரத்திற்காகச் செய்த போராட்டமும், தியாகமும் அதனதன் அடையாளங்களை விட்டுத் தான் சென்றுள்ளன. ஒவ்வொரு வருஷமும், குதூகலத்தையும் மகிழ்ச்சியையும், இதர சுகங்களையும் கொஞ்சமேனும் அபகரித்துச் செல்லத்தான் செய்தது. சிந்தனை நிறைந்ததும், ஹாஸ்யப் பேச்சுக்களைக் கேட்டுப் பிரகாசித்து, உணர்ச்சிகளை வெளியிடுவதுமான கண்கள் இப்பொழுது பணிவின்மையையும், மிதமிஞ்சிய வேலைகளினால் சோர்வுற்றதையும் வெளிக்காட்டுகின்றன. ஏதோ ஒரு உத்வேகத்தினால் உந்தப்பட்டுத் தீவிரமான உழைப்பினால் களைத்த ஒருவனது முகத்தை இன்று நேருவின் முகம் நினைப்பூட்டுகிறது. தன்னம்பிக்கையும், பவ்யமும், நிறைந்து, பிரதம மந்திரியான தமக்கு உள்ள அதிகாரம் இன்னது தான் என்பதை உணர்ந்து, எந்தக் குற்றச்சாட்டுகளையும் உடனுக்குடன் எதிர்த்துப் போராடும் சுபாவம் கொண்டதாகப் பிரதிபலிப்பதை அவரது புன்முறுவலில் காண்கிறோம்.

மாபெரும் இந்தியத் தலைவரும், இந்தியாவின் முதல் பிரதம மந்திரியுமான நேரு மேல்நாட்டு ்பர்போல் எவ்வாறு காணப்பட்டார் என்பதை அவர் பால்ய நடவடிக்கைகள் மூலம் அறியலாம். நேரு பெருந்தனவந்தர் குடும்பத்தில் பிறந்தவர். நேரு மேனாட்டு உடைகளையே தமது 35-ம் வயது வரை உடுத்தி வந்தார். சாக்

லெட், வெண்ணெய், பிஸ்கட், ஐஸ்க்ரீம், பாலடை முதலியவைகளை உண்பதில் அவருக்கு அபார பிரியம். மேல் நாட்டாரை நண்பர்களாகக் கொள்வதில் அவருக்கு அலாதியான விருப்பம். (உதாரணமாக மௌண்ட்பாட்டன் தம்பதிகள்) இது விஷயமாக ஒரு சமயம் காந்திஜி கேலியாக, நேருவை, "நேரு தூக்கத்தில் பிதற்றுவதும் ஆங்கிலத்தில் தான்" என்று கூறியிருக்கிறார்.

1937-ம் ஆண்டில் தம்மை மூன்றும் மனிதராக பாவித்து அனுமதேயப் பெயரில் ஒரு கட்டுரை நேரு எழுதியிருந்தார். அதில், சிறந்த வேஷம்—குறைந்த அம்சமே வேஷப்பொருத்தம் காட்டிக் கொள்வதில், நடிகரின் சாயமும், பௌடரும் இல்லாமலேயே ஜவஹருக்கு நடிக்கத்தெரியுமென்று விளங்குகிறது. அந்த முகமூடிக்குப் பின்னால் என்ன இருக்கிறது? என்ன மறைந்திருக்கிறது? அதிகாரம் கைக்குவந்தால் என்ன நிலை யேற்படும்?

பெருத்த நன்மை அல்லது சீரழிவு செய்யவல்ல சக்தி அவர் பாலுண்டு. ஜவஹரைப்போன்ற மனிதர்கள் நல்ல பெரிய சாதனைகளைச் செய்யும் திறமைகொண்டவரேயாயினும் ஜனநாயக உலகில் அவர்களுக்கு பத்திரமில்லையே. நேரு தம்மை பொதுஜனவாதியாகவும், சோஷலிஸ்டாகவும் ஆத்ம பூர்வமாகக் கூறிக்கொள்ளலாம். ஆனால் உளநூல் ஆராய்ச்சியாளர், எண்ணங்களெல்லாம் கடைசியில் இதயத்திற்கு அடிமைதான் என்பதை நன்கு அறிவர். நேருவை ஒரு சர்வாதிகாரியாக்க, ஊர்ந்து செல்லும் ஜனநாயகத்தின் படாடோபங்களைக் குழிதோண்டிப் புதைத்துவிட ஒரு சிறு திருப்பம்போதும் ஜவஹர்லாலிடம். ஒரு சர்வாதிகாரிக்கு வேண்டிய லக்ஷணங்கள் யாவு முண்டு.—பெரும் புகழ், அசைக்கமுயாத நம்பிக்கை, திறமை, தீவிர உழைப்பு, பிறரிடம் காணமுடியாத ஒருவித துடிதுடிப்பு, ஆற்றலற்றவரையும், உழைக்கச் சோம்பல் படுவோரையும் கண்டால் வெறுப்பு—இவை யாவும் அவரிடம் குடிகொண்டுள்ளன. இந்தப் புரட்சிகரமான நிலையில் சீசரிஸம் (சர்வாதிகாரம்) எப்பொழுதும் வாயிற்படியில் நின்றுகொண்டுதானிருக்கிறது. இச்சமயத்தில் ஜவஹரும் சீஸரைப் போல் மாறிவிடமுடியாதா?" என்று தம்மை மறைத்துக்கொண்டு தம்மைப் பற்றி எழுதிக்கொண்டிருக்கிறார். தம் மனத்திலுள்ளதை உள்ளவாறு வெளியிட்டிருக்கலாமென்

ருலும், அவர் அப்பொழுது எழுதியவை முற்றும் அவரைப் பற்றிய வரையில் பொருத்தமானதாகத் தான் இருக்கக் கண்டோம்.

இன்றும் இதர தேசங்களைவிட, நேரு இங்கிலாந்தை அதிகம் போற்றி விரும்பத்தான் செய்கிருர். அமெரிக்கர்களை மதிக்கவும் புகழவும், செய்தாலும் பொதுவாக, அமெரிக்கர்கள் பணம்படைத்தவர்கள், சிறுபிள்ளைத் தனமும், எளிமையும், இயற்கையான பேச்சும், நடத்தையும் உடையவர்கள். இன்று இராஜதந்திரத்தைப் பொறுத்தவரை அவர்கள் வளர்ச்சியடையாதக் குழந்தைப் பருவத்தினர்தான் என்பதே நேரு கொண்டுள்ள கருத்து.

அதிகாரம் நேருவை (லஞ்சத்தின் மூலம்) கெடுத்துவிடவில்லை என்பது உறுதி. ஆனல் கொஞ்சதூரம் அந்த நிலைக்குக் கொண்டு செல்ல ஒரு வேளை எத்தனித்தது எனக் கூற இடமுண்டு. எப்பொழுதும் அவர் கொஞ்சம் சர்வாதிகாரிகளின் மனத்தையும் கொண்டவராகத்தானிருந்தார். இக்காலத்தில் அவர் எந்தவிதமான எதிர்ப்புக்களுக்கும் அஞ்சுவதில்லை.

சரித்திரத்தில் தமது ஸ்தானம் என்ன என்பதை நன்கு உணர்ந்து பணியாற்றுகிருர். தாய் நாட்டிடம் அபார நம்பிக்கையும், பிரேமையும் கொண்டுள்ளார். ஒரே மனிதரது ஆதிக்கந்தான், அவரை இவ்வளவு அரிய சேவை செய்து, அதிகாரம் முழுவதையும் தாங்கும்படி செய்ததா என்பது யோசிக்கவேண்டிய விஷயமாகும்.

உலகத்தின் கண்ணெதிரே, இந்தியாவை முன்னேற்றப் பாதையில் அழைத்துச் செல்லவும், சிக்கலான இன்றைய சூழ்நிலையில் அதன் விதியை நிர்ணயிக்கப் போதுமான ஆற்றலும் உடைய மனிதர் நேரு ஒருவரேதான் என்பதில் ஐயமில்லை. இருந்தாலும், முகஸ்துதிகளிலும், புகழிலும் மயங்கிவிட நேர்ந்தால் ஆபத்து அவருக்குமட்டுமல்லாமல் இந்தியாவிற்கும் தான் என்பது நினைவிலிருத்தவேண்டிய உண்மையாகும். அவர் சொல்லும் வார்த்தைகளிலேயே கூறினல், "இது உதவாது, இதைக் கட்டுப்படுத்தவேண்டும். நமக்கு சீஸர்கள், (சர்வாதிகாரிகள்) தேவை இல்லை. கூடவும் கூடாது."

—Krishna Hutheesingh in *LADIES' HOME JOURNAL*.

துறவிக்கு துறவைப்போதித்த பெண்மணி

●

முற்காலத்தில் நம் நாட்டில் நுட்ப அறிவு படைத்த பல பெண் மணிகள் சாதாரண நடுத்தரக் குடும்பங்களிலும் தோன்றி யுள்ளார்களென்பதற்கு வியப்பும் மகிழ்ச்சியுமூட்டும் பின்வரும் கதையே தக்க சான்ருகும்.

சேரநாட்டை யாண்டுவந்த விஜயவர்மா மகாராஜா என்பவர் வாலிபப் பருவம் முதல் பரமார்த்திகத்திலேயே பற்றுள்ளவரா யிருந்தார். இவர் பாரமேற்று சிறிது காலத்திற்குள் "கம்பமத யானை, கழுத்ததன் மேலிருந்து இன்பமுறும் செல்வமும் இவ் வரசு யான் வேண்டேன்" எனக் கூறி சகல ராஜபோகங்களை யும் துறந்து துறவியாக நாட்டை விட்டேகினர்.

அநேக ஆண்டுகள் ஆண்டிக் கோலத்திலேயே அலைந்து திரிந்து பின்னர் ஒருசமயம் அவரையறியாது அவர் நாட்டை யடைந்தார். வயல் வெளிப்புறத்தில் உழுத மண் கட்டிகளில் வரப்பைத் தலை யாகக் கொண்டு படுத்திருந்தார் துறவியரசர். வயல்வெளிக்குப் பக்கத்தில் செல்லும் நதி ஒன்றில் தண்ணீர் எடுப்பதற்காக மூன்று மாதர்கள் இடுப்பில் குடத்துடன் அவ்வழியே வந்தார்கள்.

அவர்களில் ஒரு ஸ்திரீ "அடியே! அதோ பாரடி, உழவுக் கட்டி களில் கிடக்கும் சாமியார் நமது நாட்டு அரசன் போலிருக்கிறதே" என்ருள். மற்ருெருத்தி "அரசனைப்போல் தோன்றுவதென்ன? அவர் நம் அரசனேதான்" என்று உறுதியாகக் கூறினுள். இன்னொருத்தி "ராஜபோகங்களைத் துச்சமென வெறுத்து துறவு பூண்ட இவரது தியாக சீலத்தை எவ்வாறு மெச்சுவதென அதி சயித்தாள்" இதைக் கேட்ட ஒருத்தி "என்னடி இவர் சுகபோகங் களை வெறுத்துவிட்டார், இன்னும் வரப்பைத் தலைக்கு அணை யாகக் கொண்டுதானே படுத்துள்ளார், தலைக்கு உயரத்தை இவர் நாடுவதால் இவர் சுகத்தை வெறுத்தவரென்று எவ்வாறு கூறமுடியும்" என்ருள்.

இந்தச் சம்பாஷணைகளை அந்த ராஜ துறவி கேட்டு "நாம் தலைக்கு உயரத்தை நாடியதால் நாம் சுகபோகத்தை முற்றும் துறக்கவில்லை யென்றல்லவா இந்தப் பெண்கள் கூறுகிறார்கள்" என அம்மொழிகளை உண்மையெனக் கருதி வரப்பை விட்டு விலகி தலையையும் மண்கட்டியில் சாய்த்துக் கிடந்தார்.

நதியில் தண்ணீரைக் குடங்களில் ஏந்திக்கொண்டு திரும்பிய பெண்மணிகளில் ஒருத்தி "பார்த்தாயடி, நீ சொன்னதைக் கேட்டுத் தலைக்கு உயரமில்லாமலேயே மண்கட்டியிலே பரிதாபமாகப் படுத்திருக்கிறார் அரசர். அவரது பரிபக்குவ நிலையைத்தான் என்னென்று கூறுவது" என்று வியப்புடன் கூறினாள் ஒரு ஸ்திரீ. அதற்குப் பதில் கூறிய மற்றொரு ஸ்திரீ "அரசனுக்குப் பரிபக்குவமென்பது இன்னும் ஏற்படவில்லையடி. முற்றும் துறந்த முனிவர்கள் உலகுக்குச் செவி சாய்ப்பார்களா? உலகத்தார் போக்கிற்கும் வாக்கிற்கும் ஒரு சம்பந்தமில்லையென நடந்து கொள்ளுபவர்கள் தானே உண்மைத் துறவிகளாவார்கள். உலகத்தார் தனது துறவின் சிறப்பைப் போற்ற வேண்டுமென்று தானே இவ்வரசன் இன்னும் நினைக்கிறான். இதிலிருந்து இவ்வரசனுக்குத் துறவு மார்க்க பரிபக்குவ நிலை அமைந்திருக்கிறதென்று கூறுவதில் அர்த்தமுண்டா?" என்று கேட்டாள்.

மாடமாளிகை சதுரங்கசேனையுடனே வந்ததோர் ராஜபோக வாழ்க்கையைச் துச்சமெனத் துறப்பதும், மெய்வருந்தும் தவவேடம் கொள்வதும் வரப்பைத் தலையணையாகக் கொண்டு அதையும் வெறுப்பதுங்கூட உண்மைத் துறவாகாது—விருப்பு வெறுப்பு அற்றதே உண்மைத் துறவாகும் என்ற உண்மையை உணர்ந்தார் மன்னர்.

198758

அசோகா சுகந்த பாக்குத்தூள்

நேபாள ராஜ்யத்தில் வழக்கத்திலுள்ள ஒரு சடங்கின் சுவையான தகவல்.

திரும்பிப்பாராதே!

●

ஒரு மனிதன் உயிரோடிருக்கும் போது உற்ருர் உறவினர்கள் அவனிடம் எவ்வளவு அன்போடும் ஆதரவுடனுமிருந்தாலும், அவன் இறந்தால் அவன் ஆவியைப் பற்றிப் பீதியடைவது சகஜம். வைதீகக் கர்மங்கள் பலவற்றைச் செய்வது அந்த ஆவியைத் திருப்தி செய்து அது மனிதனுக்கு பயமளிக்காமல் நடந்துகொள்வதற்கே யாகும். பிரத்தியேகமாக வைதீக கர்மங்களைத் தவருமல் அனுஷ்டிக்கும் வகுப்பினரிடையே இந்த ஆவியை வீட்டை விட்டு விரட்டுவதற்கென்பதற்காகவே ஒருவர் மரித்த பன்னிரண்டாம் தினத்தன்று சில சடங்குகள் செய்யப்படுகின்றன.

ஒரு பிராமணருக்கு ஏராளமான தானங்களும் பொருள்களும் அளித்து, அவனிடம் இறந்துபோன மனிதனின் ஆவியையும் ஒப்படைத்து அவனை வீட்டைவிட்டு வீட்டிலுள்ளவர்கள் கண்களில் படாமலும் திரும்பிப் பார்க்காமலும் வெளியே செல்ல ஆக்ஞாபித்து அனுப்புவதுண்டு.

மற்றெருவர் ஆவியை இவ்வாறு ஏற்றுக்கொண்டு அவருக்கு நிம்மதியளிப்பது ஒரு ஈனத்தொழிலாகவும் நம் நாட்டில் கருதப்பட்டு வந்துள்ளது.

சமீபத்தில் காலஞ்சென்ற நேபாள அரசர் திரிபுவனுக்காக மேற்கூறிய ஆவியை அகற்றும் சடங்குகள் மிக விமரிசையாக நடைபெற்றது.

நேபாள ராஜ குடும்ப ஆசாரப் பிரகாரம் அரசன் மரித்த பதினேராவது தினம் இந்தச் சடங்கு நடந்தது.

அரசன் ஆவியை ஏற்றுக் கொண்டு வெளியே கடத்தும் பணியை கட்மாண்டு நகர தேவி ஆலயத்தின் சிப்பந்தியான ஒரு மகாராஷ்டிர பிராமணன் நிறைவேற்றினர். இவருடைய பெயர் ஸ்ரீ கிருஷ்ணபட்டா.

ஒரு சாதாரண மனிதரின் குடும்பத்திற்கு இந்த கைங்கரியத்தைச் செய்வதற்கு சுமார் நூறு அல்லது இருநூறு ரூபாய்கள் எதிர்பார்க்கலாம். ஆனல் நேபாள ராஜகுடும்பத்திற்கு இந்தப் பணியை ஏற்றதன் பலனக ஸ்ரீ கிருஷ்ணபட்டா ஒரு லக்ஷாதிபதியாகிவிட்டார். திரிபுவன ராஜாவிற்குச் சொந்தமாக எந்தெந்தப் பொருள்கள் இருந்தனவோ அவற்றையெல்

லாம் ஸ்ரீ கிருஷ்ணபட்டாவிற்கு ராஜ குடும்பத்தார் வழங்கிவிட்டார்கள்.

பாக்மதி நதி யருகே பிரத்தியேகமாய் அமைக்கப்பட்ட ஒரு பிரம்மாண்டமான பந்தலில் ஸ்ரீ கிருஷ்ணபட்டாவிற்குச் சமாராதனை நடந்தது. திருபுவனராஜா உபயோகித்துக் கொண்டிருந்த புகைபிடிக்கும் கருவியிலேயே ஸ்ரீ கிருஷ்ண பட்டா புகைபிடித்துக்கொண்டு இரண்டு லக்ஷம் ரூபாய் மதிப்புள்ள பொருள்களைப் பெற்றார். திரிபுவன ராஜாவால் இரு யானைகள் ஒரு குதிரை, அவருடைய விலை மதிப்பற்ற படுக்கைகள், இவை தவிர ரொக்கமாகப் பத்தாயிரம் ரூபாய்களும் ஸ்ரீ கிருஷ்ண பட்டாவிற்குக் கிடைத்தன.

இச்சந்தர்ப்பத்தில் நேபாள ராஜ்யத்து உயர்தர ஸிவில், ராணுவ உத்தியோகஸ்தர்களும் மற்ற பிரமுகர்களும் உட்பட பத்தாயிரம் பேர் விஜயஞ் செய்திருந்தனர். மரித்த அரசனின் பொருள்களையும் ஆவியையும் ஏற்றுக்கொள்ளும் ஸ்ரீ கிருஷ்ண பட்டா ராஜ்யத்தை விட்டு வெளியே செல்வதைக் காண்பதற்காக மிக ஆவலோடு காத்திருந்தது இம்மாபெருங் கூட்டம்.

தானமாக அளிக்கப்படும் பொருள்களின் ஜாபிதா பிரகாரம் தன் கையில் யாவும் வந்து சேர்ந்தனவா வென்று பட்டா சரி பார்த்துக் கொண்ட பின்னர் அவரை ராஜ வம்சத்துப் புரோகிதர்கள் யானை மீது ஏற்றிவைத்துத் திரும்பிப்பாராமல் சென்றுவிட ஆக்ஞையிட்டார்கள். நேபாள ராஜ்யத்தில் மறுபடி அடியெடுத்து வைக்கக் கூடாதெனவும் இவருக்குக் கட்டளையிடப்பட்டது.

பாரம்பரிய ஆசாரப்பிரகாரம் யானைமீது ஏறிப்போய்க் கொண்டிருக்கும் கிருஷ்ணபட்டாவை அநேக ஆயிரம் மக்கள் பின்தொடர்ந்து கல்லெறிந்து, கோஷமிட்டார்கள். ஆனால் ஸ்ரீ கிருஷ்ணபட்டா நேபாள ராணுவ பாதுகாப்புடன் நேபாள ராஜ்யத்தின் கோட்டை வாசலைத் தாண்டி பத்திரமாக வெளியேறிய பின் கோட்டைக் கதவுகளைச் சாத்திவிட்டனர்.

தென்னாட்டுக் குடும்பங்களில் இந்தச் சடங்கை நடத்தும்போது ஆவியை ஏற்றுக்கொண்ட மனிதன் போகும் பாதையெல்லாம் சாணநீரைத் தெளித்துச் சுத்தம் செய்வார்கள். ஆனால் நேபாள ராஜ குடும்பத்தில் இந்த ஆசாரம் வழக்கத்தில் இல்லை போலும்.

யோகக்கலை

●

'மனம் ஒடுங்கி மெய்யறிவு பெற்று பேரானந்தத்தை அனுபவிக்கும்படி அனுக்கிரகம் புரியவேண்டும்' என்று அலர்க்கன் என்ற அரசன் தத்தாத்ரேயரைக் கேட்டான்.

"அரசே! ஞானம் என்னும் கத்தியைக் கொண்டு மோஹம் என்னும் மரத்தை வெட்டி மோக்ஷம் என்னும் பழத்தைப் பெறுவாயாக" என்றார்.

"குருவே! அழகாகச் சொல்லவும் கற்றிருக்கிறேன். நன்றாகக் கேட்கிறேன். ஆனல் மனம் நிலைத்து ஒரு நிமிஷமேனும் பிரும்மத்தில் லயமாகவில்லை. அதற்குரிய மார்க்கத்தை அருள வேண்டும்" என்று பக்தனை அலர்க்கன் வேண்ட ஆச்சாரியர் அருளினர்.

அஸங்கம் என்ற பற்றில்லாமையால் விஷயபோகங்களில் வைராக்கியமுண்டாகும். பிராணயாமத்தால் இந்திரிய தோஷமகலும், அக்னி ஸ்வர்ணத்தின் தோஷத்தை யகற்றுவதுபோல் மனத்தின் தோஷத்தை நீக்க வல்லது பிராணயாமமே. பன்னிரண்டு மாத்திரை காலம் பிராணனை அடக்குவது லகுவாம். இருபத்தி நான்கு மாத்திரை காலம் அடக்குவது மத்யமம் எனப்படும். முப்பத்தாறு மாத்திரை அடக்குவது உத்தமம். லகுவை அப்யஸித்தால் வியர்வை தோன்றும்.

நீண்ட கால பழக்கத்தால் அதை ஜயிக்கவேண்டும். மத்யம அப்யாஸத்தால் நடுக்கத்தையும் உத்தமத்தினல் விஷாதத்தையும் ஜயிக்கவேண்டும். யோகம் சுவாதீனம் செய்யப்பட்ட சிங்கம் போல நம்மிடமிருந்து நமது சத்ருக்களையே கொல்லும்.

யோகத்தின் பிரிவுகள்

இந்த யோகாப்யாஸத்தில் த்வஸ்தி, பிராப்தி, ஸம்வித், பிரஸாதம் என நான்கு வகைகள் உண்டு. மனத்திலுள்ள அழுக்குகள் அழிந்து நிர்மலமாயிருத்தல் **த்வஸ்தி** எனப்படும்.

இஹபர சுகத்தில் ஆசையில்லாமலிருத்தல் **பிராப்தி** எனப்படும். முக்காலமும் கிரஹ நக்ஷத்திரங்களும் தேவர்களும் பிரத்யக்ஷமாவது **ஸம்வித்** எனப்படும். ஒன்றிலும் பற்றில்லாமல் அலையற்ற தடாகம் போல் தெளிந்து நிற்கும் நிலை **பிரஸாதம்** எனப்படும்.

பன்னிரண்டு பிராணயாமம் ஓர் தாரணையாம். இரு தாரணைகளே யோகம் எனப்படுவது. அந்த யோகத்திலுள்ளோன் வேறு எதையும் விரும்பான். மனத்தை தரிப்பது தாரணையாம். இந்திரியங்களைத் திருப்புவது ப்ரத்யாஹாரம். நாபி, ஹிருதயம், மார்பு, கழுத்து, முகம் நாஸிகை, கண், புருவத்தினிடை, தலை என்ற பத்து இடங்களில் வாயுவோடு மனத்தை

நிறுத்துவது ஒருவகை அப்யாச மாகும்.

யோகிக்கு ஆகாயமும் அணுவும் கூட பிரத்யக்ஷமாகும். சத்தமுள்ள இடம், நீர், நெருப்பு, குட்டிச்சுவர், வீதி, குப்பை, ஸ்மசானம், ஆறு, கிணறு, புற்று, எறும்புள்ள இடம், இது போன்ற ஸ்தானங்கள் யோகாப் யாசத்திற்கு ஏற்றதல்ல. ஸித்தி பெற்றவன் சஞ்சலமற்றவனுகை வும், வியாதி அற்றவனுகவும், கோபமற்றவனுகவும், வாசனே யுள்ளவனுகவும், காந்தியுள்ளவ னுகவும், தெளிவும், அழகிய குரல் உள்ளவனுமாகவும் இருப் பான். யோகத்திற்கு விரோத மாக யாகம், அதிதி பூஜை, தானம் முதலிய ப்ரவிருத்தி மார்க்கங்கள் தோன்றும். உண் மையான யோகிக்கு வேத சாஸ் திரார்த்தங்கள் தானே தோன் றும். அந்நிலே பிரதிபை எனப் படும். எங்குமுள்ள சத்தம் அர்த் தத்துடன் அவன் காதில் விழும். அது ச்ராவண நிலேயாம்.

எட்டு தேவ ஜாதி விசேஷங் களையும் தரிசிக்கும் நிலே தேவம். எல்லா ஆசாரங்களேயும் விட்ட தால் ஒருவித ஆச்ரயமும் இல் லாமல் தனியாக மனம் சுற்றும் நிலே பிரம்மம் எனப்படும். சுழல் போல் மனம் சுழலும் நிலே ஆவர்த்தம் எனப்படும். இவ் வைந்தும் அணிமா, லகிமா, மகிமா, கரிமா, பிராப்திப்ரா காம்யம், ஈசித்வம், வசித்வம் என்ற அஷ்டமா சித்திகளும் யோக பலமான ஞானத்தைக் கெடுக்கும் இடையூறுகள்.

உண்மையான யோகி, கௌர வத்தை விஷமாகவும், அகௌர வத்தை அமுதமாகவும் எண்ணு வான்.

—[மார்க்கண்டேய புராணப்படி-தொகுத்தவர்: ஆர். வி.]

வீடுகளைப் பூட்டாத தேசம்

★

இந்தோனேஷியாவில் ஏராளமாக சிவாலயங்களும் விஷ்ணு ஆலயங்களுமிருக்கின்றன. இந்த ராஜ்யத்து மக்கள் ஹிந்து மதத்தையும் புத்த மதத்தையும் பின்பற்றுபவராயினும் இவர்களனைவருக்கும் ராமாயணக் கதையில் அளவற்ற பற்றுதல் உண்டு.

பாலி என்ற இடத்திலுள்ள மக்கள் பெரும்பாலோர் ஹிந்து மதத்தைப் பின்பற்றுபவர்கள். பொது மக்கள் ஈடுபட்டுள்ள தொழில்களை அனுசரித்தே பாலி மக்கள் வர்ணச்ரம தர்மத்தை அனுஷ்டித்து வருகிறார்கள்.

தாய்லாந்தில் அநேக தேவாலயங்களில் உள்ள கற்றூண்களிலும் சுவர்களிலும் ராமாயணம் கதை ரூபத்தில் மிக அழகாகச் சித்திரிக்கப்பட்டுள்ளது.

இந்தோனேஷியா மக்கள் அனைவரும் மிகவும் விரும்பும் ஒரு கலை விருந்தாகும், ராம நாடகம். இந்தோ சீனாவில் தான் நளனும் தமயந்தியும் இருந்ததாக இந்த ராஜ்ய மக்கள் கருதுகிறார்கள். தமயந்தியின் ஞாபகார்த்தமாக இந்தோ சீன மாதர்கள் 'தி' என்ற அக்ஷரத்தை தங்கள் பெயர்களுக்கு முடிவில் சேர்த்துக் கொள்கின்றனர்.

கம்போடியா ராஜ்யத்தில் மக்கள் பெரும்பாலோர் புத்தமதத்தைப் பின்பற்றுபவர்களானாலும் அந்த தேசத்தரசன் அரண்மனையிலும்—ஏன், பௌத்த தேவாலயங்களிலும் கூட சிவன், விநாயகர், சுப்பிரமண்யர் முதலிய கடவுள்களின் விக்ரகங்களைக் காணலாம்.

இந்தோசீனாவில் சந்நியாசிகளுக்கு அபார மதிப்புண்டு. இந்த தூரக்கிழக்குப் பிரதேசங்களிலெல்லாம் ஸம்ஸ்கிருத பாஷையின் அறிகுறிகள் தென்படுகின்றன.

பாலித்தீவு மக்களுக்குள் ஒருவருக்கொருவரிடையே மிகுந்த விசுவாசமுண்டு. இதனால் பாலி மக்கள் வெளியே செல்லும்போது தங்கள் வீடுகளைப் பூட்டுவதில்லை.

—குன்றக்குடி அடிகளார்

ஆடம்பர பக்தி உண்மை பக்தி அல்ல

•

சாரதா பக்தி மிகுந்தவள். உருவிலும் திருவை யொத்தவள். கலையிலும் வாணியை நிகர்த்தவள். அவளின் பக்திப் பரவச நிலையைக் காண்போர் பராசக்தியே இவள் என்று சொல்வார்கள். ஆம். அவள் வழிபாடு செய்து வந்த ஆலயத்தின் அதிகாரிகளும் அர்ச்சகர்களும் அடியவர்களும் அவ்விதமே தான் அவளைப் புகழ்ந்து பேசுவார்கள்.

காலை நான்கு மணிக்கே எழுந்து காலைக்கடனை முடித்துக் கோவிலுக்குச் சென்று விடியு முன்னரே விஸ்வரூப தரிசனம் செய்து முடித்து வீட்டிற்குத் திரும்புவாள். மாலையிலும் அவள் அவ்வாறே கோவிலுக்குச் சென்று கோவில் பிரகாரங்களிலுள்ள விக்ரகங்களின்முன், தான் கொண்டு வந்த எண்ணெயை ஊற்றித் திருவிளக்கு ஏற்றுவாள். எண்ணெய் ததும்பி அவள் சேலையும் கோடுகோடாக நனைந்து கறையாக இருக்கும். அதையும் அவள் பொருட்படுத்தமாட்டாள். அவள் கோவிலுக்கு வந்தாலே கோவிலே புதிய பொலிவோடு விளங்கும். அதிலும் அவள் கோவிலெங்கனும் செய்திருக்கும் தீப அலங்காரங்கள் கண் கொள்ளாக் காட்சியாக இருக்கும்.

தீபங்கள் ஏற்றிய பின்னர் பிரதட்சணம் வருவாள். மற்றவர்களைப்போல் இரண்டு மூன்று பிரதட்சணங்களா வருவாள்? ஒன்பது அல்லது பதினோறு பிரதட்சணங்கள் வருவாள். முக்கிய சுப தினங்களில் இருபத்தோறு பிரதட்சணங்களும் வருவாள். ஆண்டுக்கொரு முறை அங்கப் பிரதட்சணமும் செய்வாள். அவள் சுவாமியைத் தரிசனம் செய்ய சந்நிதியின் முன் வந்தால் சுமார் இரண்டு மணி நேரமாவது ஆகும். அவள் ஆண்டவன் திருமுன் ஒழுக்கமே வடிவெடுத்தாற் போன்று, நின்றுகொண்டு அவளது இரு கரங்களையும் குவித்து அவளது இருதயத்தோடு அழுத்திப் பொருத்திக்கொண்டு உள்ளம் உருகிப் பாடுவாள். அவள் பிரகாரம் முழுவதும் தீபங்கள் ஏற்றி பிரகாசிக்கச் செய்தது போல் ஆண்டவன் முன்னிலையிலும் "அன்பே தகழியாய் ஆர்வமே நெய்யாகி இன்புருகி சிந்தை இடுதிரியாய் நன்புருகி ஞானச் சுடர் விளக்கேற்றுவாள்." அதாவது அவள் பாடுங் கவிகளிலிருந்து ஞானஒளி பரவும்.



அதைக் கேட்ட பக்தர்கள் பரமானந்தம் அடைவார்கள். இவ்வாறு வந்தனை வழிபாடு முடித்துக்கொண்டு இல்லத்துக்கு ஏகுவாள்.

சாரதா இல்லத்துக் கேகிய பின்னரும் பக்தர்கள் அவளைப் பற்றியே புகழ்ந்து கொண்டிருப்பார்கள். "அவள் வாயிலிருந்து வரும் பாக்களின் நாதம் நாரதன் வீணையோ நம்பிரான் கண்ணன் வேய் குழல் இன்பமோ" என்பார் ஒருவர். அடுத்தவர் "நாதத்தின் நயம் இருக்கட்டுமய்யா. "வேதாந்த சித்தாந்த சமரச சன்மார்க்க சாரமாகவே யல்லவா இருக்கிறது அக்கவிகள்" என்பார். இதைக் கேட்ட மற்றொருவர் "வேதம் பொன் உருக்கன் னிகையாகியே மேன்மை செய்து எமைக்காத்திடச் சொல்வது...சாதல், மூத்தல் கெடுக்கும் அமிழ்தம்...அத்தையல் வாழ்க! பல்லாண்டு பல்லாண்டிங்கே" யென அவளுக்கு வாழ்த்துக் கூறி பேருவகையெய்துவார். "பாரத காவியம் கவித்வம் நான்மறை யாவும் பாராயணம் செய் மதியூகம் ஆண்டவன் அருளாலே அமைவது, அருளாளரால் அன்றி மற்றெந்த பொருளாளராலும் அது முடியாது" என அக்கூட்டத்தில் உள்ள ஒரு அருள் ஞானி கூறுவார். இவ்விதம் அறிஞரும் பிறரும் சாரதாவின் பக்திப் பெருமையை வெகுவாகக் கொண்டாடி வந்தார்கள்.

சாரதா இயற்கையில் வைதீகமான நடுத்தரக் குடும்பத்தில் பிறந்தவள். ஹைஸ்கூல் படிப்பை முடித்திருந்தாள். தலை ரோமத்தை பல சடைகளாக போடுவது அலங்கோலத்தின் சின்னமென்றும், கோண வகிடுகள் கோணலான குணத்தின் அறிகுறி என்றும், பவுடர் பூசுவது, உதடுகளுக்கும் நகங்களுக்கும் சாயம் பூசுவது முதலானவை பண்பாடு அழிந்ததன் பட்டவர்த்தன மென்றும் சாரதாவுக்கு அவள் தந்தை எடுத்துக் கூறி அவளை வைதீக ஆசார ஒழுக்கத்துடனே வளர்த்து வந்தார்.

சாரதாவுக்கு விவாகமாகி ஆறு வருஷங்கள் ஆகியது. அவள் கணவர் சதாசிவம் கல்வியில் உயரிய பட்டங்கள் பெற்றிருந்தும் தாலுகா ஆபீஸ் குமாஸ்தா உத்தியோகந்தான் வகித்து வந்தார். சாரதாவுக்கு அப்பொழுது ஒரு பெண்ணும் இரு பிள்ளைகளும் இருந்தார்கள்.

பொதுவில் சாரதா பிறந்தகத்திலோ அல்லது புகுந்தகத்திலோ உயரிய சுகபோகங்களை அனுபவித்தவள் அல்ல. அதிலும் இரண்டு மூன்று குழந்தைகளாகி குடும்பம் பெருகி பின்னர் கணவரின் சொற்ப வருவாயைக் கொண்டு குடும்பத்தை நடத்துவதில் அவளுக்கு மிகுந்த சிரமங்கள் ஏற்பட்டன. பலவித கஷ்டங்களையும் அனுபவிக்க நேர்ந்தது. அதன் பிறகு தான் கஷ்டங்கள் விலகி சுகம் பெறவே

தெய்வ வழிபாடு செய்து வந்தாள்.

அவள் மெய் வருந்தும் ஆலய வழிபாட்டைக் கண்டோர் மனமுருகும்போது கருணைக் கடலாகிய கடவுளுக்கு மனமிரங்காதா. அவள் கணவருக்குப் படிப்படியாக உத்தியோக உயர்வு கிடைத்தது. முதலில் தாசில்தார் பதவி கிடைத்தது. சாரதாவுக்கு வேலைக்காரர்களைக் கண்காணிப்பதிலும் கிராம அதிகாரிகள் கொண்டுவரும் பொருள்களைப் பத்திரப்படுத்துவதிலுமே நேரம் சரியாக இருந்தது. கோவிலுக்குப் போக நேரமில்லாதது போல் அவளுக்குத் தோன்றியது. தினமும் கோவிலுக்குச் செல்ல முடியாவிட்டாலும் வாரத்திற்கு ஒரு தினம் கோவிலுக்குப் போக வேண்டுமென்று சங்கற்பித்துக்கொண்டாள். அவ்வாறே வெள்ளிக்கிழமை தோறும் அவள் ஆலய வழிபாட்டைச் செய்து வந்தாள். பின் சதாசிவம் டிப்டி கலெக்டர் பதவியோடு வேறொரு ஊருக்கு மாற்றப்பட்டார்.

அவ்வூரில் வீட்டிலிருந்து ஆலயம் வெகு தூரத்தில் இருப்பது போல் சாரதாவுக்குத் தோன்றியது. ஏன்? அவளும் கடவுள் பக்தியிலிருந்து வெகு தூரம் பின்னடைந்து வந்துவிட்டாளல்லவா? அதனால் கோவிலும் அவளுக்கு வெகு தூரமாகத்தானே தோன்றும்! ஆகவே மாதத்திற்கொருமுறை சுக்கிரவாரந்தோறும் கோவிலுக்குச் சென்று வந்தாள். ஆனாலும் அவள் முன்போல் சிரத்தையோடு திருத்தொண்டு ஒன்றுமே செய்வதில்லை. அவளிடம் பக்தி சிரத்தையும் காணப்படவில்லை. அவள் கட்டியிருக்கும் உயர்ந்த சேலை புழுதி படிந்துவிடும் எனக் கருதி விழுந்துங்கூட வணங்கமாட்டாள். ஏதோ கோவிலுக்கு வந்தோம் என்ற பெயருக்கு வருவாள். அவசர அவசரமாக சுவாமியைத் தரிசனம் செய்து திரும்பிவிடுவாள். கோவிலில் தாமதிக்கும் அந்த சொற்ப நேரத்திலுங்கூட வீட்டில் அவள் இல்லாததால் பல காரியம் முடங்கிக்கிடக்கும் என்று வீட்டு ஞாபகமாகவே இருப்பாள்.

இப்பொழுது சதாசிவம் ஜில்லாக் கலெக்டராகி விட்டார். சாரதாவுக்கு இனிக்குறைவு ஒன்றுமே யில்லை. பெரிய பங்களா, மோட்டார் வண்டி, கறவைப் பசு ஏராளமான வேலையாட்கள் ஆணும் பெண்ணுமாக ஆறு குழந்தைகளும் ஆகிவிட்டன. இவைகளெல்லாம் சரியாக நடத்துவதிலே தான் அவள் மனம் ஈடுபட்டிருக்கிறது. விலை உயர்ந்த ஆடைகளும் அணிகலன்களும் பாங்கியில் பணமும் குவிந்துகொண்டேதானிருக்கிறது. ஆண்டவன் அவளுக்கு அருளவேண்டியது இனி ஒன்றுமேயில்லை. ஆகையால் ஆலய வழிபாடும் நின்றுவிட்டது. பக்தியும் அவளைவிட்டுப் பறந்தோடிவிட்டது.

இப்பொழுது ஆண்டுக்கொரு முறை என்றைக்காவது ஒரு நாள் சுற்றத்தார் வற்புறுத்தலின் பேரில் சேவகர்களோடு கோவிலுக்குக் காரில் வருகிறாள் சாரதா. குவிந்த கரங்கள் முன்போல் இருதயத்துடன்பொருந்தி இருப்பதில்லை. ஒரு அடிக்குமுன்னால் தான் இருக்கிறது. அவள் தலையும் கவிழ்ந்து வணங்கி நிற்பதில்லை. தலை நிமிர்ந்து பக்கங்களில் உள்ளோர் தனக்குப் பணிந்து நடக்கிறார்களா என்ற பார்வைதானிருக்கிறது. அலங்காரங்களுடன் இருக்கும் ஆண்டவனின் சிலா ரூபத்தை அவள் கண் கொண்டும் பார்ப்பதில்லை. அன்று அவள் கஷ்ட நிலைமையால் கசிந்து கண்ணீர் மல்கி வருந்தி வணங்கிய கோலத்தைக் கண் திறந்து கண்ட கடவுள் இன்று அவளைத் தனது திருக்கண்ணால் பார்க்கிறாரோ என்னவோ! அது அவருக்குத்தான் தெரியும்! நன்றி மறந்த துரோகத்தை அவள் அனுபவிப்பாள் என்ற கருத்தை,

"என் நன்றி கொன்றார்க்கும்
உய்வுண்டாமுய்வில்லை
செய் நன்றி கொன்ற மகர்க்கு"

என்று வள்ளுவரும் திருவாய் மலர்ந்து அருளியிருக்கின்றார்.

பொதுவில் பிரபுக்களுக்கு பக்தி ஏற்படுவது மிகவும் அபூர்வம். இதைத்தான் கிறிஸ்துவ பைபிளிலும் "ஐசுரியவான் பரலோகம் சேர்வது ஒட்டகை ஊசியின் காதில் நுழைவதை யொக்கும்" என்று கூறப்பட்டுள்ளது. ஆகவே பக்தி முக்கியமாக நடுத்தர நிலையில் உள்ளவர்களுக்குத்தான் ஏற்படுகிறது. துன்பம் நீங்கி இன்பம் அடையவேண்டி கடவுளை வணங்கி பக்தி செலுத்துவது காமிய பக்தியாகாது. மிகுந்த பேராசையுடன் வணங்குவது தான் காமிய பக்தியாகும்.

பக்தி செலுத்தி வரும் நடுத்தர நிலை உடையோருக்கு அதிகாரமும் பொருளும் கூடக் கூட மகிழ்ச்சியால் பக்தி குறைகிறது. மிகுந்த தரித்திரம் ஏற்படும் பொழுதும் பக்தி குறைகிறது. பக்தி என்பது வாழ்விலும் தாழ்விலும் ஒன்றுபோல் செலுத்தக் கூடியது. இதைத்தான் அருணகிரிநாத சுவாயும்,

"வாழினும் வறுமை கூறினும்
நினது
வார் கழலொழிய மொழியனே"

என்று திருவாய் மலர்ந்தருளியிருக்கிறார்.

—சி. ராமய்யா பாண்டியன்

ASOKA SCENTED BETELNUT POWDER

ச்ருங்கேரியில் தோன்றிய ஞானச்சுடர்

●

கி. பி. 788-ம் ஆண்டில் மலபாரிலுள்ள காலடி என்னும் கிராமத்தில் சிவகுருவிற்கும் அம்பிகா என்ற நம்பூத்திரி ஸ்திரீக்கும் ஜனனமானார் பகவான் ஸ்ரீ சங்கரர். இளம் வயதிலேயே இவருடைய தந்தை காலமானார். இவருடைய தாயார் தான் இவரை வளர்த்து உபநயனமும் செய்வித்தார்.

இவர் இளம் வயதிலேயே மேதையாகத் திகழ்ந்து, சந்நியாச ஆச்ரமேற்கவேண்டுமென்ற ஆர்வமும் தோன்றிவிட்டது. ஆனால் தாயார் மீதிருந்த அளவு கடந்த பாசத்தால் தாய்ச் சொல்லைத் தட்ட முடியாமல் இவர் சிறு வயதில் சந்நியாசியாகவில்லை.

சிறுவன் சங்கரன் ஒரு தினம் நதியில் குளித்துக்கொண்டிருந்த போது முதலையொன்று இவன் காலைக் கவ்விக்கொண்டது. நதிக் கரையிலிருந்தத் தாயிடம் "நீ என்னைத் துறவியாய்ப்போக அனுமதி தருவாயானால் முதலை என்னை விட்டுவிடும்" என்று கதறினான். முதலையின் பிடியிலிருந்து தன் புதல்வனைத் தப்புவிக்கத் தாயாரும் அவன் துறவியாவதற்குச் சம்மதித்தாள்.

தாயாரின் கோரிக்கையின்படி, தான் துறவியானாலும் தாயார் காலமான பிறகு தாயாரின் அந்திமச் சடங்குகளை நிறைவேற்றுவதாக ஒப்புக்கொண்டான் சங்கரன். இதற்கு அந்தக் காலத்து நம்பூத்திரி பிராம்மணர்களின் எதிர்ப்பிருந்தாலும் அன்னையின் அந்திமச் சடங்குகளைச் செய்து தாயாருக்குக் கொடுத்த வாக்கை நிறைவேற்றினார் சங்கரர்.

பிறகு நர்மதை நதிக்கரையில் தவஞ் செய்துகொண்டிருந்த கோவிந்த யதி என்பவரைக் குருவாக அடைந்து யோகம், அத்வைதம் முதலியவற்றைக் கற்றுக் கொண்டார். உபநிஷத், பிரம்ம சூத்திரம், கீதை, விஷ்ணு சகஸ்ரநாமம் முதலிய அநேக ஸ்தோத்திரங்களுக்குப் பாஷ்யம் இயற்றினார். பிரயாகையில் குமாரில பட்டா என்ற மீமாம்ஸகரைச் சந்தித்தார்.

குமாரில அக்கினியில் பிரவேசித்து நிர்வாணம் பெற முயற்சிக்கும் தருவாயில் தான் ஆதிசங்கராச்சாரியார் இவரைச் சந்தித்தார்.

குமாரில இவரிடம் கூறிய படி மாஹிஷ்மதிக்குச் சென்று மந்தன மிஸ்ரா என்ற மீமாஸ்கரை தர்க்கத்தில் வென்றார். இந்த தர்க்க சதஸிற்குத் தலைமை வகித்தவள் மந்தன மிஸ்ராவின் பத்தினியான பாரதி. இவள் கேள்விகளுக்குப் பதிலாக மற்

றெவரும் அறியாத சில ரகஸ்யங்களைக் கூறினர். பிறகு சங்கரர் துங்கபத்ரா நதி தீரத்திலுள்ள ச்ருங்கேரியை அடைந்து தனது முக்கிய ஆஸ்ரமத்தை அமைப்பதாகத் தீர்மானித்தார். ச்ருங்கேரியை இவர் தேர்ந்தெடுத்ததற்கு ஒரு சுவையான காரணமிருக்கிறது.

ஒரு தினம் நடுப்பகலில் கருவுற்றிருந்த ஒரு தவளை மீது வெயில் படாமல் ஓர் நல்ல பாம்பு தன் படத்தைக் குடை போன்று விரித்துப் பாதுகாத்துக் கொண்டிருப்பதை சங்கரர் கண்டார்.

இயற்கையிலேயே சத்துருக்களான இந்த இரு ஜந்துக்களின் விநோதநடவடிக்கை சங்கரருக்கு மிகுந்த ஆச்சரியமளித்ததோடு, ஒரு வேதாந்த உண்மையையும் புலப்படுத்தியது. இம்மாதிரி சம்பவம் நடந்த இடம் மிகப் புனிதமானதென்று இவர் நினைத்து தான் ச்ருங்கேரியில் இவர் மடத்தை ஸ்தாபித்ததற்குக் காரணம். இந்த மடத்தில்—ஸ்ரீசாரதாம்பாளின் விக்ரகத்தைப் பிரதிஷ்டை செய்து தேவியிடம் என்றும் அங்கேயே இருக்குமாறு வேண்டினர்.

அத்வைத வாதத்தைத் தீவிரமாகப் பிரசாரஞ் செய்வதற்கும் ஹிந்து மதத்தை புனிதமாக்குவதற்கும் வேதத்திற் கெதிரான மதங்களை யொழிப்பதற்கும் தான் தொடங்கும் பணிக்கு தேவி அருளுமாறு பிரார்த்தித்தார். துவாரகை, பத்ரி, ஜகந்நாதம் என்ற மூன்று ஸ்தலங்களிலும் மடங்களை ஸ்தாபித்து பிரசாரஞ் செய்து புகழுடைந்தார். அஸ்ஸாமில் இவரால் தோற்கடிக்கப்பட்ட ஒரு பண்டிதர் இவரைத் தீர்த்துவிட இவர் மீது மந்திரப் பிரயோகஞ் செய்தான். ஆனல் சங்கராச்சாரியாரின் சிஷ்யரான பத்மபாதரால் சங்கரர் தப்பித்தபோதிலும் அவருக்கு உடல் நலம் இதனுல் பாதிக்கப்பட்டது.

இவருடைய அந்திமகாலத்தைப் பற்றி இரு தகவல்கள் உள்ளன. முப்பத்திரண்டாவது வயதிலோ முப்பத்தெட்டாவது வயதிலோ இவர் கேதார்நாத்திலுள்ள ஒரு குகைக்குச் சென்று மறைந்துவிட்டாராம். மற்ருெரு நம்பிக்கைப் பிரகாரம் இவர் காஞ்சியில் சமாதியடைந்தாராம்.

பாரத நாட்டின் மிகப் பெரிய வேதாந்தி, துறவி, பக்தர், தீர்க்கதரிசனத்தோடு உழைத்த மதத் தலைவர் என்று தான் சரித்திரம் சங்கராச்சாரியாரைப் பற்றிக் கூறும் தீர்ப்பு.

ச்ருங்கேரி மடத்திற்குப் பல பிரமுகர்கள் நன்கொடை யளித்துள்ளார்கள். புனு மகாராஷ்டிர ராஜ வம்சத்தைச் சேர்ந்த பேஷ்வாக்கள் தங்கள் ராஜ்யத்தில் கூடும் பொதுக்கூட்டங்கள் அனைத்திலும் முதற் காணிக்கை சங்கராச்சார்ய ஸ்வாமிகளுக்கு அர்ப்பணிப்பதென்று அரசாங்க தஸ்தாவேஜுகளில் குறிப்பிடப் பட்டுள்ளது. மைசூரை ஆண்டு

வந்த ஹைதர் அலி ச்ருங்கேரி மடத்தாருக்கு தன் மரியாதயைத் தெரிவித்துப் பாராட்டும்ஓலையை அனுப்பித்துள்ளார்.

அப்போதிருந்த ச்ருங்கேரி மடாதிபதி புனா பீஷ்வாவின் அழைப்பிற் கிணங்கி புனாவிற்குச் செல்லும்போது மடாதிபதிகளின் பிரயாணச் செலவிற்காகப் பதினைந்தாயிரம் ரூபாய், அளித்ததோடு, யானை, குதிரைகள், ஒட்டகங்கள், பல்லக்கு முதலியவற்றையும் சாரதா தேவிக்குப் பொன்னுடையும், கொடிகளுக்காக விலைஉயர்ந்த பட்டுத் துணிகளையும் கொடுத்து அவரைக் கௌரவித்தார்.

திப்பு சுல்தானும் ச்ருங்கேரி மடத்துப் பக்தர்களில் ஒருவராக இருந்தார். சில கொள்ளைக்காரர்கள் ச்ருங்கேரி மடத்தைக் கொள்ளையடித்து சாரதா தேவி விக்ரகத்தையும் அப்புறப்படுத்தியதுபற்றி திப்பு சுல்தான் மிகவும் ஆத்திரமடைந்து அப்போதிருந்த மடாதிபதிக்குப் பின் வருமாறு கடிதமெழுதினர்.

"புனிதமான ச்ருங்கேரி மடத்திற் புகுந்து இம்மாதிரியான காரியத்தைச் செய்தவர்களுக்கு தக்க தண்டனை இந்த கலியுகத்தில் வெகு சிக்கிரத்தில் கிடைக்குமென்பதை கீழ்வரும் ஸ்லோகம் விளக்குகிறது.

हसद्भिः क्रियते कर्म रुदद्भिरनुभूयते।

(தீயகாரியங்களைச் சிரித்துக் கொண்டே செய்பவர்கள் அவற்றின் பலன்களை அழுது கொண்டே பெறுவார்கள்.)

திப்புசுல்தான் பலதடவைகள் ச்ருங்கேரி மடாதிபதியிடம் தன்னை ஆசீர்வதிக்குமாறும் ராஜ்யத்தில் சமாதானம் நிலவுமாறும் சாரதா தேவியிடம் பிரார்த்திக்க வேண்டுமென்றும் கோரியுள்ளார். சுவாமிகளின் மேற்பார்வையில் நடைபெற்ற சகஸ்ர சண்டி ஜெபத்தை யொட்டி ஆயிரக்கணக்கான அந்தணர்களுக்கு 4 தினங்கள் வரை திப்பு சுல்தான் தன் செலவில் போஜன மளித்தார். அந்த ஜெபத்தால் ராஜ்யம் அளவற்ற நன்மை யடைந்ததென்றும் மற்ருெரு கடிதத்தில் திப்பு குறிப்பிட்டுள்ளார்.

மடாதிபதி மற்ற ராஜ்யங்களுக்குச் சுற்றுப் பிரயாணஞ் செய்துகொண்டிருந்தபோது திப்பு சுல்தான் அவருக்கு கீழ் வருமாறு எழுதினர்.

"தங்களைப் போன்ற மகான்களை அடையும் பாக்கியம்பெற்ற ராஜ்யங்களில் வேண்டுமளவு மழை பொழிந்து பயிர் பச்சைகள் செழிக்கும். தாங்கள் மைசூர் ராஜ்யத்திற்குத் திரும்பி வர ஏன் இவ்வளவு தாமதமாகிறது தாங்கள் சிக்கிரம் திரும்பி வர பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்."

ச்ருங்கேரியில் மடாதிபதியாக இருந்தவர்களனைவரையும் மத பேதமின்றி பொது மக்கள் பெரிய வேதாந்திகளென்றும் ஞானச் சுடர்களென்றும் கருதி வந்திருக்கிருர்கள்.

—*Book University Journal*

வஜ்ரஸூசி உபநிஷத்

★

பிரம்மஞானம் மற்ற ஞானங்களைவிட எவ்வாறு உயர்ந்தது என்பதைப் பற்றிய ஆராய்ச்சிதான் வஜ்ரஸூசி என்னும் உபநிஷத்.

இந்த உபநிஷத், அஞ்ஞானத்தைப் போக்குகிறது; அறிவிலிகளைக் கண்டிக்கின்றது; அறிவாளிகளுக்குச் சிறந்த பூஷணமாகவும் விளங்குகிறது. சிருஷ்டியில் மக்கள் பிரம்ம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திர என்று நான்கு வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் பிராமணர்களை மட்டும் வேதங்கள் பிரதானமாகக் கூறுகிறது. ஸ்மிருதி என்ற நீதி நூலும் இதை ஒப்புக்கொள்ளுகிறது.

ஏன் பிராமணர்களை மட்டும் உயர்ந்தவர்களாகக் கூறப்பட்டுள்ளது.

அவர்கள் பிறப்பால் உயர்ந்தவர்களா ?
அல்லது வாழ்க்கையில் உயர்ந்தவர்களா ?
அல்லது செய்கையில் உயர்ந்தவர்களா ?
அல்லது சீலத்தால் உயர்ந்தவர்களா ?
அல்லது குணத்தால் உயர்ந்தவர்களா ?

பிறப்பால் பிராமணர்கள் உயர்ந்தவர்களா வென்றால் பிராமணர்கள் பிறப்பால் உயர்ந்தவர்களல்ல—ஏனெனில் ஏகப்பரப்பிரம்ம சொரூபனான கடவுளே சகல உருவமாக அமைந்துள்ளார். ஆகையால் ஆண்டவன் சிருஷ்டியில் தனிப்பட்டவர்கள் யாவரையும் பிறப்பால் உயர்ந்தவர்கள் என்று சொல்வதற்கில்லை.

பிராம்மணர்கள் உடலால் உயர்ந்தவர்களா? என்று கவனிக்கும்பொழுது அதுவுமில்லை யென்பது தெளிவாகிறது. ஏனென்றால் மக்களனைவரும் பஞ்சபூதச் சேர்க்கையாலான உடலமைப்பைப் பெற்றவர்கள். உறுப்

புக்களும் மக்கள் யாவருக்கும் ஒன்றே. ஆகையினுல் பிராம்மணர்களை உடலால் உயர்ந்தவர்களென்று கூறுவதற்கில்லை.

பிறப்பால் பிராம்மணர்கள் உயர்ந்தவர்களா ?

கீழ்க் குறித்துள்ள பல பிரம்மஞானிகளின் பிறப்பு வரலாறுகளிலிருந்து இதற்குப் பதில் கிடைக்கிறது.

ரிச்யச்ருங்கர் மிருகத்திலிருந்து ஜனித்தவர்; கௌசிசிகர் தர்பையிலிருந்து உதித்தவர்; ஜம்பூகர் முயலிடம் தோன்றியவர்; வியாசர் செம்படவ ஸ்திரீயிடம் உதயமானவர்; வசிஷ்டர் ஊர்வசி யென்னும் தேவதாஸிக்குப் பிறந்தவர்; அகஸ்தியர் கலசத்தில் தோன்றியவர். இன்னும் பல ரிஷிகள் பற்பலவிதமாகத் தோன்றியுள்ளார்கள். ஆகையால் பிராம்மணர்கள் பிறப்பால் உயர்ந்தவர்கள் அல்லவென்பது நிதர்சனமாகிறது.

தியானத்திஞல் மட்டும் பிராம்மணன் சிறந்தவஞ?

க்ஷத்திரிய வகுப்பைச் சேர்ந்தவர்களிலும் பிரம்மஞானம் பெற்றவர்கள் பலர் இருந்திருக்கிருர்கள். ஆகையிஞல் பிராம்மணன் தியானத்திஞல் மட்டும் சிறந்தவனென்று சொல்லமுடியாது.

சிறந்த கர்மங்களை செய்பவன் என்ற உயர்தர ஸ்தானத்தை பெற்றவன் பிராம்மணன் தாஞ?

நான்கு வகுப்பினரும் அவரவர்கள் பூரண ஜன்ம பலன்களுக்குத் தகுந்தவாறுள்ள கர்மங்களில் ஈடுபட்டவர்களானதால் கருமத்திஞலேயும் பிராம்மணன் உயர்ந்தவன் என்று கூற முடியாது. தர்மத்திஞல் சிறந்தவன் என்று கூறமுடியுமா?

உலகத்தில் பொன்னை அள்ளியிறைத்தவர்களில் பெரும்பாலோர் பிராம்மணர்கள் அல்லாத மற்ற வகுப்பினர்கள் என்றிருக்க பிராமமணனை தர்மத்திஞல் சிறந்தவன் என்று எவ்வாறு கூறமுடியும்?

மேற்கூறிய அம்சங்களில் ஒன்றும் பிராம்மணனை உயர்ந்தவன் என்று கூறமுடியாதானால், அவனுக்கு எந்த அம்சத்தில் தான் சிறப்புள்ளது?

எவனொருவன் தன்னைப் பரப்பிரம்மத்தோடு ஒத்தவனாகக் கருதுகிறானோ! எவனொருவன் தன் பிறவிக்கேற்ற கர்மங்களை அவற்றின் பலனைக் கருதாமல் செய்கிறானோ, எவனொருவன் கர்மக்குரோத லோபமோக மதமாத்சர்யமெனும் அறுவகை தோஷங்களை மனத்திலிருந்து விரட்டியுள்ளானோ, அனேக ஜன்மங்களில் புரிந்த நற்கருமங்களால் பெற்ற மனித ஜன்மத்தில் எவனொருவன் மனச்சாந்தியோடும், வேதாந்த அறிவோடும் காமம், ராகம் முதலிய தோஷங்கள் நீங்கப்பெற்று தன்னடக்கத்துடன் விளங்குகிறானோ அவனே உண்மை பிராமணன் ஆவான்.

—Rendered into Tamil by *Ikshvaku V. K. V. Achariar.*

வேதாந்த சாரத்தை இனிப்பான சாருகப் பிழிந்து தந்துள்ளார் சங்கரர். வேதாந்த மென்பது அறிவு மட்டு மாகாது. விவேகமேயாகும். வேதாந்தம் மூளையை அபி விருத்தி செய்யும் புத்தக ஞான மட்டுமல்ல. ஆத்ம விடுதலையைத் தேடித்தரும் பகுத்தறிவாகும். உலகத்திலுள்ள மிகப் பெரிய வேதாந்திகளனைவரும் ஆமோதித்துள்ள சங்கரரின் கொள்கைகளின்படி வேதாந்தமென்பது ஞானக் கண் முன் எப்பொழுதும் புலப்படும் உண்மை.

தர்க்கத்தில் சங்கரர் ஒப்பற்ற மேதை. ஆனல் வாழ்க்கை வரலாறுகளைப் பற்றி அளவற்ற பற்றுதல் கொண்டிருந்த ஒரு உண்மை விவேகி. வெல்ல முடியாத இந்த தர்க்கசாஸ்திர நிபுணரால் இயற்றப்பட்ட கவிதைகள் ஆயுள் முழுவதும் உலக வாழ்க்கையிலேயே ஈடுபட்டுள்ள ஒரு கவியால் இயற்றக்கூடிய கவிகளைவிட தன்மயத்துவம் வாய்ந்தவை. சங்கரரின் ஞானச் சுடர் மூலம் ஞானோதயம் பெற்ற அறிவிலிகளுக்கும், மனமுடைந்து ஆறுதலடைந்தவர்களுக்கும் கணக்கேயில்லை.

—Dr. S. Radhakrishnan.

மீண்ட வாழ்க்கை

★ எம். கே. சீனிவாசன் பி. ஏ. ★

1

கிருஷ்ணமூர்த்திக்கு மண மாகி மூன்று வருடங்கள் தான் ஆயின. அன்று அவனுடைய ஒரே புதல்வியான சுகுணுவுக்கு முதல் ஆண்டு நிறைவு. அவன் சர்க்காரில் ஒரு பெரிய இன்ஜினீயர். காலையிலிருந்து இன்ஜினீயர்களும் சென்னைப் பிரமுகர்களும் விருந்துக்கு வந்த வண்ணமாய் இருந்தார்கள். வருபவர்களை விசாரிப்பதில் காலை முதல் ஈடுபட்டுக்கொண்டிருந்த கிருஷ்ணமூர்த்திக்குப் பகல் நான்கு மணிக்குத்தான் ஓய்வு கிடைத்தது. அவனுடன் ஒத்துழைத்த அவன் மனைவி வனஜாவும் சிறிது நாற்காலியில் அமர்ந்து சிரமபரிகாரஞ் செய்து கொண்டாள்.

"இரவு யாரும் சாப்பாட்டிற்கு வரவில்லையா" என்று வினவினான் கிருஷ்ணமூர்த்தி.

"இல்லை. யாரும் சாப்பாட்டிற்கு வரவில்லை நம் வீட்டுவரையில் தான். அப்பாடா! இன்றைக்கு தான் நீர் சர்க்காரில் எவ்வளவு பெரிய இன்ஜினீயர் என்று எனக்குத் தெரிந்தது. அலைபோல் உமது நண்பர்களும் சிப்பந்திகளும், பிரமுகர்களும் வந்தார்களே" என்றாள் வனஜா.

"நீ மாத்திரம் என்ன? லேடீஸ் கிளப் காரியதரிசி அல்லவா? எத்தனை ஸ்திரீகள் இந்த பிறந்த தின விழாவிற்கு வந்தனர். நீயும்ஒரு 'பாப்புலர் லேடி' தானே, இந்த நகரத்தில்," என்று பரஸ்பர புகழ்ச்சியுடன் கூறினான் கிருஷ்ணமூர்த்தி.

"இன்றைய தினம் பாப்பாவை கோவிலுக்குஅழைததுக் கொண்டு போகவேண்டுமா?" என்று கேட்டான் கிருஷ்ணமூர்த்தி.

"எனக்கு கையும் காலும் ஓய்ந்துவிட்டது. என்னால் எங்கும் நகரமுடியாது."

"அதோ மாமி குழந்தையை எடுத்து வருகிறாள்" என்றான். மாமியின் தலை எண்ணெயைக் கண்டு குறைந்தது இரண்டு வாரங்கள் ஆகியிருக்கும். சுத்தமான கிழிசல் இல்லாத வெங்காயக் கலர் சேலையைக் கட்டிக் கொண்டிருந்தாள். குழிவிழுந்த கன்னங்களுடன் தீனமான விழிகள், கன்னத்தில் ஒன்றில் நல்ல வெட்டு காயத்தின் ஆறிப்போன வடு—மாமி, பட்டுச் சொக்காய் அணிந்திருந்த குழந்தை சுகுணவை எடுத்துக்கொண்டு அவ்விடம் வந்தாள்.

வனஜாவும் கிருஷ்ணமூர்த்தியும் குழந்தை சுகுணவைக் கவனித்தனர். "வாடி கண்ணு இப்படி வந்து மடியில் உட்கார்" என்றாள் வனஜா.

"ஊஹூம். மாமி உம்மாச்சிக்கு ஓ போ" என்று தனக்குத் தெரிந்த மழலையை வாரிக் கொட்டியது குழந்தை.

"வனஜா, நீ மிகவும் களைப்புடன் இருக்கிறாய். அவரோடு பேசிக்கொண்டிரு. நான் குழந்தையை கோவிலுக்கு அழைத்துச் சென்று திரும்பி வந்து விடுகிறேன். திருஷ்டிகள் எல்லாம் கழித்துவிட்டு எல்லோரும் இரவு சீக்கிரமே சாப்பிட்டுவிடலாம்" என்றாள் மாமி.

"மிகவும் நல்ல யோசனைதான் மாமி. நீங்கள் போகும்பொழுது வேண்டிய பணம் எடுத்துக் கொண்டு போங்கோ. வண்டியில் போய் வாருங்கள்" என்றாள் வனஜா.

வெளியே செல்லும் மாமியைப் பார்த்துக்கொண்டே கிருஷ்ணமூர்த்தி அருகில் வந்து உட்கார்ந்தாள் வனஜா.

"இன்றைய தினம் ஒரு சிறிய கல்யாணம் மாதிரி சுகுணாவின் ஆண்டு விழா கொண்டாடப்பட்டது. நாமிருவரும் புதிய ஆடைகள் உடுத்துக்கொண்டு இருக்கிறோம். ஆனால் மாமி மாத்திரம் பழைய வெங்காயக் கலர் புடவையே கட்டிக்கொண்டிருக்கிறாள். மாமிக்கு நல்ல புடவை இரண்டு வாங்கிக்கொடுக்கக் கூடாதா? அவர் நம்மிடம் காட்டும் அன்பும் நம் குழந்தையிடம் காட்டும் பரிவும் நமக்கு பத்து தாயார்கள் இருந்தாலும் ஈடாகாது" என்றாள் வனஜா.

"சில ஸ்திரீகள் தாங்கள்தான் உலகத்தில் எல்லாவற்றையும் கவனிப்பதாயும் மற்றவர்கள் எல்லோரும் கபோதிகள் என்று நினைக்கின்றனர். மாமி வர இன்னும் ஒரு மணி நேரம் பிடிக்கும். அவள் கதையைக் கூறுகிறேன்."

2

மூன்று வயதில் தாயை இழந்த இந்தப் பாவியாகிய நான், பல வருடங்களுக்கு முன்பு கும்பகோணத்தில் ஒரு உயர்தர பாடசாலையில் ஆறாவது பாரம் படித்துக்கொண்டிருந்தேன். திடீரென்று அப்பாவுக்கு உடம்பு சரி இல்லையென்றும் உடனே புறப்பட்டு வரும்படி ஒரு நாள் கடிதம் வந்தது. உடனே நான் திருநெல்வேலிக்குச் சென்றேன். அப்பா ஆஸ்பத்திரியில் படுக்கையாகப் படுத்துக்கொண்டிருந்தார். அவர் என்னை அழைத்து, அதே வார்டில் இருபதாவது படுக்கையில் இருக்கும் நபரை அழைத்துக் கொண்டு வந்துவிடும்படி கூறினார். அந்தப் படுக்கையில் இருப்பவர் ஒரு ஸ்திரீ. எனக்கு அவளைக் கண்டதும் ஆச்சர்யமேற்பட்டது. நரம்பும் தோலுமாய் இருந்த மாமியை அப்பொழுது கண்டேன். டாக்டர்களை விசாரித்ததில் ஆறு வாரங்களுக்கு முன்பு ஒரு பெரிய கிணற்றில் தவறி விழுந்து காயம்பட்டு சிகிச்சை பெற்று வருகிறாளென்

றும், பூர்ண சுகம் சீக்கிரமே அடைந்துவிடுவாளென்றும் தெரிந்துகொண்டேன்.

அந்த அம்மாவை அழைத்து வந்து அப்பாவிடம் விட்டேன். என்னைச் சற்று வெளியே இருக்கச் சொன்னார். என்றாலும் அவர்கள் பேசியது என் காதுகளில் விழுந்தன.

"அம்மா! நான் உன் மனத்தை அறிந்துகொண்டேன். உன் தாயின் உள்ளம் உன் குழந்தையைத் தேடி அலைகிறது. நீ நல்ல வம்சத்தில் பிறந்தவளென்றும், உன் நேர்மையையும் ஆஸ்பத்திரியிலேயே அறிந்தேன். உயிர் இழக்கும் தருணத்தில் இருக்கும் ஒரு தந்தை நான். தாயின் பரிவும் அன்பும் தாயின் உணர்ச்சியே இல்லாது ஒரு குழந்தையை வளர்த்து வந்தேன் நான். இப்பொழுது இறக்கப்போகிறேன். கபடமில்லாத உன் தாயின் பாசத்தை வீணாக்காதே. என் குழந்தைக்கு அந்த பாக்யம் கிடைக்கட்டும். உண்மையான தாய் உலகத்தில் உள்ள எல்லா குழந்தைகளையும் தன் குழந்தைகள் போல் மதிப்பாள் அல்லவா?"

"இந்த அபாக்கியவதியைத் தாய் என்று அழைத்தாலும் உங்கள் குழந்தைக்கு இன்னும் பல துன்பங்கள் ஏற்படக்கூடும். அப்பேற்பட்ட மகாபாவி நான். நான் தான் என் குழந்தையின் சத்ருவானேன். இது போதாதென்று உங்கள் குழந்தைக்கு கூடவா சத்ருவாகவேண்டும்?"

"நீ வருந்தாதே. நீதான் என் மகனுக்கு ஏற்றத்தாய் என்று நான் கண்டுபிடித்துவிட்டேன். என் பாக்யம் என்னை உயிரிழக்கும் போதாவது கைகொடுத்து உயர்த்திவிட்டது. நீதான் என் குழந்தைக்கு ஏற்ற தாய்—ஒப்பற்ற தாய்" என்று என் தந்தை கூறி வெளியே இருக்கும் என்னை அழைத்து அந்த அம்மணிக்கு அறிமுகம் செய்து வைத்தார்.

"மூர்த்தி! வெகு காலமாக காணாமல் இருந்த இந்த அம்மாள் எனக்குத் தூரத்து பந்து. நம் அதிருஷ்ட தேவதை தான் நான் உன்னைவிட்டுப் பிரியும் பொழுது மாமி வந்துள்ளாள். இவள் தான் இனி உன் தாய். அவளை நீ உன் தாயாரைப்போல் நடத்து" என்று கூறி என் தகப்பனார் என் கையைப் பிடித்து அந்த அம்மாளிடம் ஒப்படைத்து காலமாகிவிட்டார். அந்த அம்மாள் என்னை அணைத்துக் கொண்டு என்னை மகனென்று ஏற்றுக்கொண்டாள். ஆனால் நான் அவளை, மாமி என்று கூப்பிடும்படி உத்திரவு இட்டாள். நான் கும்பகோணத்தில் என் மாமியுடன் வந்து படிப்பைத் துவக்கினேன். உன்னை மணம் செய்துகொண்டவரையில் என்னை வளர்த்த தாய் என் சொந்த அன்னையைக் காட்டிலும் மேம்பட்டவள். எனக்காக எவ்வளவோ கஷ்டங்களை அனுபவித்தாள். உன்னைக் கல்யாணம் செய்துகொள்வதற்கு முன்பு அரைவயிறு தான் சாப்

பிடுவாள். கிழிந்த சேலேதான் கட்டுவாள். உன்னைக் கல்யாணம் பண்ணிக்கொண்டதும் அவள் முகத்தில் ஒரு ஜீவகளை ஏற்பட்டது. அது முதற்கொண்டு அழுக்கில்லாத, கிழியாதபுடவை உடுத்திக்கொள்கிருள். நல்லசாப்பாடு சாப்பிடுகிருள். மூன்று வருடங்களாய் நாம் இருவரும் அவளுடைய குழந்தைகளாய் இருந்து வந்தோம். இப்பொழுது மாமிக்குப் பேத்தியும் கூட சேர்ந்துவிட்டாள். வாழ்க்கையில் இதுதானே அவளுக்கு ஒரு நிம்மதி கொடுக்கக்கூடிய விஷயம். நான் நேற்று இரண்டு புது புடவைகள் வாங்கிக்கொண்டு வந்து எடுத்துக்கொள்ளும்படி கேட்டுக்கொண்டேன்.''

''நீ, வனஜா, சுகுணு, ஆயுசோடே இருந்தால் அதுவே போதும்'' என்று கூறிவிட்டாள். புடவைக்காரனிடம் புடவைகளைத் திருப்பிக்கொடுக்கும்படி ஆயிற்று'' என்று கிருஷ்ணமூர்த்தி கூறி முடிப்பதற்கும் மாமி, குழந்தை சுகுணுவோடு வாசற்படியை அடைவதற்கும் சரியாக இருந்தது.

3

காரியாலயத்தை விட்டு கிருஷ்ணமூர்த்தி வீட்டிற்குள் வந்ததும் ''வனஜா இன்றைய தினம் ஒரு விசேஷம்'' என்றுன்.

''யாராவது ஒரு தடி ராமசாமி விருந்துக்கு வருவான் வேறென்ன இருக்கப்போகிறது?''

''வாஸ்தவமே. விருந்தாளி யாரென்று தெரிந்தால் தடி ராமசாமி என்று கூறினதற்கு வருந்துவாய். உன் அப்பாதான் வருகிருர்.''

''யார் என் அப்பாவா! என் அப்பாவாவருகிருர். நான் நம்ப முடியவில்லேயே. என் கல்யாணத்திற்கு மறு நாள் முதல் நான் காணுத அப்பாவா! தாயின்றி பத்து வருஷங்கள் வளர்த்த என் அப்பாவா வருகிருர். ஒவ்வொரு சங்கராந்திக்கும் ரூபாய் இருநூறு அனுப்பிவைக்கும் என் அப்பாவா வருகிருர்'' என்று அவள் அங்கலாய்த்துக்கொண்டாள்.

''மாமியிடம் கூறலாமா அப்பா வருவதைப்பற்றி'' என்ருள் வனஜா.

''வேண்டாம். மாமிடம் ஒரு விருந்தாளி வருவார் என்று கூறு. அப்பா என்ருல் அவளுக்கும் ஆச்சர்யம் ஏற்படலாம்'' என்ருன் கிருஷ்ணமூர்த்தி.

உள்ளே விர்ரென்று ஓடினுள் வனஜா.

மணி எட்டு அடித்தது. வாசலில் ஒரு 'ஆட்டோரிக்ஷா' வந்து நின்றது. வராந்தாவில் மாமியும் சுகுணுவும் விளையாடிக்கொண்டிருந்தனர். வண்டியிலிருந்து நல்ல உயரமாகவும் கம்பீரப் பார்வையுடனும் முகத்தில் நீளமான தாடியுடன் ஒருவர்

'ஹோல்டாலு'டன் இறங்கினர். அவரே தான் கணேச சாஸ்திரி.

கிருஷ்ணமூர்த்தி கீழே இறங்கி "வாருங்கள்" என்று கூறி அழைத்து வந்தான்.

வனஜாவுக்கு ஒன்றுமே பேச முடியவில்லை. "அப்பா அப்பா" என்று கூறி அவரை நமஸ்கரித்தாள். "அம்மா வனஜா! அது தான் உன் குழந்தை சுகுணவா? நம் குழந்தைதானே" என்று கேட்டுக்கொண்டே குழந்தையை எடுத்துக்கொள்ளப் போனர். அங்கே மாமியைப் பார்த்து திகைத்து நின்று விட்டார்.

"யார் அது. புவனவா! ஆம். பாவம் புவனதான்" என்றது அவரது உள்ளம்.

"புவன! புவன!" என்றுஉரக்கக்கூப்பிட்டார் பழகிய குரலைக் கேட்ட மாமி தலை நிமிர்ந்து பார்த்தாள். ஆம் அவரேதான். அவளது கண்கள் சுழன்றன. ஏதோ பேச வாய் எடுத்தாள். பேச்சு வரவில்லை.

"புவன! இனி நீ தயங்காதே. இனி நீ ஓடவேண்டாம். உன் குழந்தைகள் க்ஷேமமாக இருக்கிருர்கள். நில்" என்று அவள் கையைப்பிடித்து "வனஜா இதோ உன் அம்மாவைப் பார்" என்ருர். வனஜாவுக்கு இதெல்லாம் பெரிய புதிராகத் தோன்றியது. 'மாமி—மாமி' என்ருன் கிருஷ்ணமூர்த்தி. அவன் தன் மாமனரைப் பார்த்து, "இந்தப் புதிரை சற்று விளக்குங்கள்" என்று கேட்டுக்கொண்டான்.

4

"சரியாக முப்பது வருடங்களுக்கு முன்பு நான் சென்னையில் ராஜதானிக் கல்லூரியில் படித்துக்கொண்டிருந்தேன். தங்கசாலையில் ஒரு வீட்டில் குடியிருக்கும்பொழுது அதே வீட்டில் புவனவும் அவள் தாயாரும் குடியிருந்து வந்தார்கள். அப்பொழுது புவனவுக்குப் பதினன்கு வயதிருக்கும். எனக்குப் புவனவை மணந்துகொள்ள வேண்டுமென்று ஆசை இருந்தது. ஆனல் ஒரு விஷயம் தடை செய்யும் போலிருந்தது. புவன ஒன்பது வயதில் நாற்பது வயவரை மணந்து, பதிமூருவது வயதில் விதவையானள். அவள் தாயார் மாத்திரம் அவளை மறு விவாகம் செய்து கொடுக்க சித்தமாயிருக்கிருள் என்று அறிந்தேன். என் மனம் பரிபூர்ணமாக புவனவிடம் அனுதாபத்தைக் காண்பித்தது. குழந்தை உள்ளத்தைக் காட்டும் மாசற்ற முகத்தையும் அழகின் பருவத்தையும் கண்டு வியந்தேன். நான் தைரியமாக புவனவை மணந்துகொண்டதற்கு என் பெற்ருேர்கள், கூடப்பிறந்தவர்கள் என்னைத் தூற்றித் துறந்தார்கள். நான் யாருக்கும் பயப்படவில்லை. அக்காலத்தில் இம்மாதிரி யாரும் துணிந்து ஒரு காரியத்தைச் செய்யமாட்டார்

கள். என் மேல் படிப்பிற்காக புவனாவின் தாயார் எவ்வளவோ பண உதவி செய்தாள். எம். ஏ. பரீக்ஷை முதல் வகுப்பில் தேறினேன். திருச்சியில் பேராசிரியராக வேலை பார்த்து வந்தேன். பிறகு வனஜாவும் பிறந்தாள். பல வருடங்கள் சென்றன. சமூகம் எங்கள் தோஷத்தை மறந்து கொண்டே வந்தது. பிரபல மிட்டாதார் கிருஷ்ணய்யர் மகனுக்கு வனஜாவைக் கொடுப்பதாக நிச்சயமாகியிருந்தது. வனஜா வயதில் சிறியவளாயிருந்தாலும், நல்ல இடம் கிடைக்கிறதென்ற ஆசையினால், அவளுக்கு மணஞ் செய்விக்க இஷ்டப்பட்டேன். கல்யாணத்திற்கு முன்பு எப்படியோ கிருஷ்ணய்யரின் சகாக்களின் பழிச் சொற்களை புவனாவால் ஏற்க முடியவில்லை. புவனா தான் உயிரோடு இருக்கும் வரையில் தன் குழந்தைக்கு ஒரு இழிவு ஏற்படத்தான் செய்யும் என்று நினைத்து "நான் வாழ்க்கையிலிருந்து மறைகிறேன். இனியாகிலும் என் குழந்தை வனஜா இழிச் சொல்லின்றி வாழட்டும்' என்று எழுதி வைத்துவிட்டு புவனா மறைந்துவிட்டாள். என்ன தேடியும் புவனா அகப்படவில்லை. பிறகு நான் வேலூரில் உள்ள ஒரு கலாசாலையில் பேராசிரியனாக மாற்றப்பட்டேன். வனஜாவைப் படிக்க வைத்தேன். அவள் பி. ஏ. படிக்கும் பொழுதுதான் கிருஷ்ணமூர்த்தியை மணஞ்செய்து கொண்டாள்.

என் பளு இறங்கிவிடவே நான் பிறகு பாட்னாவிற்குச் சென்று ஒரு சந்நியாசி போல் பொதுஜன சேவையில் ஈடுபட்டு வாழ்கிறேன். உங்கள் குழந்தையின் ஆண்டு விழா அழைப்பு வந்தது. அங்கிருந்து புறப்பட்டு இங்கு வந்தேன். வந்த இடத்தில் என் உலகமாகிய புவனாவைக் கண்டேன்' என்றார் கணேச சாஸ்திரிகள்.

5

உடனே இதைக் கேட்டுக் கொண்டிருந்த புவனா "இது வரையில் அவர் கூறியதைக் கேட்டீர்கள். என் உயிரை மாய்த்துக்கொள்வோம், சமூகம் வனஜாவைப் பழிக்க இனி இடங் கொடுக்கக்கூடாது'' என்று நினைத்துக்கொண்டு என் மனம் போனபடி அலைந்தேன். பிச்சை யெடுப்பதிலும் ஒரு வெறுப்பைக் கண்டேன், ரெயிலில் வேண்டிய அளவுக்கு டிக்கட்டு இல்லாமல் பிரயாணம் செய்தேன். திருநெல்வெலி வயல் காட்டுக்குச் சென்று மனமுடைந்துபோய் ஒரு கிணற்றில் குதித்தேன். உலகம் மறைந்தது, ஆனால் மறுபடியும் ஒரு ஆஸ்பத்திரி உலகம் தோன்றியது. ஆஸ்பத்திரியில் தாயின் உள்ளம் பொங்கி வழிந்தது. அவற்றை நன்கு கவனித்தார் கிருஷ்ணமூர்த்தியின் தந்தை. என் சகோதரர்போல் எனக்கு ஆறுதல் அளித்தார். அவர் இறக்கும்

பொழுது தன் மகனை எனக் களித்தார். ஒரு மகனை வசையின்றி இழிவின்றி வளர்க்க என் தாயுள்ளம் ஒத்துக்கொண்டது. அதனால் என் உயிரும் தங்கிற்று. கிருஷ்ணமூர்த்தி மணக்கோலத்துடன் வீட்டுக்கு வந்தான். ஆம், கண்டேன் வனஜாவை. எனக்கு உலகத்தில் இருக்க கடவுளுக்குப் பிரியம் உண்டு என்று என் அந்தராத்மா கூறிற்று. பிள்ளை, பெண், பேத்தி கடைசியாக என் தெய்வத்தையும் கண்டேன்'' என்று கூறி புவனா, கணேச சாஸ்திரியை நமஸ்கரித்தாள்.

மறுதினம் கிருஷ்ணமூர்த்தி ஒரு பெரிய விருந்துக்கு ஏற்பாடு செய்தான்.

உலோகங்களுக்கும் உண்டா களைப்பு ?

களைப்பு மனிதர்களுக்கோ அல்லது மிருகங்களுக்கோ மட்டுந்தான் ஏற்படுமென்று நினைப்பது தவறு. உலோகங்களுக்கு களைப்பு உண்டு என்பது விஞ்ஞானிகளின் தீர்ப்பு.

களைப்படைந்த நிலைமையின் அடையாளம் சாதாரணமாகச் செய்யும் சாதனைகள் சிரமமாகத் தோன்றுவதோ செய்ய முடியாமலிருப்பதோ தான். தொடர்ந்து சிறிது நேரம் உழைப்பின் பயனாய் நம் உடலில் ஏற்படும் மாறுதல்களினால் தான் களைப்பு ஏற்படுகிறது. இவ்வாறேதான் உலோகங்களுக்கும் களைப்பு உண்டாகிறது. எஃகினால் தயாரிக்கப்பட்ட ஒரு க்ஷவரக் கத்தியை நீண்ட நேரம் தொடர்ந்து உபயோகித்த பின்பு அதை எவ்வளவு தான் தீட்டினாலும் அது ரோமத்தை நீக்காமலிருப்பதைக் காண்கிறோம். இந்தச் சமயத்தில் தான் இந்த உலோகத்திற்குக் களைப்பு ஏற்பட்டிருக்கிறதென்று சொல்ல வேண்டும்.

அநேக ஆயிரம் தடவைகள் சோதனைகள் செய்து இந்த உண்மையைக் கண்டுபிடித்துள்ளார்கள் நிபுணர்கள். சமீபத்தில் நடந்த சில விமான விபத்துக்களைப் பற்றி விசாரணைகள் நடந்து கொண்டிருக்கும்போது அந்த விபத்துக்களுக்குக் காரணம் அந்த விமானங்களின் அமைப்பில் ஏராளமாக உபயோகித்துள்ள எஃகினால் தயாரிக்கப்பட்ட பாகங்களுக்கு நேரிட்ட களைப்பு தான் என்று அநேக நிபுணர்கள் அபிப்பிராயப்பட்டுள்ளார்கள்.

காலச் சக்கரம்

இந்தக் குறிப்பு எழுதும்போது மாலை நேரம்—மணி ஐந்து. இதே நேரத்தில் கல்கத்தாவில் மணி ஐந்தேமுக்கால், சிங்கப்பூரில் மணி ஆறரை மணி. மேற்கு ஆஸ்திரேலியாவில் எட்டுமணி. மத்திய ஆஸ்திரேலியாவில் மணி ஒன்பது. கிழக்கு ஆஸ்திரேலியாவில் மணி பத்தரை. நியூ பவுண்ட்லாந்து தீவுகளில் மணி பதினொன்றை—நடுநிசி. அலாஸ்காவில் மணி ஒன்றிலிருந்து இரண்டு வரையிலும்.

அமெரிக்காவிலுள்ள வான்கோவரில் மணி மூன்று. கலிபோர்னியாவில் மணி நான்கு. மெக்ஸிகோவில் மணி ஐந்து. பனமாவில் மணி ஆறு. கயானா தேசத்தில் மணி ஏழு. அமேஜான் நதிப் பிரதேசத்தில் மணி ஒன்பது. ரியோ நகரத்தில் மணி பத்து. மேற்கு ஆப்பிரிக்காவில் மணி 11 முதல் பன்னிரண்டு வரையிலும். தென் ஆப்பிரிக்காவில் மணி ஒன்று. கிழக்கு ஆப்பிரிக்காவில் மணி இரண்டு. அரேபியா ராஜ்யத்தில் மணி மூன்று. கராச்சி நகரத்தில் மணி நான்கு. சென்னையில் மணி ஐந்து.

கிரீன்லாந்து தேசத்திலும் ஒரே மாதிரியான மணி கிடையாது. கானடா தேசத்தில் ஆறு விதமான காலநிர்ணயத்தை அனுசரிக்கிறார்கள். அமெரிக்காவில் நான்கு விதமான கால நிர்ணயத்தை அனுசரிக்கிறார்கள்.

★

ஆல்ப்ஸ் மலைச்சாரலிலிருக்கும் கிராமங்களின் சிருங்காரச் சூழ்நிலைகள், குதூகலமான மலைவாசஸ்தலங்கள், பரபரப்பு மிகுந்த ஸ்விஸ் வியாபார நகரங்கள் இவற்றிற்குப் பின்னால் சோகத்திற்கு உரிய சூழ்நிலைகளும் இல்லாமலில்லை.

இந்தச் சின்னஞ்சிறு குடியரசு நாடு இயற்கை எழில் பொருந்தியது. பிரம்மாண்டமான ஆல்ப்ஸ் மலைப்பிரதேசத்திலமைந்த இந்த நாட்டில் நிலக்கரி, எண்ணெய், உலோகக் கனிகள் முதலிய சுரங்கச் செல்வம் ஏதாவது இருக்கிறதா என்பதை எப்படிப்பட்ட விஞ்ஞான நிபுணர்களாலும் அறியக்கூடவில்லை. ஸ்விட்ஜர்லாந்தில் பயிர் சாகுபடி செய்யத் தகுதியான சொற்ப அளவு பூமி பரிபூரணமாகப் பயன்படுத்தப்படுகிறது. எனினும் அதிலிருந்து கிடைக்கும் உணவுப் பொருள்கள் ஐந்து மிலியன் ஸ்விஸ் மக்களில் ஒரு சிறு பகுதியினருக்குக்கூட போதாது.

இத்தகைய இயற்கையான ஏழ்மையிலும் ஸ்விட்ஜர்லாந்து ஒரு நுட்ப யந்திரத்தொழிலில் செழிப்புற்று விளங்குகிறது. யந்திர

அமைப்புத் திறமையுடன், நேர்மை பிறழாமல் உருவாக்குவதில் அதி சமர்த்தர்கள். இயல்பாகவே கடின உழைப்பில் பிரியம் உள்ளவர்கள். உலகமுழுவதற்கும் நுட்பமான யந்திரசாதனங்களை ஏற்றுமதி செய்து புகழும் செல்வமும் பெருக்கியுள்ளது இந்நாடு.

இயற்கையின் சதி போதாதென்று மனித வர்க்கத்தினரும் சில பகுதிகளிலிருந்து ஸ்விஸ் நாட்டின் இயற்கை வர்த்தக வளர்ச்சிக்கு முட்டுக்கட்டை போட்டு வருகின்றனர். ஆனால் எத்தகைய முட்டுக்கட்டைக்கும் பயந்தவர்களல்ல ஸ்விஸ் மக்கள். எவ்வளவு இடைஞ்சல்களிருந்தாலும் ஸ்விட்ஜர்லாந்து மேன்மேலும் அதிகமான நுட்ப யந்திரக் கருவிகளை உற்பத்தி செய்து உலக முழுவதிலும் அவற்றின் மேன்மையை அறிந்த வாடிக்கைக்காரர்களுக்கு இடையறுமல் விற்பனை செய்து வரும்.

★

ஒரு குண்டூசியின் தலைப்புறத்தில் கடவுள் வணக்கப் பாடலை செதுக்குவது கூட மிக எளியகாரியம்தான்! யாருக்கு? பூதக் கண்ணாடியின் உதவியினாலன்றிக் காண்பதற்கும் எளிதில்லாத நுட்பமான கடியார உறுப்புகளை அனயாஸமாகத் தயாரிக்கும் ஸ்விஸ் கடியார உற்பத்தியாளருக்குத் தான்.

சிக்கல் நிறைந்த யந்திர அமைப்புள்ள ஸ்விஸ் கடியாரங்களின் சகஜமான உன்னத உறுப்புக்களான சின்னஞ்சிறு திருகாணிகளை ஒரு விரல் உறைக்குள் 30,000 எண்ணிக்கை நிரப்பிவிடலாம். ஹேர் ஸ்பிரிங்குகளோ மனித ரோமத்தின் கனத்தில் மூன்றிலொருபங்கு கனமேயுள்ளவை.

கடியாரத் தயாரிப்பாளர் தமது அற்புத வேலைகளை நடத்துவதற்கான கருவிகரண உலகமே நமது வெறுங்கண்களுக்குப் புலப்படாதவை. மிக நுட்பமான உறுப்புகளுள் சிலவற்றை மைக்ரான் அளவுக் கணக்கைக்கொண்டு உருப்படுத்த வேண்டியிருக்கிறது. மைக்ரான் ஒரு மீட்டரில் மிலியனில் ஒரு பாகம். பார்வைக்கு சிறு மணல்களைப்போலவே யிருக்கும். இம்மாதிரி மணல்போன்ற உறுப்புகளை உபயோகித்து இன்று ஸ்விஸ் மக்கள் எந்தக் காலத்திலும் சாதிக்கப்படாத காலக்கணக்கு நேர்மையை சாதித்து வெற்றி பெற்றுள்ளனர்.

கலிகாலமல்லவா!

க. சோமசுந்தரம்

காலஞ்சென்ற தலைவர் ஸ்ரீ சத்தியமூர்த்தியின் பேச்சுத் திறமை பிரசித்தி பெற்றது. அதிலும் சட்டசபையில் அவர் கேட்ட கேள்விகளும் குறுக்குக் கேள்விகளும் அப்போதிருந்த பிரிட்டிஷ் சர்க்காரின் பிரதிநிதிகளைப் பீதியிலேயே வைத்திருந்தன.

சத்தியமூர்த்தியின் கேள்விகளில் அறிவுத்திறமை பிரகாசிக்கும்; குத்தலிருக்கும்; எதிரிக்கு நாக்கைப் பிடுங்கிக்கொண்டு சாகலாம் போல அவமான உணர்ச்சியை உண்டாக்கும். ஆனால் கேள்வி கேட்கப்பட்டவர்கூட அவருடைய மேதையைப் பாராட்டி நட்புரிமை கொண்டாடுவர். சத்யமூர்த்தி அறிஞராக இருந்தது மட்டும் அல்ல; சிறந்த ரசிகராகவும் இருந்தார் என்பது அவரை அறிந்த அனைவரும் அறிவார்கள்.

ஒரே ஓர் உதாரணம்: மத்ய சட்டசபையில் சத்யமூர்த்தி அங்கத்தினராயிருந்தபோது, இந்திய சர்க்காரின் சட்ட மந்திரியாக விளங்கியவர் சர் என். என். சர்க்கார் என்பவர். ஒரு விவாதத்தில் சத்யமூர்த்தி தமது பாணங்களைத் தொடுத்தார்:

ஸ்ரீ சத்தியமூர்த்தி: சட்ட மெம்பர் தமது சட்டஞான மனச்சாட்சியை உபயோகப்படுத்த வேண்டும்.

ஸ்ரீ சர்க்கார்: எனக்கு மனச்சாட்சி உண்டென்று கனம் அங்கத்தினர் குற்றம் சாட்டுகிறாரா?

ஸ்ரீ சர்க்கார் வாய்மூடவில்லை. சத்தியமூர்த்தி குதித்தெழுந்தார். "தப்புத்தான்; மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறேன்" என்று கம்பீரத்தோடும் விநயத்தோடும் கூறினார்.

புதைபாணம் போலெழுந்த இந்தப் பதில் சட்டசபைவர்ணத்தில் பல வர்ணஜால வாணங்களை உதிர்த்துவிட்டது. சபையோடு சேர்ந்து ஸ்ரீ சர்க்காரும் சிரித்தார்.

இத்தகைய ரஸானுபவத்தில் தோய்ந்த ஞானம் தமிழர்களின் பாரம்பரிய சொத்து, செப்புக் கம்பிகளில் மின்சாரம் ஓடுவது போல, தமிழருடைய ரத்த நாளங்களில் அது கலந்து இடையறாது

பாய்ந்துகொண்டே இருக்கிறது. ஸ்ரீ சத்தியமூர்த்தியிடம் அது ஜ்வலித்தது, மின்சார விளக்கு பிரகாசிப்பதுபோலே. அவ்வளவு தான்.

★

கூடல் ஆலவாய் என்பது இப்போது மதுரைமாநகரமாக விளங்குகிறது. அந்நகரம் தோன்றுவதற்கு முன்பு அது கடம்ப மரங்கள்டர்ந்த காடாக இருந்தது எனத் திருவிளையாடல் புராணம் உரைக்கிறது. இதனல், அதற்குக் கடம்பவனம், கடம்பாவி என்றெல்லாம் பெயருண்டு. மேலும், பாண்டிய வம்சம் தோன்றியது முதல் பிரிட்டிஷ்காரர் இந்தியாவை அடிமைப்படுத்தும் வரையில் மதுரைதான் தென்னட்டின்—பாண்டியநாட்டின்—தலை நகராயிருந்தது. தமிழ் வளர்த்த சங்கம் இருந்ததும் மதுரைதான். அது தனிச்சிறப்புப் பெற்று விளங்குகிறது.

மதுரைக்கு மற்ருெரு பிரசித்தமும் உண்டு. காசி என்றதுமே நம்மனத்தில் உதிப்பது விசுவநாதர் ஆலயம்தான். ராமேச்வரம் என்ருல் ராமநாதர்தான் தோன்றுவார். மற்ற ஸ்தலங்களும் இப்படித்தான். ஆனல், மதுரை என்ருலே மீனட்சி அம்பிகையின் திரு நாமம் தான் தனித்து எழும். இன்றல்ல; எப்போதுமே அப்படித்தான்.

மங்கையர்க்கரசியின் அழைப்பை ஏற்று மதுரை வந்தபோது தூரத்திலேயே கோபுரதரிசனம் ஆயிற்று. கூடவந்த குலச்சிறையார் அதுதான் ஆலவாய்க் கோயில் என்று சுட்டினர், சம்பந்தர் மனக்கண்ணில் அங்கயற்கண்ணி தன் திருக்கோலம்தான் சட்டென்று எழுந்தது.

★

ஒரு சிவபக்தர் க்ஷேத்ராடனம் கிளம்பினர். பல சிவஸ்தலங்களைத் தரிசித்துக்கொண்டே மதுரை வந்து சேர்ந்தார். மதுரை அரசியை, காஞ்சனமாலையின் கண்மணியை, உலகின் அன்னையை அங்கையற்க்கண்ணியைத் தரிசித்தார். உலக நாதனை சொக்கப் பெருமானைச் சொக்க வைத்த அம்பிகையின் அருட்காட்சி பக்தரையும் பரவசப்படுத்தியதில் வியப்பில்லை. ஆடினர்; பாடினர்; துதித்தார்; பக்திப்பெருக்கால் அழுதார். அம்மையை அணி செய்த மூக்குத்தியின் ஒளியில் தோய்ந்தார்.

ஒரு வழியாகப் பக்தர் கோயிலைவிட்டுக் கிளம்பினர். உள்ளப் படத்தில் பதிந்துபோயிருந்த அம்மையின் திருக்கோலத்தில் லயித்த படியே தம்மை மறந்து, தம் விடுதியை நோக்கி நடந்தார்.

★

"கோயிலிலிருந்தோ"

பாதி பரிகாசமாகவும் பாதி நட்புரிமையோடும் வந்த இக் கேள்வி நம் பக்தர் காதில் விழுந்தது. அவர் தம் மன உலகத்தி லிருந்து இந்நில உலகத்திற்கு வந்தார். திரும்பிப் பார்த்தார்.

கேள்வியை விடுத்தவர் பக்தரின் நன்பர். ஆனால், ஒரு மாதிரி. கோயில் குளத்தில் எல்லாம் நம்பிக்கையற்றவர். பக்தருக்கும் இது தெரியும். என்றாலும் மரியாதை என்றென்று இருக்கிற தல்லவா?

அரைமனத்தோடு "ஆமாம்" என்று பதிலளித்தார் பக்தர்.

நண்பர் பேசாமல் போயிருக்கலாம். ஆனால், அவருக்கு வம்பில் கொஞ்சம் பிரியம் அதிகம்.

"என்ன சொன்னாள் உங்கள் மீனாட்சியம்மை?"

குறும்பும் குத்தலும் நிறைந்த இந்தக் கேள்வி பக்தருக்குச் சிறிது மன எரிச்சலை விளைவித்தது. சுடச் சுடப் பதில் கொடுக்கத் தீர்மானித்தார். பண்புடையவர் அவர். எனவே, தம் உணர்ச்சி களை அடக்கிக்கொண்டு அமைதியோடேயே பேசினார்.

"வராமல் என்ன? என்னுடைய சகலமும்—இன்பமும் துன்பமும் மற்றெல்லாமும்—அவரேயல்லவா? மகனைத்தேடி அன்னை வருவதும், மனங்குளிரப் பேசுவதும், என் தலைமீது தன் திருவடிகளைச் சூட்டுவதும், வேண்டியதெல்லாம் தருவதும் சகஜம் தானே!"

ஒன்று சொல்ல மறந்துவிட்டேனே. நம் பக்தர் சிறந்த கவி ஞரும் கூட. காளமேகப்புலவர் செப்பியதுபோல, 'இம்மென்னு முன்னே எழுநூறும் எண்ணூறும், அம்மென்றால் ஆயிரமும்' செய்யுள்கள் இயற்றக்கூடிய சமர்த்தர். இந்தப் புலமையோடு உயர்ந்த ரசிகத்தன்மையும் உடையவர்.

ஆகவே, பக்தரின் பதில் பாட்டாகவே வந்தது.

பொன்போலும் கூடல்
பிராட்டியைச் சேவிக்கப்
போம்பொழுதில்
என்பால் வரவும்
எதிர்நின்று பேசவும்
என்தலைமேல்
தன்பாதம் சூட்டவும்
கேட்டது எலாம் தந்
தருளவுமே.........

[பொன்போலும் - பொன்னைப்போல் மதிப்புயர்ந்த கூடல் - மதுரை.]

பாட்டு முடியும் வரையில் நண்பரால் காத்திருக்கமுடியவில்லை. பக்தரின் அழுத்தமான பேச்சு வேறு அவரைத் திணறடித்தது. 'கல்லுச்சாமி வருகிறதாவது, பேசுகிறதாவது, நம்ப முடியவில்லை. என்றாலும் பக்தரின் குரலில் தொனிக்கும் யதார்த்தத்தைக் கவனித்தால் நம்பாமலிருக்கவும் முடியவில்லை. ஆகையால் குறுக்கு வழியைக் கையாண்டார். அதாவது பக்தரின்பேச்சில் இடைமறித்தார்.

"அப்போது மீனாட்சி நேரில் வந்தாள். உங்களிடம் பேசினாள்" என்று சொல்லுகிறீர்கள்?

பக்தர் பேசாமலிருக்கும்படிக் கையமர்த்தினார்.

கவிதையை மேலும் தொடர்ந்தார்.

அன்பாக வந்திடுவாள்.

இந்த அடிகளைக் கேட்டதும் நண்பருக்குக் கொஞ்சம் தெம்பு வந்தது. முகமும் மலர்ந்தது. 'அதுதானே பார்த்தேன். கல்லுச் சாமியாவது. வருகிறதாவது; இந்தப் புலவர்களே பொல்லாதவர்கள். ஒரு நிமிஷத்தில் எப்படிக் குலுக்கிவிட்டார் இந்தப் பக்திப் புலவர்!'

நண்பரின் முகமலர்ச்சியையும், அதன் வழியாக அகத்தில் ஓடும் எண்ணங்களையும் கண்டு கொண்டார் பக்தர். தமக்குள்ளே குறும்பாக நகைத்துக் கொண்டார். பாட்டையும் முடித்தார்.

கலிகாலம் எனவிங்கே
அஞ்சுவளே

"வரக்கூடியவர்தான் அன்னை. வந்துதான் இருப்பாள். அதில் எனக்குச் சந்தேகமே கிடையாது. ஆனால், ஏன் வரவில்லை தெரியுமா? இது கலிகாலம். அதனால்தான் இங்கு வரவில்லை, என்பதுபோல பாடலின் ஈற்றடிகள் தொனிக்கின்றன அல்லவா?

நண்பருக்குத் தொனிப்பொருள் விளங்கவில்லை. 'பைத்தியக்காரர்கள்! சர்வசக்தி வாய்ந்தவளுக்குக் கலிகாலத்திடம் மட்டும் அச்சமாமே'.

நண்பரின் முகத்தில் படர்ந்த ஏளன நகைப்பைப் பக்தர் கண்ணுற்றார். மீண்டும் பாட்டை முழுவதும் பாடினார்.

பொன்போலும் கூடல்
பிராட்டியைச் சேவிக்கப்
போம்பொழுதில்,
என்பால் வரவும்,
எதிர்நின்று பேசவும்,
என் தலைமேல்
தன்பாதம் சூட்டவும்,
கேட்ட தெல்லாந்தந்து
அருளவுமே
அன்பாக வந்திடுவாள்:
கலிகாலம் எனவிங்கே
அஞ்சுவளே!

கடைசி அடியை அழுத்தி உச்சரித்த பக்தர் நண்பரை ஏறிட்டு நோக்கினார். அப்பார்வையில், பாட்டின் தொனியில் "காலமும் கலிகாலம். அதோடில்லை. நீங்களும் வேறு இருக்கிறீர்கள் எப்படி வருவாள் அன்னை?" என்ற கருத்து தொனிப்பதை நண்பர் உணர்ந்தார். அவர் வாயடைத்துப் போயிற்று. தலையும் தானாகவே குனிந்தது.

★

தனிப்பாடல் தொகுதியில் சேர்க்கப் பெற்றிருக்கும் இப்பாடலைப் பாடிய புலவர் பல பட்டைச் சொக்கநாதப் புலவர் எனப்படுகிறார். பாட்டின் கருத்தில் புலமையோடு ரசிகத் தன்மையும் அடக்கும் திறமையும் கலந்து மிளிருகின்றன அல்லவா?

தொடர் நாவல்

உயிர்க்கனல்

"ஸ்ரீ ரா"

அத்தியாயம் 7

எந்தப்படியில் எதை வைப்பது போன்ற விவாதங்கள் அடிக்கடி நடந்து பலவிதமான முடிவுகள் இழைந்து ஒன்ருகிக் காரியங்கள் சுமுகமாக செவ்வனே நடந்துவந்தன. சபேசய்யரது உண்ட—பின்—தூக்கம் இந்த நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டுத்தான் இருந்தது. தங்கம்மாளுடன், சரோஜாவும் இதன் காரணபூதத்தில் கலந்திருந்ததால் அவர் தமது சங்கடத்தை சகித்துக்கொண்டு அறையில் புரண்டு கொண்டிருந்தார்.

பிற்பகல் இரண்டு மணி சுமாருக்கு முக்கால்வாசி வேலை பூர்த்தியாகிவிட்டது. கீழ்ப்படியில் சோழிகளையும், கழக்கோடி, சங்குகளையும், கிளிஞ்சல்களையும் பரப்பிவிடவேண்டும். தங்களது கொலு வியாபார வெற்றியின் சின்னங்களான, இந்தக் கதையின் பிரதான பாத்திரங்களான, நாயையும் பூனையையும் சரியான இடத்தில், தக்க பின்னணியுடன் வைக்கவேண்டும். இதுதான் பாக்கியிருந்தது.

திட்டங்கள் அரை வேக்காட்டில் தான் இன்னும் இருந்தன. சரோஜா சற்று ஓய்வெடுத்துக் கொள்ளும் முறையில் நாயையும், பூனையையும் மடிக்கொன்ருக எடுத்து வைத்துக்கொண்டு கீழே உட்கார்ந்தாள். அவற்றின் கண்கள், மூக்கு, காதுகள், இவற்றை உன்னிப்பாகப் பரிசீலனை செய்யலாஞள். அவளது அந்தச் செய்கை வெறும் தற்செயலான செய்கை தான்.

அந்தப் பொம்மைகளில் பங்காரு கண்ட வேதாந்தத்தை சரோஜா காணவில்லை, உயிரிலிருந்து பெயர்த்தெடுத்த அவ்வடிவங்களில் மனிதக் கைத்திறனைத் தான் கண்டாள் அவள். அனுமான பூர்வமான கோடான கோடி செயல்களில் இதை ஒ வகையாக ஏற்ருள்.

உயிர், உயிரின்மை என்ற பேதங்களின் பின்புறத்தில் மறைந்திருந்த ஒரே தத்துவத்தை அவளால் உணரமுடியவில்லை. உயிர்க் குழாத்திலிருந்து மாதிரி எடுத்துச் சமைத்த உயிரற்ற பொம்மைகளைப் படியிலடுக்கிக் கோலாகலம் செய்யும் ஒரு மரபைச் சேர்ந்த அவளிடம் இந்த உணர்வை எதிர்பார்ப்பது ரொம்ப அதிகம் தான்; இருந்த போதிலும் அந்த இரண்டு பொம்

மைகளிடத்தும் அவள் காட்டிய அக்கரை அதிகம் தான். தன் மயம்—தன் வயம் என்ற உணர்ச்சிக்கோப்பிலிருந்து இது உருவாகியிருக்கலாம்!

வெங்கிட்டுவின் குதூகலமான கூக்குரல் வாயிலில் ஒலித்த போது சரோஜாவின் ஈடுபாடு கலைந்தது. அந்தச் சிதறலைத் தாங்கக்கூடிய தீவிரம் அதில் இல்லாமலிருந்திருக்கலாம்.

"அம்மா, இன்னிக்கு மத்தியானம் பள்ளிக்கூடமில்லை! எங்க பள்ளிக்கூடத்துலே ஒரு பூகோள வாத்தியார் செத்துப் பேட்டாராம்" என்று ஒரேயடியாக அடித்தான் அவன். இதை விடச் சிறிய, பலக்குறைவான ஆயுதங்களைப் பிரயோகித்து வெற்றியைச் சந்தேகத்தில்விட்டு விட அவன் விரும்பவில்லை. உபாத்தியாயர்களின் உயிரைப் பற்றி அவனுக்கிருந்த அக்கரையும் இதற்கு உதவியாகத்தான் வாய்த்தது!

புத்தகங்களை வீசி எறிந்து விட்டுத் தாயின் பக்கத்தில் மண்டியிட்டு உட்கார்ந்தபடியே அவன் மடியிலிருந்த பொம்மைகளை எடுத்துப் பரிசீலனை செய்ய ஆரம்பித்தான். "இதை எங்கெம்மா வைக்கப்போறே?" என்று ஆவலாகக் கேட்டான். இந்தக் கேள்வியின்மூலம் அது வரையில் தீராமலிருந்த அந்தப் பிரச்னையில் தற்செயலாகக் கலந்துகொண்டான்.

கடைசியில் மூன்றாவது படியில் நடுவில் அந்த இரு பொம்மைகளையும் ஒன்றையொன்று நேரே நோக்குமாறு வைத்து விடுவதென்று முடிவாயிற்று. இது வெங்கிட்டுவின் அபிப்பிராயம்.

வெங்கிட்டுவின் அபிப்பிராயம் மூன்றாவது படியுடன் நின்றுவிட்ட காரணம் தெளிவானது. எந்தக் கணத்திலும் தான் விரும்பினால் சுலபத்தில் எட்டி எடுத்துவிடக்கூடிய அதிகபட்ச எல்லையைத் தான் அவன் குறிப்பிட்டு வெற்றியும் பெற்றான்.

இரவு ஊர்ந்து வரும் இனிமையான இடைவேளையில் அந்த வீட்டின் கூடம் ஒரு கலியாணக் களையுடன் திகழ்ந்தது.

கோமளாக்களும், ஸரசாக்களும் அங்கே பாடிக்கொண்டிருந்தார்கள். நடுத்தர வயதுள்ள மாமியார்கள்—தங்கம்மாக்கள்—தத்தம் குடும்ப விவகாரங்கள், பிள்ளை, நாட்டுப் பெண்களின் சமர்த்து ஆகியவைபற்றி சாங்கோபாங்கமாகப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

கொலுவில் அமர்ந்திருந்த அந்தப் பூனையையும் நாயையும் கோமளாக்களும் சரஸாக்களும் கவனிக்கவேண்டுமென்று ஸரோஜாவும், சமகாலத்து மாமியார்கள் தனது விரக்தியற்ற லோகாயத மனப்பான்மையை அறிய வேண்டுமென்று தங்கம்மாளும் அக்கறைகொண்டு அந்த பொம்மைகளைத் தாமாகவே அறிமுகம் செய்து வைத்தார்கள்.

ஆனால் வெங்கிட்டு எதிர்வீட்டு சியாமளிக்கு அப்பொம்மையின் பெருமை பற்றி கர்வத்துடன் விளக்க எடுத்துக்கொண்ட அக் கறைக்கு முன் இது ஒன்று மில்லை என்று தான் கூறவேண் டும். எல்லோரும், முக்கியமாகத் தங்கம்மாளும், ஸரோஜாவும்—பேச்சில் ஸ்வாரஸ்யமாக இறங்கி யிருந்த வேளைகளில் அந்தப் பொம்மைகளைக் கையிலெடுத்து சியாமளியிடம் கொடுத்து ரஸிக்க வைத்துப் பின்னர் திரும் பவைத்து விடுவது வரையில் அந்த அக்கறை நீண்டுசென்றது.

அன்றிரவு ஒன்பதரை மணி வரை இந்தக் கோலங்கள் நடந் தன. ஒன்பதரை மணிக்கு பால சுந்தரம் கம்பீரமான பார்வை யுடன் உள்ளேநுழைந்து ஸரோ ஜாவைப் பார்த்து ஒரு புன்முறு வல் பூத்துவிட்டுத் தன்னறைக் குச் சென்றான்.

அவனது வரவைத் தனது சுதந்திரத்தின் கால வரம்பாக நிச்சயித்துக்கொண்டு மகாநாடு நடத்திக் கொண்டிருந்தவர்கள் கால அறிவிப்பை உணர்ந்து ஒவ்வொருவராக விரைவில் நகர வாரம்பித்தார் கள்.

இடையில் வீட்டுக்குச் சென்று வெங்கிட்டுக்கு ஒரு சரகுத்தொன் னையில் சுண்டல் கொண்டு திரும் பினாள் எதிர் வீட்டு சியாமளி. குசுகுசுவென்று அவளிடம் ஏதோ பேசிக்கொண்டு நின்றி ருந்த வெங்கிட்டுவின் காதில் ஸரோஜாவின் உணவு வேளை அறிவிப்பு விழுந்தது.

"சியாமளி, நான் சாப்டுட்டு வந்துடறேன். நீயும் வீட்டுக்குப் போய்ட்டு வா" என்று அவசர மாகக் கூறிவிட்டு உள்ளே ஓடி னான் அவன்.

நடுக்கூடத்தில் அவன் ஓடிக் கொண்டிருந்தபோது அங்கே நிலவியிருந்த இருட்டினூடே "சரி, ஆகட்டும். நீ சொன் னயே...ஊம்..." என்ற ஞாப கப்படுத்தலும் காதில் விழுந்தது.

அத்தியாயம் 8

பின் கட்டில் எல்லோரும் உணவு மகாநாடு கூட்டியிருந் தார்கள். எனவே கூடத்து விளக்கு அணைக்கப்பட்டிருந் தது. கொலு முழுவதும் இரு ளில் நிம்மதியாக அமர்ந்திருந் தது. மானிட சேஷ்டைகளைப் பற்றி நிதானமாக நினைத்துப் பார்க்க அந்தக் கொலுவின் பாத்திரங்களுக்கு நிம்மதியைத் தான் அளித்திருக்கும் அந்த இருள்.

மற்றவரெல்லாம் உண்டியின் ஆரம்ப பாகத்தில் ஈடுபட்டிருந்த போது வெங்கிட்டு தனக்கென்று கிண்ணத்தில் வைக்கப்பட்டிருந் ததை அருந்திவிட்டு விரைவில் வாயிற் பக்கம் ஓடி வந்தான். சியாமளி ஆவலுடன் திண்ணை யில் உட்கார்ந்திருந்தாள். இருவ ரும் சேர்ந்து அவசர அவசர மாகக் கூடத்துக்கு வந்தார்கள்.

"என்னடா . இருட்டா இருக்கே," என்றாள் சியாமளி

"சாப்பிடப் போரச்சே விளக்கை அணைச்சுட்டுப் போய்ட்டா எல்லாரும்" என்ருன் வெங்கிட்டு.

"விளக்கைப்போடு, பின்னே" என்று இறைஞ்சினள் சியாமளி.

"எப்படிப் போடமுடியும். ஸ்விச்சு ரொம்ப உயரமாயிருக்கே" என்று தன் பலஹீனத்தை அறிவித்துக்கொண்டான் வெங்கிட்டு.

"பின்னே எப்படி எடுப்பே? எங்கே வச்சுண்டு விளையாடறது?" என்று கேட்டாள் அவள்.

"எனக்கு எல்லாம் நிதானம் தெரியும். நீ நிக்கற இடத்திலேயே இரு. நான் மெதுவாகத் துளவிப்பார்த்து எடுத்துடறேன். அப்போ உள்ளே போய் நாற்காலிலே ஏறி விளக்கைப் போட்டுட்டு பார்த்துட்டு வச்சுடலாம். சீக்கிரமாக பார்த்துட்டு வச்சுடணும்" என்று பதிலளித்தான் வெங்கிட்டு.

மெதுவாக கொலுவருகே நகர்ந்து சென்று மூன்ருவது படியில் வைத்திருந்த நாயையும் பூனையையும் எடுத்துவிட்டான். தவறுதலாகக் கைபட்டுக் கீழ்ப் படியிலிருந்த இரண்டு சோழிகள் கீழே விழுந்தன. சோழிகள் விழுந்த சப்தம் பின்கட்டுக்குக் கேட்டிருக்காது என்ற தைரியத்துடன் சியாமளியைப் பின்னே அழைத்துக்கொண்டு பாலசுந்தரத்தின் அறைக்குள் நுழைந்தான். பொம்மைகளைக் கீழே வைத்துவிட்டு, சுவரோரம் இருந்த நாற்காலியில் ஏறி விசையை அழுத்தி வெளிச்சத்தை உண்டாக்கினுன்.

பொம்மைகளின் முகத்தில் உயிரின் கணப்பு காய்ந்து கொண்டிருந்தது. சியாமளி பூனையை எடுத்து ஒரு தடவை முத்தமிட்டாள். சிறிது நேரம் கொஞ்சினுள். அதற்காகத்தான் சாப்பிடச் செல்லுமுன் நடந்த ரகசியப் பேச்செல்லாம். தனக்கே தனக்கென்று அது இருந்துவிட்டால்—இந்த ஆசை அவளுக்கு ஏற்பட்டது. ஆனல் இது நிறைவேறக்கூடிய ஆசையல்ல என்று அவளுக்குத் தெரியும். அந்த ஒரு சில நிமிடங்கள் எவ்வளவு அனுபவிக்க முடியுமோ அவ்வளவு அனுபவித்தாள். ஸ்வாதீன பாத்தியம் இல்லாவிட்டாலும் கொலுமுடியும் வரையில் அநுபோக பாத்தியம் நிச்சயம். அதுவே போதும்! நாயையும் எடுத்து மற்ருெரு கையில் வைத்துக்கொண்டு வேடிக்கையாக "சண்டை போட்டுகாம சமத்தா இருங்கோ" என்று கூறினுள். அவற்றின் உயிரியல்பு அவளுக்குப் பரிச்சயமாகி இருந்ததோ; அல்லது குழந்தைகளிடம் தாய்மார்கள் நடந்துகொள்ளும் முறையை அனுபவத்தின் மூலம் அறிந்திருந்த அவளுக்கு அந்த பொம்மைகளிடத்தில் தாய் மனேபாவம் ஏற்பட்டதோ—என்னவோ தெரியவில்லை!

பின்கட்டிலிருந்து பேச்சுக் குரல் கேட்டது. வெங்கிட்டுவுக்கு பயம்தட்ட ஆரம்பித்தது.

"சீக்கிரம், சியாமளி, போதும். இங்கே கொண்டா" என்று கூறிக்கொண்டே பொம்மைகளை அவளிடமிருந்து பறித்துக் கொண்டு அறை விளக்கைக் கூட அணைக்காமல் கூடத்து இருட்டுக்குள் நுழைந்தான். தட்டித் தடவிக்கொண்டு படிகளருகில் சென்று இடத்தை நிதானித்து இரண்டும் ஒன்றையொன்று நேராகப் பார்க்கும்படி முன்பு வைத்திருந்தது போலவே வைத்தான். இது சரியாக இருக்கவேண்டுமே என்ற கவலையுடன் இரண்டின் முகத்தையும் கூடத் தொட்டுப் பார்த்தான். சரியாகத்தான் இருந்தது!

பின்னர் இருவரும் பாலசுந்தரத்தின் அறைக்குச் சென்று விளக்கை அணைத்துவிட்டு வாயிற்பக்கம் சென்ருர்கள். இவர்கள் வழியில் சென்று கொண்டிருக்கையில் பாலசுந்தரமும் சரோஜாவும் கூடத்துக்கு வந்தார்கள், "யாரங்கே ரேழியில்" என்ற கேள்வியைக் கேட்டுக்கொண்டே.

"நாங்கள் தான்—வெங்கிட்டுவும் சியாமளியும்" என்று இருவரும் சேர்ந்து ஒரே குரலில் பதிலளித்துவிட்டு மெதுவாக வாயிற்பக்கம் நகர்ந்தார்கள்.

"இன்னும் உனக்கு தூக்கம் வரவில்லையாடா, ஏண்டா வெங்கிட்டு? உங்கம்மா கோவிச்சுக்கமாட்டாளா, சியாமளி? பத்தாச்சே" என்று கொண்டே ஸரோஜா பாலசுந்தரத்தின் அறைக்குள் அவன் பின்னேடு நுழைந்தாள். சில நிமிடங்களுக்கெல்லாம் அந்த அறைக்கதவு மூடப்படும் சப்தம் கேட்டது.

தங்கம்மாள் பின்கட்டில் அன்றைய தினத்தைச் சேர்ந்த எல்லேயோரச் சில்லறை வேலேகளில் ஈடுபட்டிருந்தாள்.

வெங்கிட்டு சற்று நேரம் சியாமாளியுடன் நின்று பேசிக்கொண்டிருந்துவிட்டு வேகமாக உள்ளே ஓடிவந்து தன்னறைக்குச் சென்று படுக்கையில் அயர்வுடன் படுத்துவிட்டான். வாயிற் திண்ணையில் சபேசய்யர் நன்ருகக் குறட்டைவிட்டுத் தூங்கிக் கொண்டிருந்தார். மத்தியானத் தூக்கம் கெட்டுப்போனது இதற்குத் தக்க காரணமாயிருந்தது என்று சொல்லலாம்.

சியாமளி தன் வீட்டுக்குச் செல்லும் பொழுது அவள் தகப்பனர் வாயிற் குரட்டில் திறந்த வெளியில் கட்டிலேப் போட்டு உட்கார்ந்துகொண்டு அன்றைய அரசியலே அலசிப் பிழிந்து ஆராய்ந்து கொண்டிருந்தார். அவரது சகபாடிகளும், அவரும் சேர்ந்து போட்டுக்கொண்டிருந்த கூச்சல் தெருவையே அதிரச் செய்துகொண்டிருந்தது என்று கூறலாம். இது அன்று புதிதாக நடந்த சம்பவமல்ல. பதின்மூன்று வருடகாலமாக நடந்து வந்த சம்பவம். சியாமளியின்

தகப்பனர் கோபாலய்யர் ரெயில்வேயில் ஒரு தலைமைக் குமாஸ்தா. அவர் திருச்சிக்கு வந்து குடியேறி அதன் அங்கங்களில் பிரதானமான ஒருவராகத் திகழ ஆரம்பித்துப் பதின்மூன்று முழு வருடங்கள் கழிந்து விட்டன.

கோபாலய்யருக்கு அவருடன் தொடர்பு கொண்ட அதிகார பூர்வமற்ற அரசியல் வட்டாரங்களில் "அடாமிக் குண்டு" என்று சமீபகாலமாகப் பெயர் வழங்கி வர ஆரம்பித்திருப்பது, அவரது அரசியல் முனை முன்னேற்றத்தைத் தெளிவாக விளக்குகிறதல்லவா?

கோபாலய்யரது வழக்கமான தினசரி மகாநாட்டில் பக்கத்து வீடுகளிலிருந்த மூன்று நண்பர்கள் தவருமல் கலந்து கொள்வார்கள். மகாநாடு இரவு ஒன்பது மணிக்கு ஆரம்பித்துப் பன்னிரண்டு மணிக்குக் குறையாமல் நடக்கும். சில சமயங்களில் புதிய, விசேஷ நண்பர்கள் சேர்ந்துவிட்டால் இரண்டு கட்டில்களைச் சேர்த்துப் போட்டுக்கொண்டு காசு வைக்காத சீட்டாட்டத்தில் இறங்கி அமிழ்ந்து போவதும் உண்டு.

கோபாலய்யரது மனையாள் சுந்தரி அம்மாளுக்குத் தன் கணவரின் 'முக்யமான' இந்த நடவடிக்கைகள் சிறிதும் பிடித்ததேயில்லை. பிடிவாதத்துக்கு மருந்து கிடையாது என்ற வழக்கின் துணைகொண்டு தன்னைத் தேற்றிக் கொள்ளத்தான் இடமிருந்தது அவளுக்கு.

அந்த அம்மாளின் பிடித்தமின்மைக்கு சில நல்ல காரணங்களும் இல்லாமற்போகவில்லை. கோபாலய்யர் சற்று முசுடான பேர்வழி. இரவு வேளைகளில் பாதி அரட்டைக் கச்சேரி நடந்து கொண்டிருக்கையில் தமது வெற்றிலைப் பாக்கு கனபரிமாணத்தைப் புதுப்பிக்க அவசியம் நேரிட்டாலோ அல்லது உலர்ந்த தொண்டையை நனைத்துக் கொள்ளத் தேவையேற்பட்டாலோ உள்ளே செல்வது வழக்கம். ஏனெனில் தமது தேவைகளையெல்லாம் முன்கூட்டியே கவனித்தறிந்து எல்லாவற்றையும் முன்னமேயே வெளியில் கொண்டுவந்து வைத்துக்கொள்ளக்கூடிய பொறுமை அவருக்குக் கிடையாது. உள்ளே செல்லத் தோன்றும் ஒவ்வொரு தடவையிலும் வாயிற் கதவைத் தட்டி மனையாளைத் தாள் திறக்கச் சொல்லும் பொறுமையும் அவருக்குக் கியையாது—இந்த விஷயம் அவர் தமது மனையாளின் தூக்கத்தில் வைத்திருந்த அக்கறைக்கு ஒரு எடுத்துக்காட்டாகவும் கொள்ளப்படலாம். தாளிடாமல் வெறுமனே மூடி வைத்திருந்தால் கூடத் திறந்து செல்லக்கூடிய பொறுமையும் அவருக்கில்லை. எனவே நடுநிசி வரையில் வாயிற்கதவு இறைவனது அருட்கதவம் போன்று நன்ருகத் திறந்து கிடக்கும்.

சுந்தரி அம்மாளுக்கு இதன் காரணமாக அயர்ந்திருக்கும்சமயத்தில் ஏதாவது விபரீதமாக திருட்டுகிருட்டு நடந்துவிட்டால் என்ன செய்வது என்ற பயமுண்டு. திருடன் நுழையாவிட்டாலும் பூனே, பெருச்சாளி ஏதாவது நுழைந்து அமர்க்களப்படுத்தினுல் என்ன செய்வது என்ற அச்சமுண்டு. ஆனுல்இந்த அச்சத்தை மதிக்கக்கூடிய பொறுப்பு கோபாலய்யருக்கில்லே.

எனவே கோபாலய்யரது மகாநாடு வாயிலில் நடப்பதும், கதவு திறந்து கிடப்பதும், சுந்தரி அம்மாள் அரை, முக்கால், முழுத் தூக்கங்கள் தூங்குவதும் வழக்கமாகவே இருந்தன.

அன்று சியாமளி தன் வீட்டுக்குச் செல்லும்போது கோபாலய்யரது மகாநாடு முன் பாதியில்தான் இருந்தது. உள்ளே நுழைந்து சியாமளியைத் தற்செயலாக நோக்கிய கோபாலய்யர் "தூக்கம் இன்னும் வரவில்லேயா? கண்முழித்து உடம்பைக் கெடுத்துக்கொள்வதில் குறைச்சலில்லே" என்று அரைமனதுடன் தமது அபிப்பிராயத்தைத் தெரியப்படுத்திவிட்டுத் தமது அலுவல்களில் ஈடுபட்டார்.

உள்ளே படுத்திருந்த சுந்தரி அம்மாள் சியாமளியை வரவேற்று "அவாளாத்தில் கொலு எப்படி? நன்னு இருந்ததா? எத்தனே படி வச்சிருக்கா?" என்ற கேள்விகளே அடுக்கிவிட்டுத் தனது தூக்கத்தில் ஆழ்ந்தாள். சியாமளி இந்தக் கேள்விகளுக்கு பதிலளிக்கையில் வெங்கிட்டுவின் "பூனே—நாய்"களேப் பற்றிப் பொருமை தொனிக்கக் குறிப்பிட்டுவிட்டுத் தன்னறைக்குச் சென்ருள். கொட்டாவியும் சோம்பலும் அவளே வரவேற்றன. பூனேயையும், நாயையும் மறக்கவும் முடியாமல், தூங்காமலிருக்கவும் முடியாமல் கனவிலாவது அவற்றைத் தன் வீட்டுக் கொலுவில் காணும் நம்பிக்கையுடன் தூக்கத்தை வரவேற்ருள்.

வெங்கிட்டுவின் வீட்டில் பின்கட்டில் வேலே செய்து கொண்டிருந்த தங்கம்மாள் அன்றைய வேலேகளால் ஏற்பட்டிருந்த அலுப்பைத் தாங்கமுடியாமல் பின்கட்டிலேயே வாயிற்படியில் தலே வைத்துப் படுத்துவிட்டாள். வாயிற்கதவு தாளிடப்பட்டிருக்குமோ என்ற சந்தேகம் அவளுக்குச் சற்று எழுந்தபோதிலும் சரோஜா போட்டுவிட்டுப் படுத்திருப்பாள் என்ற நம்பிக்கையுடன் எழுந்திருக்காமலே தூங்கப் புறப்பட்டாள்.

வழக்கத்திற்கு விரோதமாகத் தங்கம்மாள் அன்று பின்கட்டிலேயே படுத்துவிட்டதற்கு வேருெரு காரணமும் உண்டு. பின்கட்டில் திறந்த தாழ்வாரத்தின் மூலம் சற்றுக் காற்றடிக்கும் என்ற நம்பிக்கையில் அன்றைய உருக்கத்தை வெல்லத்தான் அவள் அப்படிச் செய்தாள். இந்த முடிவை சரோஜாவிடம் முன்கூட்டியே அறிவிக்கவில்லே. வாயிற் கதவைத்

தாளிடும் பொறுப்பை சரோஜா மறந்து படுக்கச் சென்றாள். இந்தக் குழப்பத்தின் காரணமாக அவர்கள் வீட்டுக்கதவும் அன்றிரவு திறந்துகிடந்தது.

இவ்வாறாக வெங்கிட்டுவின் குடும்பம் அந்தகாரத்தின் மௌனச் சுமையின்கீழ் அழுந்திக்கிடந்தது. பழக்கடைத் தென்னங்கீற்றின் சலசலப்பைத் தவிர வேறொன்றும் அந்த மௌனத்தைக் கலைக்க முற்படவில்லை.

இத்தகைய இனிய நள்ளிரவில் தான் கதையை மேலே இட்டுச் செல்ல வழிவகுக்கும் அந்த அபூர்வ சம்பவம் நடந்தது.

கூடத்தில் கொலு அமைப்பில் இரவின் ஏக்கம் தொனித்துக் கொண்டிருந்தபோதிலும்உயிர்ச் சக்தியின் துடிப்பும் சற்றுத் தோன்ற ஆரம்பித்தது. இயற்கையின் திருவிளையாடலுக்குகப்பான வாடை தயாராகியிருந்த அந்தச் சந்தர்ப்பத்தில் ஒரு இனிய நாடகம் ஆரம்பமாயிற்று.

கீழ்ப்படியில் சோழிகளும் கழக்கோடிகளும் அசையாமல் உறங்கிக் கிடந்தன. தாங்கள் குடியேற்றியிருந்த உயிர்கள் கடலடியில் விடுபட்டிருந்த நினைவையோ மாண்டு மறைந்த பழமையையோ திரும்ப அனுபவிக்கக்கூடிய சக்தி அவற்றிற்கில்லை.

கண்ணாடித் தொட்டிகளும், பீங்கான் செப்புகளும், விக்கிரகங்களும் இதேபோல் உயிரின்மையில் தூங்கியிருந்தன.

ஆனால் அந்தப் பூனையும் நாயும் சிறிது சிறிதாகத் தங்கள் கடனை நிறைவேற்றத் தயாராகிக் கொண்டிருந்தன. மண்ணுருவில் படிந்துகிடந்த அவற்றின் ரோமங்கள் சற்றுச் சிலிர்க்க ஆரம்பித்தன. அசைவற்ற விழிகளின் கருமையும், ஒளியும் அசைய ஆரம்பித்தன. முகத்திலும், கால்களிலும் உயிர்க் கணப்பு ஏற ஆரம்பித்தது. மீசைகளில் சிற்றம் துடித்தது.

பதுமத்தான் எழுதி வைத்து விட்டதாகக் கூறப்படும் அந்த இயல்புகள் அனைத்தும் அவற்றினூடே உயிர்கொண்டு எழுந்தன. போராட்ட முஸ்தீபு தசைகளத்தனையிலும் ஏற்பட்டது. சிறிய பாம்பின் சீற்றம்போல் இரண்டின் மூச்சுக் காற்றும் "ச்" என்று வெளிப்பட்டது.

(தொடரும்)



நன்றி மறவாத அரசன்

"நாணு"

விக்ரமன் என்ற அரசன் உஜ்ஜயினியை ஆண்டுவருங்காலத்தில் உஜ்ஜயினியில் ஒரு அந்தணர் இருந்தார். அவர் கல்வி கேள்விகளில் சிறப்புற்று விளங்கினர். எல்லா குணங்களும் நிரம்பிய அவருக்கு மக்கட்பேறில்லை.

ஒரு நாள் அவர் மனைவி, "பிள்ளையில்லாத குடும்பம் என்ன குடும்பம்? இரவை விளங்கச் செய்கிறவன் சூரியன். குலத்தை விளங்கச் செய்பவன் சற்புத்திரன். நமக்கோ குழந்தை இல்லையே?" என்று வருந்தினள். அதற்கு அந்த அந்தணர் "நீ சொல்வது உண்மைதான். ஆனல் கடவுளுடைய கருணையில்லாமல் பிள்ளைப் பேறு கிட்டாது. ஆதலால் இது முதல் நியமத்துடன் பரமேஸ்வரனை ஆராதிப்போம்" என்றார். அவர் மனைவியும் அதற்கு உடன்பட்டாள். வெகுகாலம் முறைப்படி பரமேஸ்வரனை ஆராதித்தார்கள். முடிவில் ஒரு ஆண் குழந்தை பிறந்தது. மகிழ்ச்சியடைந்த அந்தணர் குழந்தைக்கு தேவதத்தன் என்ற பெயரிட்டார். தக்க பருவம் வந்ததும் அவனுக்கு எல்லா வித்தைகளையும் கற்பித்தார். தேவதத்தனும் தந்தையைப் போலவே கல்வியில் தேர்ச்சிபெற்று விளங்கினன். மணப் பருவத்தையடைந்த அவனுக்கு நல்ல அழகும் குணமுமுள்ள ஒரு பெண்ணை மணம் செய்து வைத்தார். பிறகு தன் கடமை நிறைவேறியதாக நினைத்து தீர்த்த யாத்திரை செல்லத் தீர்மானித்தார்.

தீர்த்த யாத்திரை செய்வதற்கு முன் தன் குமாரனை அழைத்து உபதேசித்தார். "குழந்தாய்! எவ்வளவு கஷ்டம் வந்தபோதிலும் தன் தர்மத்தைக் கைவிடாதே. எல்லோரிடத்திலும் அன்பைச் செலுத்து. கடவுளிடம் பக்தியைச் செய். பொய் பேசாதே. பிற பெண்களைப்பார்க்காதே. பலசாலிகளுடன் விரோதித்துக் கொள்ளாதே. நல்லாருடன் பழகு. தீயவர்களை விலக்கு. எதிரிகளுக்கும் நன்மையையே நினை. திருடர்களுடன் பேசாதே. கடுமையான வார்த்தைகளைப் பேசாதே. சிறு காரியத்திற்காக அதிகமாகச் செலவழிக்காதே. மனம், வாக்கு, செயல் இவற்றல்

பிறருக்கு உதவி செய். "இம்மாதிரி பல அற்புதமான விஷயங்களை உபதேசித்துவிட்டு மனைவியுடன் காசிக்குக் கிளம்பிவிட்டார் அந்தணர்.

ஒரு சமயம் தேவதத்தன் தனக்குத் தேவையான பொருள்களைச் சேகரிக்க காட்டிற்குச் சென்றிருந்தான். அப்பொழுது அங்கு வேட்டையாட வந்திருந்தான் விக்ரமன். ஒரு காட்டுப் பன்றியை விரட்டிக்கொண்டு வெகுதூரம் வந்துவிட்டான். களைப்பினால் அவன் உடல் வாட்டமுற்றிருந்தது. அவனைப் பின் தொடர்ந்து வந்தவர்கள் அரசன் சென்ற இடம் தெரியாமல் நகரத்திற்குத் திரும்பிவிட்டார்கள். இருள் சூழ்ந்து கொண்டது. நகரத்திற்குச் செல்லும் வழி அரசனுக்குத் தெரியவில்லை. வழியில் தேவதத்தனைச் சந்தித்து வழி காண்பிக்கும்படி கூறினான் அரசன்.

தேவதத்தன் தான் முன்னே சென்று அரசனுக்கு வழி காண்பித்து அரசனை அரண்மனை வரை கொண்டுவிட்டான். அரசன் தேவதத்தனுக்கு பல பரிசுகளை வழங்கி அரண்மனையிலேயே ஓர் உத்தியோகத்தையும் அளித்தான். தேவதத்தன் நல்ல சமயத்தில் தனக்கு உதவி செய்ததை அடிக்கடி எல்லோர் முன்னிலையிலும் தெரிவித்தான்.

சில ஆண்டுகளுக்குப் பிறகு ஒரு நாள் அரச சபையில் விக்ரமன் "தேவதத்தா! நீ செய்த உபகாரத்திற்கு நான் என்ன பதில் செய்யப்போகிறேன்?" என்று சொன்னான். சபையிலுள்ளவர்கள் இந்தச் சிறு உதவியை மிகப் பெரிதாக நினைக்கிறாரே அரசர் என்று பேசிக் கொண்டார்கள். "அரசர் நான் செய்த சிறு உதவியை அடிக்கடி பாராட்டுகிறாரே! நான் என்ன பிரமாத உதவியைச் செய்துவிட்டேன். அரசன் உண்மையாகவே அதைப் பெரிதாக மதிக்கிறாரா அல்லது பொய்யாகப் புகழ்கிறாரா" என்று தேவதத்தனுக்குச் சந்தேகம் உண்டாயிற்று.

ஒரு நாள் அரசன் மனத்தைப் பரிசோதிக்க எண்ணி, அரச குமாரனை தன் வீட்டிற்கு அழைத்துச் சென்று ஒளித்து வைத்தான். அவன் அணிந்திருந்த நகை ஒன்றை எடுத்து தன் வேலைக்காரனிடம் கொடுத்து கடைத்தெருவில் விற்று வர அனுப்பினான். அரச குமாரனை அரண்மனையில் காணவில்லை. யாரோ அவனை திருடிச்

சென்று கொன்றுவிட்டார்கள் என்று அரண்மனை அல்லோலப் பட்டது. ராஜகுமாரனைத் தேட நாற்புறங்களிலும் சேவகர்கள் அனுப்பப்பட்டார்கள். எங்கும் தேடி விட்டு கடைத்தெருவை அடைந்தபொழுது ராஜகுமாரனின் நகையை விற்பதற்காக வந்த தேவதத்தனின் வேலைக்காரனைக் கண்டார்கள். அவனைப் பிடித்து அரசனிடம் கொண்டுவந்து நிறுத்தினார்கள்.

"இந்த நகை உனக்கு எப்படிக் கிடைத்தது" என்று கேட்டார் அரசர்.

"மகாராஜா! நான் தேவதத்தருடைய வேலைக்காரன். அவர் இந்த நகையைக் கொடுத்து விற்று பணத்தைக் கொண்டுவா என்று கூறினார். நான் திருடன் அல்ல" என்று கூறினான்.

தேவதத்தனுக்கு உடனே அழைப்புப் பறந்தது. அவனும் வந்து சேர்ந்தான்.

அரசன் நடந்ததைக் கூறும்படி தேவதத்தனிடம் கேட்டான். "மகாராஜா, பணத்தின் ஆசையினால் நான் தங்கள் குமாரனைத் திருடி, கொன்று எல்லா நகைகளையும் எடுத்துக்கொண்டேன். அந்த நகைகளில் ஒன்றைத் தான் விற்றுவரும்படிக் கொடுத்தேன். நான் செய்த பாபத்தினால்தான் எனக்கு இம்மாதிரி புத்தி ஏற்பட்டது. என்னை என்ன செய்யவேண்டுமோ செய்து கொள்ளுங்கள்" என்றான்.

அதைக்கேட்ட நன்றி மறவாத அரசன் செய்வது ஒன்றும் புரியாமல் கலங்கினான். அப்பொழுது சபையிலுள்ளவர்களில் சிலர், நன்கு படித்த இவருக்கு ஏன் இப்படி புத்தி மாறியது என்று வருத்தப்பட்டார்கள்.

மற்றும் சிலர் குழந்தையைக் கொன்று நகைகளைத் திருடிய இவனை சூலத்தில் ஏற்றவேண்டும் என்றனர்.

மந்திரிகள் இவனை பொடிப்பொடியாக வெட்டி கழுகுகளுக்கு ஆகாரமாகக் கொடுக்கவேண்டும் என்று கூறினார்கள்.

இவர்கள் வார்த்தையைக் கேட்டு அரசன், "நண்பர்களே தேவதத்தன் எனக்குப் பெரும் உதவி செய்திருக்கிறார். நான்!

காட்டில் தனியாக வழி தெரியாமல் தவித்துக் கொண்டிருந்தபோது என்னை அரண்மனையில் கொண்டு சேர்த்தார். அவரை நான் எப்படி தண்டிப்பேன். நண்பனுக்கு துரோகத்தைச் செய்தவன், நன்றி மறந்தவன். செய்யவேண்டியதைச் செய்யாதவன் இவர்கள் மிகவும் கஷ்டப்படுவார்கள் என்று பெரியோர்கள் சொல்லுவார்கள். மேலும் இவன் என்னை அண்டிப் பிழைக்கிறன். தன்னை அண்டியவனின் குற்றத்தைப் பாராட்டுவது முறையாகாது'' என்று சமாதானப்படுத்தினன். பிறகு தேவதத்தனைப்பார்த்து, ''நண்பா! நீ பயப்படாதே. என் மகன், நான் செய்த தீவினையினுல் கொல்லப் பட்டான். அதற்கு நீ என்ன செய்வாய்? அதுமட்டுமல்ல. பெருங்காட்டில் தவித்த என்னை நகரத்திற்கு அழைத்து வந்தாய். அதற்கு நான் என்ன உதவி செய்தாலும் போதாது'' என்று கூறி விலையுயர்ந்த ஆடைகள், ஆபரணங்கள் இவற்றைக் கொடுத்து தேவதத்தனை அனுப்பினன்.

தேவதத்தன் ஆச்சர்யமடைந்தவனுய் தன் வீட்டில் ஒளித்து வைத்திருந்த ராஜகுமாரனுக்கு ஆபரணங்களை அணிவித்து அரசனிடம் அழைத்து வந்தான். தன் குமாரனைக் கண்ட அரசனுக்கு வியப்புத் தாங்கமுடியவில்லை. ஒன்றும் புரியாமல் இது என்ன விஷயம் என்று கேட்டான்.

''அரசே! தாங்கள் என்னை நடு சபையில் பலதடவை புகழ்ந்தீர்கள். அது உண்மைதானு என்று சோதிக்க இம்மாதிரிச் செய்தேன். என் குற்றத்தை மன்னிக்கவேண்டும்'' என்று தேவதத்தன் வேண்டினன்.

அரசன் மட்டற்ற மகிழ்ச்சியடைந்து இன்னும் பல வெகுமதிகளைக் கொடுத்து தேவதத்தனை மரியாதை செய்தான்.

புஸ்தகம் படிக்கையில் தூக்கம் வரும்
அசோகா உற்சாகம் தரும்

தொடர் நாடகம்

மேவாரின் வீழ்ச்சி

[மூலம் : த்விஜேந்திரலால் ராயால் இயற்றப்பட்ட மிகப் புகழ்பெற்ற வங்க நாடகம்]

தமிழாக்கம் :
"பைங்கா நாடு"

அஜய் : ரொம்ப சரி. வீரர்களே ! இந்த காயம்பட்டவர்களை எடுத்துச்செல்ல ஏற்பாடு செய்யுங்கள்.

[வீரர்கள் கட்டிலை எடுத்து வரச் செல்கின்றனர்.]

மானஸி : எவ்வளவு ஆனந்தம் அஜய் !

மானஸி : எங்கே ?

அஜய் : உன் வதனத்தில் பயங்கரக் கூச்சல் கிளம்பிய இந்தத் தாய்நாட்டில், மரணத்தின் இந்த விளையாட்டு மைதானத்தில், பயங்கரமான இந்த மயானத்தில் தாரகைகள் ஜ்வலிக்கும் இந்த நள்ளிரவில் இது எப்பேர்ப்பட்ட ஜோதி! புயலினால் கொந்தளிக்கும் கடலில் காலைக்கதிரவன்போல, நெருங்கிய கருமேகத்தினிடையே உறுதியான நீல ஆகாயத்தைப்போல, துக்கத்தின் மேல் கருணையைப்போல்......இது எப்பேர்ப்பட்ட உருவம். இந்த அழகு, இந்த மகிமை! இந்த ஆச்சர்யம், மிகவும் அபூர்வமானது! மானஸி ! (கையைப் பிடிக்கிறான்).

மா : அஜய் !

காட்சி 1 அங்கம் 2

இடம் : ஆக்ராவில் ராஜா ஸகரசிம்மனின் வீடு.

நேரம் : காலை.

[ராஜா ஸகரசிம்மனும் அவர் பேரன் அருணசிம்மனும் பேசிக்கொண்டிருக்கின்றனர்].

ஸகர : அருண், இது எவ்வளவு ஆச்சரியகரமான விஷயம். மேவார் யுத்தத்தில் அமரசிம்மன் முகலாய ஸேனையை புல்லை வெட்டுவதுபோல் வெட்டிவிட்டான்.

அருண் : பாக்யசாலி, ராணா அமரசிம்மர்!

ஸகர : வாலிபப்பருவத்தில் ஆடம்பரப்பிரியனாக இருந்தான் அமரன். வருங்காலத்தில் இவ்வளவு திறமைசாலியாக ஆவான் என்று யாரால் சொல்லமுடிந்தது ?

அருண் : தாத்தா ! மகரிஷி வால்மீகியும் முதலில் கொள்ளைக்காரராக இருந்தார்.

ஸகர : மகரிஷி வால்மீகி யார் ? துளஸிதாஸர் பிள்ளையா ?

அருண் : ஐயோ தாதா ! தாங்கள் மகரிஷி வால்மீகியின் பெயரைக் கேட்டதுகூடக் கிடையாதா ? அவர் பெரிய மகரிஷி.

ஸகர : ஆம் ! அப்படித்தான். நினைவு இல்லை. அவரை எங்காவது பார்த்திருக்கலாம் !

அருண் : தாங்கள் எங்கே பார்த்திருப்பீர்கள் ? அவர் திரேதாயுகத்தில் இருந்தவர்.

ஸகர : எந்த யுகத்தில் ?

அருண் : திரேதாயுகத்தில்.

ஸகர : ஆம்! அப்படியென்றால் நாம் பிறப்பதற்கு முன்னால் உள்ள விஷயம். அவர் பெரிய ரஸிகர் என்று கேள்விப் படுகிறேன்.

அருண் : இல்லை. அவர் ராமாயணம் எழுதியிருக்கிறார்.

ஸகர : ராமாயணம் எழுதியிருக்கிறாரா ? ராமாயணம் நல்ல புஸ்தகம்.

அருண் : ஏன் தாத்தா, தாங்கள் ராமாயணம் படித்ததில்லை? பகவான் ராமச்சந்திரர் நம்மவரின் பூர்வ புருஷர். அதில் அவருடைய கதை எழுதப்பட்டிருக்கிறது. தாங்கள் அவரைப் பற்றி கொஞ்சம்கூட அறியமாட்டீர்கள் ! ராம், ராம் !

ஸகர : குழந்தாய், நான் எங்கிருந்து படிப்பேன் ? போர் செய்தே என் ஜன்மம் கழிந்துவிட்டது. எனக்குப் படிக்க நேரம் எங்கே கிடைத்தது ?

அருண் : தாங்களும் எப்போதாவது போர் செய்திருக்கிறீர்களா ?

ஸகர . ஓ ! நான் பெரிய பெரிய போரில் சண்டைசெய்திருக்கிறேன், அப்பொழுது நீ பிறக்கக்கூட இல்லை.

அருண் : தாங்கள் யாருடன் போர் செய்தீர்கள் ?

ஸகர : இப்பொழுது நினைவு இல்லை. ஆனால் இது நிச்சயம் நினைவிருக்கிறது. நான் பல தடவை போருக்குச் சென்றிருக்கிறேன். அந்த ஸமயம் உன் தாயார்......

அருண் . தாத்தா, என் தாயார் எங்கே ?

ஸகர : அவள் எங்கே இருக்கிறாள் என்று யாருக்குத் தெரியும் ? ஒரு நாள் காலையில் எழுந்து அவள் மேவார், மேவார்

என்று கூக்குரலிட்டாள். அன்று ஸந்தியாகாலத்தில் நாங்கள் மிகவும் தேடினோம். ஆனால் அவள் தகவலே கிடைக்கவில்லை.

அருண்: என் தகப்பனார்?

ஸகர: அவன் எப்பொழுதும் பைத்தியம்போல் இருந்தான். ஒரு தடவை மகாராஜா கஜசிம்மனுடன் கூட குஜராத் மீது போர் செய்யச் சென்றான். அங்கேயே கொல்லப்பட்டான்.

அருண்: என் தாயார் இங்கு எங்காவது மேவாரில்தான் இருப்பாள் என்று நான் நினைக்கிறேன்.

ஸகர: இருக்கலாம்.

அருண்: ஏன் தாத்தா, நீங்கள் மேவாரை விட்டு இங்கு வந்தீர்கள்? தங்களுடைய சகோதரர் மகாராணா பிரதாபசிம்மர் தன் நாட்டிற்காக உயிரை விட்டதைத் தாங்கள் பார்க்கவில்லையா?

ஸகர: அந்த அப்பாவி அதனால்தான் இவ்வளவு சிறு வயதில் கொல்லப்பட்டான். நான் தடுத்துப்பார்த்தேன். ஆனால் என் வார்த்தையைக் கேட்கவில்லை. நீ சொல். இதில் என் குற்றம் என்ன?

அருண்: ஆனால் இந் நாட்களில் சாரணர்கள் ஒவ்வொரு தெருவிலும் அவர் புகழைப் பாடிக்கொண்டு திரிவதைக் கேட்கின்றோம்.

ஸகர: உம், அதனால் என்ன வருகிறது. அவரோ இறந்துவிட்டார். இப்பொழுது அவர் தன் புகழைக் கேட்க வரவில்லை. இப்பொழுது எனக்கு நன்றாக நினைவு இருக்கிறது. ஒரு தடவை நானும் பிரதாபனும் பையன்களாக இருந்தபோது ஒரு கீரிப்பிள்ளைக்கும் பாம்புக்கும் சண்டை நடந்துகொண்டிருந்தது. நான் கீரி ஜெயிக்கும் என்று சொன்னேன். ஆனால் பிரதாபன் என் வார்த்தையை ஒப்புக்கொள்ளவில்லை. பாம்பின் நெற்றியைக் குறிவைத்து கீரி இங்கும் அங்கும் பாய்ந்தது. பாம்பு சீறிச் சீறி படம் எடுத்தது. கடைசியில் கீரியின் பிடி பாம்பின் தலையில் நன்றாக விழுந்தது. பாம்பு அதே சமயத்தில் தலையை கீழே அடித்து துடித்துத் துடித்து இறந்துவிட்டது. பாம்பைக் கொல்வது கீரியின் வேலை. பாம்பு எதுவரை கீரியின் எதிரில் நிற்க முடியும்? இதனால்தான் நான் கீரியின் பக்கம் சேர்ந்தேன். பிரதாபன் பாம்பின் பக்கம். இப்பவும் அதே விஷயந்தான்.

அருண்: ஆனால் தாத்தா, இந்த மேவார் யுத்தத்தில்?

ஸகர : அட என் குழந்தை, அது ராக்ஷஸப்பூண்டில் உண்டான வம்சமடா, எதுவரையிலும் நீ வெட்டுவாய்? முஸல்மான்களின் எண்ணிக்கை குறைந்துவிட்டால் அவர்கள் பல ஹிந்துக்களை முஸல்மான்களாக ஆக்கிக்கொண்டு போரிடுகிறார்கள். ஹிந்துக்களோ அவர்களைப்போல் முஸல்மான்களை ஹிந்துக்களாக்குவதில்லை. முஸல்மான்களாக ஆன ஹிந்துக்கள் என்ன செய்வார்கள்? ஒரு தடவை எப்படியோ முஸல்மான்களாக ஆனவர்களை ஹிந்துக்கள் மறுபடியும் ஹிந்துக்களாக ஆக்குவதில்லை. போதும் இந்த இடத்தில் தான் ஹிந்துக்கள் பிழை செய்கிறார்கள்.

அருண் : அது எப்படிப் பிழையாகும்?

ஸகர : பார்க்கவில்லையா நீ? உன் மாமன் மகாபத்கான் எவ்வளவு சுலபமாக முஸல்மானாகிவிட்டான். கொஞ்சம் யோசித்துப் பார்த்தால் அவர்களுடைய அப்துல்லா எப்படி ஹிந்து ஆவான்? அவன் ஒரு பொழுதும் ஹிந்து ஆகமாட்டான்.

அருண் : தாத்தா, இப்படியிருந்தும் நீங்கள் ஏன் முஸல்மானாக ஆகவில்லை?

ஸகர : இங்கேதான் உன் தாத்தாவிற்கு தைரியம் இல்லை. என் பையனிடத்தில் ரொம்ப தைரியமிருந்தது. அவன் கொஞ்சம் கூட முன்பின்யோசிக்கவில்லை. நான் முதலிலேயே அவனுடைய அதிகமான வேலையைச்செய்து முடித்திருந்தேன். அவன் பாதையை சுத்தம் செய்திருந்தேன். நான் தைரியத்துடன் முகலாயர்களின் பக்கம் சேராமலிருந்தால் மகாபத்கானுக்கு முஸ்ல்மானாவதற்கு தைரியம் ஏற்பட்டிருக்காது.

அருண் : தாத்தா, நீங்கள் முஸல்மானாகத்தான் ஆகியிருக்க வேண்டும். எந்த ஹிந்து ராமாயணம் படிக்கவில்லையோ அவன் முஸல்மானாகத்தான் வேண்டும்.

ஸகர : உம், ராமாயணத்தில் என்ன வைத்திருக்கிறது? எல்லாம் உண்மையற்ற பிதற்றல்.

[முகல் ஸேனாதிபதி ஸையத் அப்துல்லாவின் வருகை.]

ஸகர : அப்துல்லா ஸாஸேப், வாருங்கள். ஆதாப் (நமஸ்காரம்).

அப்துல்லா : ஆதாப் அர்ஜ ராணாஸாஹப்.

ஸகர : ராணா யார்?

அப்துல்லா : தாங்கள் ராணா.

ஸகர : பேஷ், நான் எதற்கு ராணா?

அப்துல்லா : மேவாருக்கு.

ஸகர : அது எப்படி ? மேவாரின் ராணு அமரசிம்மன்.

அப்துல்லா : ஆனல் பாத்ஷா இப்பொழுது உங்களை ராணுவாக செய்திருக்கிருர்.

ஸகர : இதற்கு என்ன அர்த்தம் ?

அப்துல்லா : அவருடைய கட்டளை நீங்கள் இப்பொழுதே சித்தூர் போகவேண்டும் என்பது.

ஸகர : சித்தூருக்கு எதற்கு ?

அப்துல்லா : அங்கேதான் உங்கள் தலைநகர்.

ஸகர : அப்பொழுது அமரசிம்மனின் தலைநகர் எங்கு இருக்கும் ? உதயபூரிலா ?

அப்துல்லா : அவர் இப்பொழுது ராணுவே இல்லை. பாத்ஷா ஸலாமத் அவரை சிம்மாதனத்திலிருந்து இறக்கிவிட்டார்.

ஸகர : அவர் எப்படி சிம்மாதனத்தை விடுவார் ?

அப்துல்லா : அவரிடமிருந்து சிம்மாதனம் பலாத்காரமாக விடுவிக்கப்படும்.

ஸகர : நான் அங்கு சென்று அவருடன் போரிட வேண்டுமா ? இல்லை ஸாஹப், நான் ராணுவாக ஆகவிரும்பவில்லை.

அருண் : ஏன் தாத்தா, நீங்கள்தான் இப்பொழுது சொன்னீர்களே, போர் எல்லாம் எனக்கு நன்ருகத் தெரியும். போர் செய்தே என் ஜன்மம் கழிந்துவிட்டது என்று இப்பொழுது சென்று போர் செய்யுங்கள்.

ஸகர : பேசாமலிருடா பயலே. உன்னிடம் யார் கேட்கிருர்கள் ? (அப்துல்லாவிடம்) இல்லை, ஜனுப் ஸையத் ஸாஹப், என்னுல் சண்டை செய்ய முடியாது. இந்த சண்டையின் பயத்தினுல்தான் நான் என்னைப் பேசாமல் முகலாயர்களிடம் ஒப்படைத்துவிட்டேன். நான் போர் செய்யவேண்டுமென்ருல் தன் நாட்டிற்காகப் போரிடாமல் எதற்காக அதன் மீது நான் போர் தொடுக்கச் செல்லுவேன்.

அப்துல்லா : இல்லை ஜனுப், தாங்கள் சண்டை செய்யவேண்டாம். அப்படிச் சண்டைசெய்ய நேரிட்டால் நாங்கள் இருக்கிருேம். தாங்கள் தயவு செய்து ராணுவாக ஆக வேண்டும். சித்தூரில் இருக்கவேண்டும்.

ஸகா: அமரசிம்மனின் சித்தூரின் மீது படையெடுத்தால்......?

அப்துல்லா: இல்லே. அவர்கள் படையெடுக்க மாட்டார்கள். எப்போ இன்றுவரை அவர்கள் படையெடுக்கவில்லேயோ இப்பொழுது ஏன் எடுக்கப்போகிருர்கள்?

ஸகர: ஐயோ ஸையத் ஸாஹப், பேஷ்! இதுவும் ஒரு வாதமா? ஒரு மனிதன் முதலில் ஒரு பொழுதும் இறக்காவிட்டால் இதனுலேயே வருங்காலத்திலும் இறக்கமாட்டான? தாங்கள் அன்று மணம் செய்துகொள்ளாததால் உங்களுக்கு மணமே ஆகவில்லேயா?

அப்துல்லா: உங்கள் கருத்து எனக்குப் புரியவில்லே.

ஸகர: ஏனென்ருல் நீங்கள் முன்னல் கல்யாணம் செய்து கொள்ளவேயில்லே. இதனல் உங்கள் கலியாணம் கலியாணமேயில்லேயா? [அருணன் பக்கம் பார்த்து] பயலே! நீ ஏண்டா சிரிக்கிருய்? [அப்துல்லாவிடம்] பாம்பு முதலில் கடிக்காவிட்டால் பிறகு ஒரு பொழுதும் கடிக்கவே கடிக்காதா?

அப்துல்லா: ஜனுப்! தாங்கள் ஏன் சிடுசிடுக்கிறீர்கள்?

ஸகர: ஸாஹப், சிடுசிடுக்கவில்லே. தாங்கள் அப்படிப் பேசுகிறீர்கள். மன்னித்துவிடுங்கள். நான் ராணுவாக ஆக விரும்பவில்லே.

அப்துல்லா: அப்படியே இருக்கட்டும் ஸாஹப். தாங்கள் பாத்ஷா ஸலாமத்தின் கட்டளேப்படி செல்லுங்கள். தங்களுக்கு ஏதாவது சொல்லவேண்டுமென்ருல் எல்லாவற்றையும் அவருடைய சமூகத்தில் தெரிவித்துக்கொள்ளுங்கள்.

ஸகர: நல்லது, செல்லுங்கள் ஜனுப். ஆனல் இது மிகவும் கெட்டது. பயந்தாங்கொள்ளித்தனமானது. மகா மட்டமானது. நீங்கள் எல்லோரும் என்னே தங்கள் கையில் அடக்கிக்கொண்டு பலாத்காரமாக ராணுவாக ஆக்க விரும்புகிறீர்கள். ஆனல் இந்தச் செய்கை மிகவும் நியாயமற்றது. நன்றி கெட்டது. போ, அருண்.

காட்சி 2

இடம்: உதயபுரியிலுள்ள அரண்மனேயின் அந்தப்புரம்.

நேரம்: காலே.

[மானஸி தனிமையில் பாடுகிருள். அஜயசிம்மன் வருகிருன்.]

மா: யார்? அஜய்?

அஜய். ஆம், மானஸி!

மா: நீ ஏன் இவ்வளவு நாட்களாக வரவில்லே. உன் மனம் சரியில்லேயா?

அஜய்: இல்லே......

மா: நான் அப்பாவிடம் உன்னேப்பற்றிக் கேட்டேன். அவர் உன்னிடம் ஒன்றும் சொல்லவில்லேயா?

அஜய்: இல்லே மானஸி, நீ இங்கே ஏன் தனியாயிருக்கிருய்?

மா: நான் பாடிக்கொண்டே யோசித்துக் கொண்டிருந்தேன்.

அஜய்: என்ன யோசித்துக் கொண்டிருந்தாய்?

மா: இதைத்தான் யோசித்துக்கொண்டிருந்தேன். மனிதன் மிகவும் எளியவன். மேவார் யுத்தத்தில் நான் கற்றுக்கொண்ட சிறந்த படிப்பினே மனிதன் மகா எளியவன் என்பதுதான். கத்தியின் ஒரே வீச்சில் அவன் தரையில் விழுகிருன். சிறிதளவு ஜுரம் கண்டால் அவன் குழந்தைகளேப் போல் அஸஹாயனுகிருன். கஷ்டம்! எவனுடைய ரத்தத்திலேயே மரணத்தின் விதை கலந்திருக்கிறதோ அவன் பிறரிடம் அன்பைச் செலுத்தாமல் பரஸ்பரம் வெறுப்பை ஏன் செய்கிருன்? அஜய்! நீ ஏன் கண் கொட்டாமல் என்னேப் பார்த்துக்கொண்டிருக்கிருய்?

அஜய்: உன் வதனத்தில் அன்று நான் பார்த்த அழகான ஜோதியை இன்றும் பார்த்துக்கொண்டிருக்கிறேன்.

மா: என்று?

அஜய்: அந்த இரவில்—தேவாரின் போர்க்களத்தில் அன்று அந்தக் காரிருளில் நீ உருவெடுத்து வந்த கருணேபோல் காணப் பட்டாய். அன்றே துடித்துக்கொண்டிருந்த என் அன்பு எல்லே யற்ற நிராசையின் நீண்ட பெருமூச்சில் கலந்துவிட்டது.

மா: அஜய், நிராசை எப்படி?

(தொடரும்)

தனக்கென வாழாதவன்

விக்கிரமன் என்ற அரசன் உஜ்ஜயினியைத் தலைநகராகக் கொண்டு ஆண்டு வந்தான். ஒரு சமயம் பிறநாடுகளைச் சுற்றிப்பார்க்க வேண்டுமென்ற ஆசை ஏற்பட்டது அவனுக்கு. அதனால் மந்திரிகளிடத்தில் தன் நாட்டை ஒப்படைத்துவிட்டுச் சந்நியாசிவேஷத்துடன் புறப்பட்டான். பல இடங்களைச் சுற்றினன். எங்கு மனம் களிப்படைந்ததோ அங்கு சில காலம் தங்கினன். ஆச்சரிய நிகழ்ச்சியைக் காணுமிடத்தில் அதிக நாட்களைக் கழித்தான்.

ஒரு நாள் காட்டின் வழியே சென்றுகொண்டிருந்தான். அப்பொழுது சூரியன் அஸ்தமனமாகிவிட்டது. ஒரு மரத்தினடியில் அமர்ந்தான். அம்மரத்தில் சிரஜீவி என்ற பக்ஷிராஜன் வசித்து வந்தது. அதனுடைய பிள்ளைக் குஞ்சுகள், பேரக் குஞ்சுகள் முதலியன பகலில் பல இடங்களுக்குச் சென்று இரை தேடித்தின்றுவிட்டு மாலையில் திரும்பும் போது ஒவ்வொரு பழத்தைக்கொண்டு வந்து பக்ஷிராஜாவுக்குக் கொடுத்து வந்தன.

அன்று இரவு சிரஜீவி சுகமாக உட்கார்ந்து கொண்டு பறவைகளைப் பார்த்து "என் குழந்தைகளே! நீங்கள் எவ்வளவோ இடங்களில் அலைந்து திரிந்து வருகிறீர்களே, நீங்கள் என்ன ஆச்சர்யத்தைக் கண்டீர்கள்" என்று கேட்டது. அதைக் கேட்ட ஒரு பறவை தந்தையே! நான் ஒரு ஆச்சர்யத்தையும் காணவில்லை: ஆனல் நாளைய தினம் பெரிய துக்கம் ஏற்படப்போகிறது. என்று கூறியது.

அது என்ன என்று கேட்டது ராஜா.

அதைச் சொல்வதால் துக்கம் அடங்கிவிடுமா என்று கேட்டது அந்தப் பறவை.

"குழந்தாய்! நண்பர்களிடமும் உறவினர்களிடமும் தன் துக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறவன் சுகமடைகிருன். ஆதலால் உன் துக்கத்தை எங்களிடம் தெரிவி" என்று சொல்லியது பக்ஷிராஜா.

"தந்தையே! வடநாட்டில் சைவாலகம் என்ற மலை ஒன்று உள்ளது. அதனருகில் பலாசநகரம் என்ற ஒருகிராமம் இருக்கிறது. சைவாலக மலையில் ஒரு ராக்ஷஸன் ஒவ்வொரு நாளும் வழியில் வரும் ஜனங்களைப் பலாத்காரமாகத் தூக்கிச் சென்று மலைக்குக் கொண்டு போய் தின்று வந்தான். ஒருசமயம் அந்தக் கிராமத்தில் உள்ள ஜனங்கள் எல்லோரும் ஒன்று கூடி ராக்ஷஸனே! ஜனங்களைப் இப்படித் துன்புறுத்திக் கொல்லாதே, நாங்கள்

ஒவ்வொரு நாளும் ஒரு மனிதனை உனக்கு உணவாக அனுப்புகிறோம்'' என்று வேண்டினார்கள். ராக்ஷஸனும் அதற்கு ஒப்புக்கொண்டான்.

பிறகு ஜனங்கள் தினமும் வீட்டு வரிசைப்படி ஒவ்வொரு மனிதனை ராக்ஷஸனுக்கு அனுப்பி வந்தார்கள். இவ்வாறு வெகு நாட்களாக நடந்துவருகிறது. எனக்கு முன் ஜன்மத்தில் தந்தையாயிருந்த அந்தணருடைய முறை நாளை வருகிறது. அவருக்கு ஒரே பிள்ளை. அவனை ராக்ஷஸனிடம் அனுப்பினால்தாய் தந்தையர் பிள்ளையின் மரணத்தினால் வருத்தமடைவார்கள். தந்தையே ராக்ஷஸனிடம் சென்றால் அவர் மனைவியும் பிள்ளையும் மிகவும் கஷ்டப்படுவார்கள். ஆதலால் 'இந்த துக்கம்' என்னை அடைந்துள்ளது என்று சொல்லியது அந்தப் பறவை.

மரத்தடியில் உட்கார்ந்துகொண்டிருந்த விக்கிரமன் பறவையின் பேச்சைக்கேட்டு அதன் கஷ்டத்தைப் போக்க விரும்பினான். உடனே அங்கிருந்து கிளம்பி சைவாலகம் என்ற மலையை அடைந்தான். அம்மலையினருகில் ஒரு குளமிருந்தது. அதில் நீராடிவிட்டு மலையிலிருந்த கொலைப்பாறையில் வந்தமர்ந்தான். அரக்கனும் வழக்கப்படி அங்கு வந்தான். சிரித்த முகத்துடன் பாறையில் அமர்ந்திருக்கும் அரசனைக் கண்டு ஆச்சர்யமடைந்தான். ''ஏ தைரியசாலியே! நீ யார்? நீ எங்கிருந்து வந்தாய்? இந்தப் பாறையில் அமருகிறவன் என்னைக் காண்பதற்கு முன்னமையே பயத்தினால் இறந்து விடுவான். நீ தைரியத்துடன் சிரித்துக்கொண்டு உட்கார்ந்திருக்கிறாயே! மரண காலத்தை நெருங்கியவன் சோர்வை அடைவான். உன் முகம் மிகுந்த ஒளியுடன் விளங்குகிறது ஆகையால் உண்மையைக் கூறு'' என்று கேட்டான் ராக்ஷஸன்.

''இதைப் பற்றி உனக்கு என்ன கவலை? பிறருக்காக என் உடல் கொடுக்கப்படுகிறது. ஆதலால் உன் விருப்பப்படி என்னைச் சாப்பிடு'' என்றான் அரசன்.

''நீ மனிதர்களில் உயர்ந்தவனாய்க் காணப்படுகிறாய். பிறருக்காக உன் உடலையே தருவதால் உன் வாழ்க்கை மேலானது. உன் விஷயத்தில் நான் சந்தோஷமுள்ளவனாயிருக்கிறேன். உனக்கு வேண்டிய வரனைக் கேள்'' என்றான் அரக்கன்.

''என்னிடம் உனக்கு அன்பு இருந்தால், இன்று முதல் மனிதர்களைத் தின்பதைவிட்டு இந்த கிராமத்து மக்களைக் காப்பாற்று. அவர்களையும் தன்னைப் போல் கருதி நேசிக்க வேண்டும் என்று வேண்டினான்'' அரசன்.

''அப்படியே ஆகட்டும்'' என்று ஒப்புக்கொண்டான் ராக்ஷஸன். அன்று முதல் அந்த கிராம மக்கள் நலமுடன் வாழ்ந்து வந்தார்கள்.

தமிழாக்கம் : ''ஸ்வாதி''

பக்தியில் இரு வகை உண்டு

●

ஸகுணம் சுளுவானதோடு ஆபத்தில்லாதது. ஆனால் ஸகுணத்திற்கு நிர்குணம் தேவையாகும். ஸகுணம் வளர அதில் நிர்குண தத்துவப் பூ மலர்ந்து பரிமளம் வீசவேண்டும். நிர்குணமும் ஸகுணமும் பரஸ்பரம் உதவுபவை, விரோதமானவையல்ல. ஸகுணத்திலிருந்து கிளம்பி நிர்குணத்தைப் போய் பிடிக்கவேண்டும்; நிர்குணத்திற்கும் சித்தத்தின் நுணுக்கமான அழுக்கைக் கழுவ ஸகுண நீர் தேவையாகிறது. இவை இரண்டுமே ஒன்றினால் ஒன்று அழகுபெறும். இந்த இருவகை பக்தி இராமாயணத்தில் மிகச் சிறந்த முறையில் காட்டப்பட்டிருக்கிறது. அயோத்தியா காண்டத்தில் இருவகை பக்தியும் வந்திருக்கிறது. இந்த இருவகை பக்தியே இராமாயணத்தில் விவரிக்கப்பட்டுள்ளது. பரதனுடைய பக்தி முதல் வகையைச் சேர்ந்ததாயிருக்க லக்ஷ்மணனுடையது இரண்டாம் வகையினதாகும். இவர்களுடைய உதாரணத்திலிருந்து நிர்குணபக்தி, ஸகுண பக்தி ஆகியவற்றின் தன்மைகள் நமக்குத் தெளிவாகும்.

இராமர் வனவாசத்திற்குப் போகத் தொடங்கியபொழுது லக்ஷ்மணனை உடன் அழைத்துப் போவதாயில்லை. இராமருக்கு அவனை உடன் அழைத்துப் போக அவசியமெதுவுமே தோன்றவில்லை. அவர் லக்ஷ்மணனிடம், "லக்ஷ்மணா, நான் காட்டிற்குப் போகிறேன்; எனக்கு தந்தை இவ்வாறு கட்டளை இட்டியிருக்கிறார்' நீ வீட்டிலேயே இரு. என்னுடன் வந்து ஏற்கெனவே வருந்தும் தாய்மாரையும் தந்தையும் மேலும் துன்பத்திற்குள்ளாக்காதே. பெற்றோருக்கும், குடிமக்களுக்கும் பணி புரி. நீ அவர்களுடன் இருந்து வருவாயானால் எனக்குக் கவலையில்லாதிருக்கும். எனக்கு பதிலாக, என் பிரதிநிதி போல் நீ இருந்து வா. நான் காட்டிற்குப் போவதால் எனக்கு ஏதோ ஆபத்து வந்துவிட்டது என்று அர்த்தமில்லை. நான் ரிஷிகளின் ஆசிரமத்திற்கே போகிறேன்" என்று கூறி இராமர் லக்ஷ்மணனை சமாதானப்படுத்திக்கொண்டிருந்தார். ஆனால் லக்ஷ்மணன் இராமர் கூறியது அனைத்தையும் ஒரு நொடியில் ஒரே சொல்லில் தூக்கி எறிந்துவிட்டான்; வெட்டு ஒன்று

துண்டு இரண்டாய்ச் செய்துவிட்டான். துளசிதாஸர் இந்தக் கட்டத்தை வெகு அழகாய் சித்திரித்திருக்கிறார். லக்ஷ்மணன் சொன்னதாவது:—"நீங்கள் எனக்கு தலை சிறந்த வேதமார்க்கத்தைச் சொல்லியிருக்கிறீர்கள். உண்மையில் நான் அதை நிறைவேற்றவும் வேண்டியது தான். ஆனால் அந்த அரசாட்சியின், அரசியலின் சுமையை என்னால் தாங்கமுடியாது. உங்களுக்குப் பிரதிநிதியாய் இருக்கும் சக்தி எனக்கில்லை. நான் ஒன்றுமறியாப் பிள்ளையல்லவா?"

"दीन्हि मोहि सिख नीकि गोसांई।
लागि अगम अपनी कदराई॥
नरवर धीर धरम-धुर-धारी।
निगम-नीति केते अधिकारी॥
मैं सिसु प्रभु-सनेह-प्रतिपाला।
मंदरु मेरु कि लेहिं मराला॥"

தீன்ஹி மோஹி ஸிக நீகி கோஸாயீ |
லாகி அகம அபனீ கதராயீ ||
நரவர தீர தரம துர தாரீ |
நிகம நீதி கேதே அதிகாரீ ||
மை ஸிஸு ப்ரபுஸநேஹ ப்ரதிபாலா |
மந்தரு மேரு கி லேஹி மராலா ||

"அன்னபட்சி மேருமலையைத் தூக்கமுடியுமா? அண்ணா, நானோ இன்று வரையில் உங்கள் அன்பிலேயே, ஆதரவிலேயே வளர்ந்தவன். நீங்கள் இந்த ராஜநீதியை, அரசியல் முறையை வேறு எவருக்கேனும் போதியுங்கள். நான் சிறுபிள்ளையாகையால் எனக்கு அது புரியாது" என்று சொல்லி லக்ஷ்மணன் மேலே பேச்சு வளராமல் முற்றுப்புள்ளி வைத்துவிட்டான்.

நீரைவிட்டு எப்படி மீனினால் இருக்க முடியாதோ அப்படியே தான் லக்ஷ்மணனுடைய நிலைமையும். இராமரை விட்டுப் பிரிந்து இருப்பதற்கு வேண்டிய பலம் அவனிடம் இல்லை. அவன் உடல் முழுமையும் அன்பு நிரம்பியிருந்தது. இராமர் தூங்கும்பொழுதும் தான் விழித்திருந்து அவருக்குப் பணி புரிவதிலேயே அவனுக்கு

இன்பம். நம் கண்ணில் கல் ஒன்று வந்து தாக்க இருக்கும்பொழுது கை உடனே எப்படிக் கண்ணை வந்து பொத்திக் கல்லின் தாக்குதலைத் தான் ஏற்றுக்கொள்ளுகிறதோ அவ்வாறே லக்ஷ்மணன் இராமருக்குக் கையாகிவிட்டான். இராமரை எவரேனும் அடிக்க வந்தால் லக்ஷ்மணன் முன்சென்று அடியைத் தான் ஏற்று வந்தான். துளசிதாஸர் லக்ஷ்மணனுக்கு ஒரு மிகவும் சிறந்த உவமை கூறியிருக்கிறார். கொடி மேலே பறந்துகொண்டிருக்கிறது; வணக்கம், வழிபாடு, பாட்டு எல்லாம் கொடிக்கே செய்கிறோம். அதன் நிறம் அதன் உருவம் ஆகியவற்றை விவரிக்கும் பாட்டுகள் பாடப்படுகின்றன. ஆனால் அதன் ஒரு பகுதியாய் நெடிது நிற்கும் அந்தக் கம்பத்தை யார் கவனிக்கிறார்கள்? இராமருடைய கீர்த்தி என்ற ஆலவட்டக் கொடி பறந்துகொண்டிருக்கிறதே, அதைத் தாங்கி நிற்கும் கம்பம் லக்ஷ்மணனே. அவன் நிமிர்ந்து நேரே நிற்கிறான். கொடியின் கம்பம் ஒருபொழுதும் வளையவோ கோணவோ கூடாது; அவ்வறே இராமர் புகழைப் பரப்பும் லக்ஷ்மணன் என்ற கம்பம் என்றும் வளைந்ததில்லை. கீர்த்தி யாருக்கு? இராமருக்குத் தான். உலகத்தின் கண்ணில் கொடி தெரிகிறது; கம்பத்தை எவரும் கவனிப்பதில்லை. சிகரம் தெரிகிறது; அதன் அஸ்திவாரம் எவருக்கும் தெரிகிறதில்லை. இராமருடைய கீர்த்தி உலகில் பரவிக்கொண்டிருக்கிறது; ஆனால் லக்ஷ்மணனைப் பற்றிய பேச்சையே காணோம். பதினான்கு வருஷம் இந்தக் கம்பம் நிமிர்ந்து நின்ற வண்ணமேயிருந்தது. சிறிதும் தொய்ந்ததில்லை. அவன் பின்னால் நகர்ந்து நின்ற இராமருடைய பெருமையைப் பரப்பிக்கொண்டிருந்தான். இராமர் பெரிய பெரிய கடினமான காரியங்களை லக்ஷ்மணனைக்கொண்டே செய்வித்து வந்தார். சீதையைக் காட்டில் கொண்டுவிடும் வேலையும் கடைசியில் லக்ஷ்மணனிடமே ஒப்புவிக்கப்பட்டது. பாவம், லக்ஷ்மணன் சீதையைக்கொண்டு போய்விட்டு வந்தான். லக்ஷ்மணனுக்கு தனக்குச் சொந்தமான வாழ்க்கையென்ற ஒன்று இல்லாமலே போய்விட்டது. அவன் இராமருடைய கண்களாகவும், இராமருடைய கை-கால்களாகவும், இராமருடைய மனமாகவுமே ஆய்விட்டான். ஆறு கடலில் கலப்பதைப் போல லக்ஷ்மணனுடைய பணிகள் இராமனுள் கலந்துவிட்டன. அவன் இராமருடைய நிழலாய் விட்டான். லக்ஷ்மணனுடைய இந்த பக்தி ஸகுணமானது.

பரதன் நிர்குண பக்தி புரிந்தவன். அவனுடைய சித்திரத்தையும் துளசிதாஸர் வெகு நன்றாய்த் தீட்டியிருக்கிறார். இராமர் காட்டுக்குப் போனபொழுது பரதன் அயோத்தியில் இல்லை. அவன் வந்தபொழுது தசரதர் காலமாயிருந்தார். குரு வசிஷ்டர், "நீ அரசாட்சியை நடத்து'' என்று அவனுக்குப் புத்தி சொன்னார். ஆனால் பரதன், "நான் இராமரைப் பார்க்கவேண்டும்'' என்றான். இராமரைக் காணவேண்டுமென்று அவன் துடித்துக்கொண்டிருந்தான். ஆனால் அதோடு கூடவே ராஜ்யத்தின் ஏற்பாடுகளையும் அவன் செய்துவந்தான். இந்த ராஜ்யம் இராமருடையது ; அதன் நிர்வாகக் காரியங்களைச் செய்வது இராமருடைய காரியத்தைச் செய்வதேயாகும் என்பது அவனுடைய பாவனை. சொத்தெல்லாம் யஜமானனுடையது; அதை நிர்வகித்து நடத்துவது மட்டும் தன் கடமை என்று அவனுக்குத் தோன்றிக்கொண்டிருந்தது. லக்ஷ்மணனைப்போல் பரதனால் விட்டேத்தியாய் இருக்கமுடியவில்லை. பரதனுடைய சுபாவம் இத்தகையது. இராமரிடம் பக்தியென்றால் இராமர் காரியத்தைச் செய்ய வேண்டும்; இல்லையேல் அந்த பக்தியினால் பயனென்ன? ராஜ்ய நிர்வாகத்திற்கு வேண்டிய எல்லா ஏற்பாடுகளும் செய்துவிட்டு பரதன் இராமரைச் சந்திக்கக் காட்டிற்கு வந்திருக்கிறான். "அண்ணா, இது உங்கள் ராஜ்யம். நீங்களே—'' என்று அவன் சொல்லியாவதற்குள் இராமர் அவனிடம், "பரதா, நீயே ராஜ்யத்தை ஆளுவாய்'' என்று சொல்லுகிறார். பரதன் சங்கோசத்தால் அப்படியே நின்று விடுகிறான். அவன், "உங்கள் கட்டளையை தலையால் தாங்குகிறேன்'' என்கிறான். இராமர் எதைச் சொன்னாலும் ஏற்றாக வேண்டியதே. அவன் தனது என்பவை அனைத்தையும் இராமரிடம் அர்ப்பணம் செய்திருந்தான். போய் ஆட்சிக் காரியங்களை நடத்தலானான். ஆனால் அதிலும் விசேஷமென்னவென்றால், அயோத்தியிலிருந்து இரண்டு மைல் தொலைவில் தங்கித் தவம் செய்து கொண்டிருந்தான்; தவம் இயற்றிக்கொண்டே அரசாட்சியை நடத்தினான். இறுதியில் இராமர் பரதனைச் சந்தித்தபொழுது இவ்விருவரில் காட்டிலிருந்து தவம் புரிந்த உண்மை தபஸ்வி யார் என்று சொல்லுவது சிரமமாய் விடுகிறது! இருவர் முகங்களும் ஒன்று போன்றவை. வயதில் தான் சிறிது வேற்றுமையே தவிர இருவர் முகத்திலும் தவத்தின் ஒளி ஒரே வகையில் வீசிக்கொண்டிருந்ததால் இருவரையும்

பார்த்து இவர்களில் இராமர் யார், பரதன் யார் என்பதை அறியவே முடியாமலிருந்தது. ஒரு சைத்திரிகன் இந்தக் காட்சியை ஒரு சித்திரமாய் வரைவானுயின் அது எவ்வளவு புனிதமான சித்திரமாயிருக்கும்! இவ்வாறு பரதன் உடலைப் பற்றிய வரையில் இராமரிடமிருந்து தொலைவிலிருந்தபோதிலும் மனதில் அவன் ஒரு கணமும் விலகி இருக்கவில்லை. ராஜ்ய நிர்வாகத்தை அவன் ஒரு புறம் நடத்திக்கொண்டிருந்தபோதிலும் அவன்மனம் இராமரிடமே இருந்து வந்தது. நிர்குணத்தில் ஸகுணபக்தி இண்டு இடுக்கில்லாமல் திணிக்கப்பட்டேயிருக்கிறது. ஆகையால் அங்கே பிரிவு என்ற பேச்சையே நாம் எப்படி எடுக்கலாம்? ஆகையால் பரதனுக்கு இராமருடைய பிரிவே தோன்றவில்லை, அவன் தன் எஜமானனின் தலைவனின் வேலையைச் செய்து வந்தான்.

இக்கால வாலிபர்கள், "ராமநாமம், ராமபக்தி, இராமன் வழிபாடு என்ற இவையெல்லாம் எங்களுக்குப் புரியவில்லை. நாங்கள் பகவானுடைய பணியைச் செய்வோம்" என்கிருர்கள். ஆனுல் பகவானுடைய காரியத்தை எப்படிச் செய்யவேண்டும் என்பதற்கு ஒரு முன் மாதிரியை பரதன் காட்டிவிட்டான். அவன் பகவானுடைய வேலையைச் செய்து பிரிவை தன்னுள் அடக்கிக் கொண்டான். பகவானுடைய காரியத்தைச் செய்துகொண்டே அவருடைய பிரிவை உணருவதற்குக்கூட நேரமில்லாதிருப்பது வேறு விஷயம்; எவனுக்கு பகவானிடம் தொடர்பெதுவுமே இல்லையோ அவன் பேசாதிருப்பது வேறுவிஷயம். பகவானுடைய காரியத்தைச் செய்துகொண்டே புலனடக்கத்துடன் வாழ்க்கை நடத்துதல் அரிதாகும். பரதனுடைய இந்தப் போக்கு, இந்த வாழ்க்கைமுறை நிர்குண வழியில் நடப்பதாயிருந்த போதிலும் அங்கும் ஸகுணத்தின் அடிப்படை இல்லாமற் போய்விடவில்லை. "ஏ ராமப்பிரபு, உங்கள் கட்டளையை நான் சிரசால் தாங்குகிறேன். நீங்கள் எதைச் சொன்னுலும் எனக்கு அதில் சந்தேகம் தோன்ருது" என்று சொல்லிவிட்டு பரதன் திரும்பியபொழுது அவன் மீண்டும் பின்னுல் திரும்பி இராமரைப் பார்த்து, "பகவானே, மனதிற்கென்னவோ சமாதானமாயில்லை. எதையோ பறிகொடுத்தது போல் தோன்றுகிறதே!" என்ருன். இராமர் உடனே அவன் மனதைப் புரிந்துகொண்டு "இந்தப் பாதுகையைக்

கொண்டு போ'' என்றார். கடைசியில் ஸகுணத்தினிடத்தில் மரியாதை ஏற்படவே செய்தது. நிர்குணத்தை ஸகுணமானது இறுதியில் நைப்புள்ளதாய்ச் செய்தேவிட்டது. லக்ஷ்மணனுக்கு பாதுகை பெறுவதனால் சமாதானம் ஏற்பட்டிராது; அவன் அபிப்பிராயத்தில் பாலை வேண்டுகிறவனுக்கு மோர் கொடுத்தால் எப்படி திருப்தியாகாதோ அப்படியேதான் இது இருந்திருச்கும். பரதன் தன்மை இதிலிருந்து மாறுபட்டது. அவன் புறத்தே தொலைவிலிருந்து கொண்டு காரியம் செய்துகொண்டிருந்தபோதிலும் அவன் மனம் ராம மயமாயிருந்தது. பரதன் தன் கடமையை நிறைவேற்றுவதையே ராமபக்தி என்று கொண்டிருந்தபோதிலும், பாதுகை அவசியமென்று உணர்ந்தான்; அவையின்றி அவனால் அரசாட்சி நடத்த முடியாமலிருந்தது. அந்தப் பாதுகையின் கட்டளை என்று கொண்டே அவன் தன் கடமையைச் செய்துவந்தான். லக்ஷ்மணன் எப்படி இராமருடைய பக்தனோ அப்படியேதான் பரதனும். இருவருடைய தன்மைகளும் வெளிப் பார்வைக்கு வேறாயிருந்தன. பரதன் கடமையிலும் தத்துவத்திலும் உறுதிகொண்டிருந்த போதிலும் அவனுடைய தத்துவப் பற்றிக்கும் பாதுகையில் விளையும் நைப்பு தேவையாகவே இருந்தது.

[மூலம்: ஆச்சார்ய விநோபாஜியின் கீதைப் பேருரைகள்
சர்வோதயப் பிரசுரம்.]

அசோகா சுகந்த பாக்குத்தூள்

உதிர்ந்த மலர்கள்

★

மலர் இருக்குமிடத்தை அதன் மணமே அறிவிக்கும். ஒருவனது செயலின் நன்மையை அவனது சொல்லே அறிவிக்கும்.

★

ஒருவனது உள்ளத்தில் நிரம்பிக்கிடக்குப் தீமைகளை அவனது மனமே அறிவிக்கும். ஒருவனது உள்ளக் குறிப்பை அவனது முகம் முன்பே அறிவிக்கும்.

★

முகஸ்துதி செய்பவன் உங்களை வாயாரப் புகழ்கிறுன். அவன் உங்களை அயோக்கியன் என்று எண்ணுகிறுன். ஆனல் நீங்களோ உங்களைப் புகழுவதைக்கேட்டு மிகவும் மகிழ்ச்சி யடைகிறீர்கள்.

★

மக்கள் இம்மையிலும் மறுமையிலும் இன்பம் எய்துவதற்கு ஆதாரமானவை மார்க்கங்கள் எனப்படும். மார்க்கம் என்பது மதம், சமயம் எனப் பொருள்படும். மதங்கள் யாவும் இன்பவாழ்வுக்கு ஏற்ற வழிகளாகும். எல்லாக் கொள்கைகளையும் தன்னிடம் கொண்டதே சன்மார்க்கம் எனப்படும்.

★

சூரியன் ஒளியை உதவுவதால்தான் எல்லாப்பொருள்களும் தெரிகின்றன. சூரியனும் தெரிகின்ருன். அதுபோல இறைவன் பேரருள் புரிவானுயின் எல்லா உண்மைகளும் விளங்கும். இறைவனது கடாட்சமும் உண்டாகும்.

—"தும்பி"

பழமையில் மோகம்

"குச்சாமாமா"

(ஐந்தாம் பாகம்)

இப்படியும் உண்டா மனுஷ்யாள்? முன் கூட்டித்தான் தெரிவித்தாச்சே. அவர்களுக்குச் சௌக்கியமில்லாதபக்ஷம் சொல்லியிருந்தால் இந்த ஏற்பாடுகளைச் செய்யாமலிருந்திருக்கலாமே! கேலிக்கூத்தாயிருக்கிறதே! இது என்ன புதுமையோ! என்று பேசிக்கொண்டனர்.

"புதுமை" என்ற அச்சொல்பார்த்தஸாரதியின் மனத்தில் சொரேல் என்று தைத்தது. ஆம் புதுமைதான். பலவகையில் பரிணமித்துத் தலைவிரித்தாடும் புதுமை, இதுதானறியாத புதுமை, தன்னால் ரஸிக்க முடியாத புதுமை. "ஐயோ! இப்புதுமை யென்னும் பாழுங்கிணற்றில் கண்ணைத் திறந்து கொண்டே விழுந்துவிட்டேனே! இதன் முடிவு யாதாகுமோ? என்றெல்லாம் எண்ணமிட்டு மனதைக் குழப்பிக்கொண்டிருந்தான் பார்த்தஸாரதி. இடையில் ஒவ்வொருவர் வந்து ஏதேதோ கேட்டுக்கொண்டிருந்தனர். அவர்களுக்கு ஏதோ பதில் சொல்லிக்கொண்டிருந்தான் பார்த்தஸாரதி என்ன கேட்டார்கள் என்ன பதில் சொன்னோம் என்பதே அவன் சித்தத்தில் பதியவில்லை.

மணி 9 ஆயிற்று. தெருவில் கோவிந்தன் தனது காரில் தன் மனைவி இந்திராவையும் மைத்துனி ராஜலக்ஷ்மியையும் அழைத்துக் கொண்டவராய் வந்து சேர்ந்தார். மூவரும் உள்ளேயும் வந்தனர். கோவிந்தன் "சரி சரி! நீங்கள் சொல்லியிருந்தபடியே 9 மணிக்கு வந்துவிட்டோம். அடுத்தபடி என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்டார்.

அங்கு கூடியிருந்த பார்த்தஸாரதியின் நண்பர்கள் ஏதோ கசமுச என்று பேசித் தமது அதிருப்தியையும் ஆச்சரியத்தையும் தெரிவிக்கலாயினர். இப்பொழுதும் நிலவரத்தை எப்படியாவது சமாளித்துச் சம்பவத்தைத் தன் இஷ்டத்திற்குச் சாதகமாக மாற்றிக்கொள்ள விரும்பிய பார்த்தஸாரதி "வேறு யாரும் தண்டையார் பேட்டையிலிருந்து வரவில்லையோ?" என்று கேட்டான். கோவிந்தன் தனது மனைவியின் பக்கம் திருப்பிப்பார்த்தார். இவ்விதக் கேள்வி பிறக்குமென்றோ அதற்கு என்ன பதில் சொல்வதென்றோ அவர் எதிர்பார்க்கவில்லை—ஒத்திகையும்

பெறவில்லை என்பது விளக்கமாயிற்று கோவிந்தனும் ஒருவாறு சமாளித்துக்கொண்டவராய்...''வரக்கூடியவாள் வருவதாயிருந்தால் அவரவர் சௌகர்யப்படி வந்துவிட்டுப் போகிறார்கள். நாம் மேலே நடக்கவேண்டியதை கவனிக்கலாமே'' என்றார்.

விரஸமான விஷயத்தை விஸ்தரிப்பில் என்ன ருசி இருக்க முடியும்? எப்படியோ என்னவோ வைதிக கர்மாக்கள் ஒருவாறு முடிந்தது. அதைத் தொடர்ந்து சாப்பாடு, வந்திருந்தவர்களில் ஓரிருவர் சாப்பாட்டிற்குத் தண்டையார்பேட்டைக்கே போய்விட திட்டமிட்டுக் கொண்டு வந்ததாகவும், இனி நடக்கவேண்டிய சடங்குகள் ஒன்றுமில்லையானால் தண்டையார்பேட்டைக்கே திரும்பிவிடுவதாகவும் தெரிவித்தனர். ஓரிருவர் காலையிலேயே சாப்பிட்டுவிட்டுதான் புறப்பட்டதாலும், மறுபடியும் சாப்பிட முடியாதென்றும் தெரிவித்தனர். ஓரிருவர் இந்த சாப்பாடெல்லாம் தமக்குப் பழக்கப் பட்டதல்லவென்றும், தெரிவித்தனர். மிக்க நிர்ப்பந்தத்தின் பேரில் கோவிந்தனும் ராஜலக்ஷ்மியும் சாப்பிட்டதாக ஒரு இலையையும், பரிமாறிய உண்டியையும் தொட்ட தோஷந்தோடு வெளியே எறிந்தனர்.

எப்படியோ ஒரு வழியாக மணிக்கு சாப்பாடெல்லாம் முடிந்து சந்தடியும் குறைந்தது. உடனே, தகுமான வட்டாரங்களின் நோக்கத்தை ஜாடையாலறிந்த கோவிந்தன் ''சரி எல்லாமாயிற்றல்லவா? இனி எங்களுக்கு ஒன்றும் வேலையில்லையே?'' என்று சொல்லிக் கொண்டே புறப்படலானார். இந்திராவும் ராஜலக்ஷ்மியும் புறப்பட்டே விட்டனர். கோவிந்தன் ''எங்களுக்கு'' என்றதால் பெண்களிருவரும் பிரத்யேகமாக விடைபெற்றிட வேண்டாமே என்ற தீர்மானந் தான் போலும்.

வந்திருந்தவர் அவ்வளவு பேரும் பிரமித்தேவிட்டனர். பார்த்தஸாரதிக்கோ பேச்சே வெளிவர மறுத்தது. ஆயினும் சமாளித்துக் கொண்டு ''அப்படிப் போகலாமா? கிருஹப் பிரவேசஞ் செய்தவர் கிருஹத்தில் ஒன்றிரண்டு நாள்கூட தாங்காமல் வேற்று மனிதர் வீட்டுக் கல்யாணத்திற்கு முகூர்த்த நேரத்திற்குச் சென்று முகூர்த்தமானதும் தம் வீடு திரும்புவது போலவா நீங்கள் போவது. மேலும்'' என்பதற்குள் இந்திராவும் ராஜலக்ஷ்மியும் முகத்தில் கடுங் கோபத்தை வருத்திக்கொண்டு விடுவிடுவென்று நடந்து காரில் ஏறி உட்கார்ந்துகொண்டு படேர் படேரென்று இடி இடித்தது போல் கதவையுஞ் சாத்திக்கொண்டனர்.

கோவி: இல்லை. வீட்டில் அம்மாவுக்கு (மாமியாருக்கு)

உடம்பு சுகமில்லை. அதனால்... இதற்குள் பீ...பீ...பீ...என்று நூறுதடவை காரின் 'ஹாரன்' பிறகு நிர்பந்தமாக வர வழைக்கப்பட்ட சிரிப்புடன் "நான் வருகிறேன்" என்று சொல்லிக்கொண்டே மேற் கொண்டும் பதிலுக்குக் காத் திராமல் சென்று காரில் ஏறி உட்கார்ந்தார். அதற்குள் வண்டியின் பின் பக்கத்தி லிருந்தவர்கள் "என்ன நச்சு-பிச்சு, என்று கவைக்குதவாத பேச்சு" என்று கோவிந்தனைக் கடிந்துகொண்டனர். மெளன மாக கோவிந்தன் காரை நடத்த லானார். பிரமித்து நின்ற பார்த்தஸாரதி நின்றபடியே பிரமித்திருந்தான்.

ஒருவாரம் கழித்து கோவிந் தன் மாத்திரம் பார்த்தஸாரதி யைக் காண வந்திருந்தார்.

"என்ன! நீங்கள் அந்தப் பக்கம் வரவே இல்லையே?" என்றார் பார்த்தஸாரதியிடம்.

பார்த்த்ஸாரதி என்ன பதில் சொல்வான்? அசட்டுத்தன மாக ஏதோ மென்று விழுங்கி னான். ஒழியவில்லை என்றான். ஒன்றும் அலுவலில்லையே! என் றான். மொத்தத்தில் முந்தைய அனுபவங்கள் எல்லாம் ஒரே காலத்தில் ஒன்றோடொன்று போட்டிபோட்ட வண்ணம் அவன் மனத்தில் தோன்றலா யின. கோவிந்தனைக் கோபித்து என்ன பயன்? குறைகூறித் தான் லாபமுண்டா? ஏதோ பாவம் யாருடைய வோசைப் பாவையாயிருப்பவரை நோவ தால் பயனில்லை. அவரிடம் ஒரு அனுதாபந்தான் ஏற்படு வது நியாயம் என்றெல்லாம் மனத்திலெண்ணினான்.

பிறகு ஒன்றிரண்டு முறை பார்த்தஸாரதி தண்டையார் பேட்டைக்குப் போயும் வந் தான். அப்பொழுதெல்லாம் பார்த்தஸாரதியின் பேரில் அது இது, அவர் சொன்னார் இவர் சொன்னார் என்று ஏதேதோ அலர்மேல்மங்கையம்மாள் ஆவ லாதிகள் சொல்வாள். இதனை லெல்லாம் பார்த்தஸாரதிக்கு ஒரு மனக்கசப்பு ஏற்படவும் அது அதிகரிக்கவும் செய்தது.

கார்த்திகைக்கு ராஜலக்ஷ்மி யைக்கொண்டுவிடும்படி கோவிந் தாசாரியருக்குத் தெரிவித்தான். பதிலே வரவில்லை. மறுபடி மறுபடியும் எழுதியதின் பேரில் கார்த்திகைக்குக் கொண்டு விட வேண்டும் என்றால் என்ன வென்றே தமக்கு விளங்க வில்லை என கோவிந்தாசாரியர் தெரிவித்தார் ஐயோ பாவம்! கார்த்திகைக்கு மாப்பிள்ளையை அழைப்பதுதான் அவருடைய அனுபவமாகவிருக்கலாம். ஆனால் அதற்கு முன் தீபாவளி வந்ததே? அதைப்பற்றி என்ன வெக்கங்ககட்ட தீபாவளி வருஷா வருஷம் வருவது தானே. அதையெல்லாம் கோவிந்தாச்சாரியரோ அலர் மேல் மங்கையம்மாளோ ஒரு

விஷயமாகச் சிந்திக்கவே இல்லை.

கார்த்திகைக்கு ராஜலக்ஷ்மி பார்த்தஸாரதியின் வீட்டிற்கு வந்த வைபவத்தை மாத்திரம் சொல்லப்போனால் ஒரு அத்தியாயமாகும். இரவு 7-30 மணிக்கு கோவிந்தன், இந்திரா, ராஜலக்ஷ்மியுடன் காரில் வந்து சேர்ந்தார். வந்ததும் பார்த்தஸாரதியைப் பார்த்து "இப்போது என்ன செய்ய வேண்டும்" என்று கேட்டார். கூடத்தில் வைத்திருந்த தீபங்களை ஏற்றிவிடும்படி ராஜலக்ஷ்மியை ஏவினர். அது கழிந்ததவுடன் சரி! நாங்கள் வரலாமா? என்று அவர் பார்த்தஸாரதியிடஞ் சொல்லிக்கொண்டேயிருக்கையில் ஸ்திரீ ரத்னங்கள் இருவருஞ் சென்று காரில் ஏறிக்கொண்டு தங்கள் அருவருப்பு, பொறுமையின்மை கோபம் ஆகியவற்றைத் தெரிவிக்கும் வகையில் காரின் கதவைச் சாத்திக்கொண்டனர்.

விஸ்தரிப்பதால் பயனில்லை. மேற்கொண்டும் பார்த்தஸாரதி இரண்டொரு முறை சென்று ராஜலக்ஷ்மியை அழைத்துவந்து குடித்தனந் தொடங்கவேணுமென்று முயற்சித்தார். ஒன்றும் பயன்படவில்லை. செல்லும் பொழுதெல்லாம் அலர்மேல் மங்கையம்மாளின் ஆவலாதிகள்தான் மேலோங்கி நிற்கும். அவருடைய குற்றச்சாட்டுகளுக்குச் சமாதானஞ் சொல்வதும் குறைபாடுகளுக்கு நம்பிக்கையும் தைரியமும் சொல்வதுமே பார்த்தஸாரதிக்குப் போதுமென்றாகிவிடும். இந்த லக்ஷணத்தில் தான் போனவிஷயத்தைப் பிரஸ்தாபிக்கவே முடியாமல் வீடு திரும்புவான்.

இடையில் அலர்மேல்மங்கையம்மாள் தேகம் நலிவுற்றுப் படுக்கையானாள். சில தினங்கள் வீட்டிலிருந்த பிறகு அடுத்துள்ள ஆஸ்பத்திரியிலுஞ் சில தினங்கள் கிடந்து மறுபடியும் வீடு வந்து இப்படியுமப்படியுமாய் அவஸ்தை பட்டு ஒரு நாள் காலமாகிவிட்டாள். உலகமே மூழ்கிவிட்டதுபோல் தான் கோவிந்தாச்சாரியரின் குடும்பம் துக்கத்தில் மூழ்கியது. வாஸ்தவத்தில் யாருக்குத்தான் இருக்காது. அவ்வம்மை இறந்தால் ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு காரணத்திற்காக விசேஷ துக்கம்.

முதல் நாள் பார்த்தஸாரதிக்குப் போக முடியவில்லை. மற்றும் அவன் முதல் மனைவி லக்ஷ்மி இறந்து ஒரு வருஷமாகவில்லையானதால் அதற்குள் ருத்ரபூமிக்குச் செல்லலாகாதென்ற ஒரு ஸம்பிரதாயம். ஆகவே மறுநாள் சென்றான். சற்று தூரத்திலேயே இருந்து நடப்புகளைப் பாாத்துவிட்டு வந்தான். அதைத் தொடர்ந்து மற்ற ஈமச்சடங்குகள் யாவும் நடந்தன. அவற்றுள் முக்கியமாகவும் விசித்திரமாகப் பார்த்தஸாரதிக்குத் தோன்றிய விஷயம், ஒன்று யாதெனில்,

GANZON BROS.

DRESS SPECIALISTS

3, Thope Street

TRIPLICANE, MADRAS - 5

★

Clothing Contractors to Government of India Supply Dept., Railways & Public Bodies, Ready - to - Wear - Garments Manufacturers and Exporters

★

In the hands of the Master - Tailors and Cutters of GANZONS, Clothes acquire a subtle distinction beyond the power of imitation.

★

GANZONS have set standards of superb craftsmanship-Standards that have been the pride of the firm of Ganzons for over a quarter of a century.

மூத்த மகன் முகங் கொடுத்துப் பேசுவாரின்றி எட்ட நின்ற தம் குன்று கோபாலனே ஈமச் சடங்குகளை எல்லாஞ் செய்தது மாகும். இப்படியுமுண்டா என்று பார்த்தஸாரதி தன் மனத்திலேயே வியப்புற்ருன். அலர்மேல்மங்கையம்மாள் நோய் வாய்ப்பட்டிருந்த காலத்தில் அனுதாபத்துடனும் அங்கலாய்ப்புடனும் ஓடியாடிக் கூட விருந்து தனது அன்பையோ—பக்தியையோ தெரிவிக்கவில்லை என்பது பார்த்தஸாரதியின் மேல் ஒரு குற்றச்சாட்டு. இதைப் பலரும் பலவிதமாகத் தெரிவித்தனர். அவரவருக்கும் ஏதோ தக்கபடி பார்த்தஸாரதி பதிலளித்தான். அதனுலெல்லாம் ஒருவராவது திருப்தியடைந்ததாகத் தெரியவில்லை. மொத்தத்தில் பார்த்தஸாரதியும், அவ்விடமே ஒரு குடியாக கும்பலாய் கோவிந்தம் போட்டிருக்க வேணுமென்ற அபேக்ஷை ஒரு முகமானதாயிருப்பதாகத் தோன்றியது பார்த்தஸாரதிக்கு. மறைமுகமாகப் பலருந் தெரிவித்த இக் கருத்தைப் புரிந்துகொண்டதாகவும் பார்த்தஸாரதி காண்பித்துக் கொள்ளவில்லை.

இவையாவுங் கழிந்த சில நாட்களுக்கெல்லாம் கோவிந்தனின் பங்களா கட்டிடவேலை பூர்த்தியாகி மாம்பலத்தில் யாவரும் குடியேறினர். அன்றும் பார்த்தஸாரதி அழைப்பின் பேரில் அங்கு சென்றிருந்தான். குடித்தனம் வரையில் பழைய பல்லவிதான். பழைய ஏற்பாடுதான். பார்த்தஸாரதி சென்றது பிற்பகலில்தான். அப்போது கோவிந்தனின் தாயாரோ தகப்பனரோ தம்பிகளோ யாரும் அங்கிருக்கவில்லை. ஒருக்கால், அவன் தந்தை காலையில் மட்டும் முகூர்த்த நேரத்திற்கு வந்திருந்து வழக்கம்போல் முகூர்த்தம் கழிந்ததும் தன் வீட்டிற்கே அவர் திரும்பிப்போயிருப்பாரென்று பார்த்தஸாரதி யூகித்தான். தனக்கு ஏதோ சிற்றுண்டிகள் வழங்கினர். அதைச் சாப்பிட்ட பின் பார்த்தஸாரதியும் வீடு திரும்பினன். அன்றிரவு போஜனஞ்செய்துவிட்டுத் திரும்பும்படி ஜாடையாக கோவிந்தன் தெரிவித்தார். ஆனல் இந்திராவுக்கு மூர்ச்சை ஏதாவது போட்டு பழைய அனுபவங்கள் ஏற்பட்டாலோ என்ற பயத்தில் ஒரு நிமிஷமுந் தாமதிக்கத் தைரியமில்லாதவனய் பார்த்தஸாரதி தன்னை மன்னிக்கும்படி வெகுவாகக் கேட்டுக் கொண்டு திரும்பினன்.

பிறகு இதைத் தொடர்ந்து அநேக முறை பல வழியாகவும் ராஜலக்ஷ்மியை அனுப்பிவைக்கும்படி கோவிந்தாச்சாரியரிடம் பார்த்தஸாரதி முயற்சித்துப் பார்த்தான்.

நானென்ன அனுப்பிவைப்பது? நீங்கள் புருஷனும் மனைவியும் மனமொத்து வாழ்வதை நான் வேண்டாமென்பேன? என்று ஒன்றிலும் படாதபடி

கோவிந்தாச்சாரியார் பதில் சொல்லி வந்தார், இவ்வளவு படித்தவர், வயதானவர் அனுபவம் நிறைந்தவர்.

கலியாணமான பெண்ணைப் புருஷன் வீடு சேர்ப்பித்ததில் தனக்கு ஒரு பொறுப்பு உண்டு அது தனது கடமைகளில் ஒன்று. அதைச் செய்வதில் தான் ஆவன செய்ய முயற்சிக்க வேண்டும். இவ்வாறு தட்டுக் கழித்தல் அழகல்ல. பொறுப் பற்றத் தனமுமாகும் என்று கூடவா இவருக்குத் தெரியாது என்று வியந்தான்.

கடைசியில் ஒரு நாள் ஒளிவு மறைவுகளைவிட்டு "இனியும் நான் ஆண்டியாகவே சுற்றிக் கொண்டிருக்கவேண்டுமா? ராஜ லக்ஷ்மியுடன் குடித்தனம் நடத்த வேண்டும். அவளை அனுப்பிக் கொடுக்க தயவு செய்யுங்கள். நாளுெரு குடியுங் குடித்தனமு மாக நிலைக்கத் தயவுசெய்து ஏற் பாடு செய்யுங்கள்'' என்று வணக்கத்துடன் விஞ்ஞாபித்துக் கொண்டான்.

கோவிந்தாச்சாரியார் அன்பு தொனிக்குங் குரலில் "உன் மனைவியுடன் நீ குடித்தனஞ் செய்வதை யாராவது வேண்டா மென்றுஞ் சொல்வார்களா? நான் மட்டும் ஏன் சொல்லப்போகிறேன். இது விஷயத்தில் நீயாயிற்று உன் மனைவியாயிற்று'' என்று சுருக் கமாகப் பதில் சொல்லிமுடித் தார்.

பார்த்தஸாரதி ராஜலக்ஷ்மியை அண்டினன். "இனி உன் தீர்மானந்தான் ராஜலக்ஷ்மி. என்னுடன் குடித்தனத்தை நடத்தி வாழ்க்கையைச் சிறப் பிக்கவேண்டும்...''

ராஜலக்ஷ்மி: [இடைமறித்து] என்னல் அங்கெல்லாம் வர முடியாது. அங்கெல்லாம் போய் குடித்தனம் நடத்துவதால் எனக்கு மாளாதத் துயரந்தான் நேரிடும்.

பார்: அப்படி ஒரு துயரமும் நேராது. நான் உத்திரவாத மளிக்கிறேன். என் வீட்டின் நிலவரத்தை ஒரு நாள்கூட அங்கு இருந்து அறியாமலேயே அங்கு மாளாத்துயரம் நேரிடு மென்று எப்படி அறிந்தாய்...

ராஜலக்ஷ்மி: இதெல்லாம் கோர்ட்டில் நடக்கும் குறுக்கு விசாரணை போல் கேட்டால் நான் பதில் சொல்லமுடியாது.

பார்த். கோர்ட்டும் இல்லை. குறுக்கு விசாரணையுமில்லை. அங்கு வந்திருப்பதால் என்ன துயரம் விளையக்கூடும்?

ராஜ: இங்கே என் அம்மாவும் இல்லை. தள்ளாத வயதில் ஒரு அப்பா. கல்யாணமாகாத, இனி ஆகமுடியாத பிரஹ்மசாரி ஒரு அண்ணா, இவர்களை யார் பார்த்துக் கொள்வது. ஒரு அக்கா குழந்தை, குட்டி கள் ஸம்ஸாரி. அவளால் எதற் கென்று ஈடுகொடுக்க முடியும். ஒரு அக்கா நோஞ்சல் அவள் ஒரு மனுஷியாக நடமாடிக் கொண்டிருந்தாலே போது

திரட்டு

சிறந்த மாதாந்தர கட்டுரைப் பொக்கிஷம்

22-A, நரசிங்கபுரம் தெரு
மவுண்ட் ரோடு, சென்னை

★ பல ஆங்கிலப் பத்திரிகைகளின் சுவையான சார மிக்க விஷயங்கள்

★ 50-க்கு மேலான அரசியல், சமூக, விஞ்ஞான கட்டுரைகள், உண்மைக் கதைகள் !

★ பலதரப்பட்ட விஷயங்கள் !

★ பொது மக்களுக்கும் மாணவர்களுக்கும் இன்றியமையாதது.

★ சிறந்த முறையில் நிறைந்த பக்கங்களைக் கொண்டது.

தனிப்பிரதி விலை எட்டணுதான்.
வருட சந்தா ரூ. 6

மானேஜர், **திரட்டு**
22-A, நரசிங்கபுரம் தெரு,
மவுண்ட் ரோடு, சென்னை-2.

அன்புடையீர்,

திரட்டுக்கு நான் சந்தாதாரராகச் சேர விரும்புகிறேன். இத்துடன் ஒரு வருட/அரை வருட சந்தா ரூ............அனுப்பியுள்ளேன். பத்திரிகையை அடியிற்கண்ட விலாஸத்திற்கு அனுப்பி வையுங்கள்.

வணக்கம்.

விலாஸம் :—

....

....

....

மென்றிருக்கிறபொழுது...இந்த அப்பாவையும் அண்ணுவையும் அவர்கள் கவனித்துக்கொள்ள முடியுமா?

பார்த்: அதற்காக நீ ஆயுட்காலமெல்லாம் இங்கிருந்தாக வேணுமென்ருல்—என் குடித்தனத்தை எப்படி நடத்துவது?

ராஜ: அதெல்லாம் எனக்குத் தெரியாது. இவர்களை நடுத்தெருவில் விடுவதுபோல் என்ருல் விடமுடியாது.

பார்த்: வேண்டாம். இவர்களும் நம்முடனே இருக்கட்டும். என்ன வசதிகள் வேணுமாளுலும் செய்து கொடுக்க நான் சித்தமாயிருக்கிறேன். எப்படியும் என் வீடு. என் குடும்பம். என் குடித்தனம் என்று ஏற்பாடாக வேண்டாமா?

ராஜ: அது நீ யிருக்கும் இடத்தில் தான் வேண்டுமா என்ன? எனக்கு வெளியிடத்தில் கொஞ்சமும் சரிப்படாது. ஒரு மனுஷ்யன் மூன்று பேருள்ள விடத்திற்கு வருவது, மூன்று பேர் ஒருவரிருக்குமிடத்திற்குப் போவது, இவ்விரண்டில் எது சுலபம்? எது நியாயம். இது கூடவா தெரியக்கூடாது'

'நீ' யென்று ராஜலக்ஷ்மி சொன்னது பார்த்தஸாரதிக்கு ஏற்பட்ட புதிய அனுபவம், அதுவரையில் ராஜலக்ஷ்மி அவனை நேரிடையாக விளித்ததேயில்லை. ஏன் அவனுடன் அன்றைய வரையில் அவ்வளவு நேரம் பேசியதே இல்லை. அலர்மேல் மங்கையம்மாள் பேசுவாள். அப்போது குறுக்கும் நெடுக்குமாக அவ்விடத்தில் வந்து போவதால் ராஜலக்ஷ்மியும் அச் சம்பாஷணையில் தானும் பங்கெடுத்துக்கொண்டதாக ஸாதிப்பாள். அவ்வளவேயன்றி நேரிடப் பார்த்தஸாரதியுடன் பேசியதே இன்றுதான் முதல்தடவை என்று கூடச் சொல்லலாம். இவ்வளவு துரிதத்தில் படபடவென்று பேசும் முறையே பார்த்தஸாரதிக்கு ஒரு அதிசய அனுபவமாயிருந்தது. 'நீ' என்று அவனை விளித்தது இவ்வதிசயத்தின் சிகரந்தான். ஆயினும் வந்தவிடத்தில் பொறுமையைக் கையாளுவதுதான் முறை என்று பார்த்தஸாரதி எண்ணிஞன். தான் வகுத்த திட்டம் நிறைவேறவேண்டுமே என்னும் நோக்கமும் இருந்தபடியால் தன் மனத்திலெழுந்த அதிர்ச்சியைச் சற்றும் வெளியில் காட்டாமல் "இல்லை ராஜலக்ஷ்மி! ஒரு விஷயத்தை யோசித்துப் பார்க்க மறந்துவிட்டாய். கல்யாணம் ஆனல் பெண்தான் தனது கணவன் இல்லத்திற்குச் செல்வதென்றும், அங்கு குடித்தனம் நடத்துவதென்றும் தொன்றுதொட்டு உலகம் பூராவும் அனுஷ்டித்து வரும் கிரமம்..." என்ருன்.

ராஜலக்ஷ்மி பொறுமையிழந்து, சீற்றமுற்று "என்னல் இந்த வெட்டிப்பேச்சுகளை கேட்டுக் கொண்டிருக்க இயலாது. தொன்றுதொட்டு, பழக்கம்

வழக்கம், ஸம்பிரதாயம் என்ற இந்த கர்னுடகங்கள் எனக்குக் கட்டோடு பிடிக்காது. அர்த்த மற்ற இந்த கர்னுடகங்கள் ஒழியுங் காலந்தான் வந்துவிட்டதே! ஒழிந்துபோயின வென்றே சொல்லுவேன். ஏன்? இத்தனே காலமாகத்தான் ஒரு வகையில் நடந்து வந்ததே புதிய முறையில் இனியேன் இவையெல்லாம் நடக்கக் கூடாது? உலகம் எங்கும் என்ன நடக்கிறது என்று முற்றுஞ் சுற்றிப்பார்த்தாற் போல் சொல்கிருயே, எங்கள் வீட்டில் எப்படி நடக்கிறது என்று பார்க்கவில்லேயா? 'உலகம் எங்கும்' பார்த்தபோது இந்தக் குடும்பம் கண்ணில் படவில்லேயா? புது வழியில் இறங்கியதற்காக உலகம் எங்களே வேறுபடுத்தி யனுப்பிவிட்டதா? என்னேக்கேட்டால் பிள்ளே தன் மனேவி இல்லத்தில் ஒழுங்காக ஒன்றிப்போய் வாழும் வழக்கத்திற்கும் ஒரு ஆயிரம் உதாரணங்கள் காண்பிப்பேன்.

பார்: பழமையைப் பழிக்காதே ராஜலக்ஷ்மி. உங்களுக்கு எப்படியோ ஸந்தர்ப்ப விசேஷத்தால் ஒரு புதிய வகை ஏற்பட்டிருக்கலாம். அதில் தற்போதைக்கு நீங்கள் சுகங்காணவுஞ் செய்யலாம். வருங்காலத்தில் இப்புதுமை நல்ல முறையல்ல வென்று அனுபவத்தால் தோன்றவுங் கூடும். அப்பொழுது இன்றைய புதுமையை மாற்றி இதனினும் புதுமையான ஒரு முறையை ஏற்க நேரிடலாம். ஆனல் பழமை அவ்விதமானதல்ல. அநேக நூற்ருண்டுகளாக நமது சமூகத்தின் பழக்கத்திலிருந்து வருவது. அனுபவத்தில் இது உத்தமமானதென்று தெளிந்ததால்தான் நமது சமூகம் இதை இன்றும் விடாது கடைபிடித்து வருகிறது. அதில் உனக்கு ஆர்வமில்லாமலிருக்கலாம். அதனுலேயே அதைக் குறைகூறவோ பழிக்கவோ கூடாது. நான் சொல்வது போல் கொஞ்ச நாளேக்காவது உன்னுடையது என்று ஒரு குடித்தனத்தை நடத்திப் பார். உன் தந்தை அண்ணன் இருவரும் உன்னுடனேயே இருக்கட்டும். அவர்கள் வீட்டில் நீயும் உன்னேத்தொடர்ந்து நானும் வசிப்பதைவிட உன் வீட்டில் அவர்களும், நானும் வசிப்போம். கொஞ்ச நாள் கழிந்த பிறகு உனக்கு ஏதாவது வசதிக்குறைவு ஏற்படுமானல் வேண்டிய வசதியைச் செய்து கொள்ளவோ, வேறு முறையில் குடித்தனத்தையே மாற்றி அமைத்துக்கொள்ளவோ செய்யலாம்......

ராஜ: என்னல் அதொன்றும் முடியாது. கதியற்றவர்கள்போல் என் அண்ணுவும் அப்பாவும் உன் வீட்டில் எதற்காக வந்திருக்கவேண்டும்? அப்பொழுதே இந்த விஷயமாக எங்களுக்குள் ஒரு சந்தேகமேற்பட்டது. இந்த மனுஷன் நம்முடன் வந்து குறியுங் குணமு

VISIT

OUR

RETAIL SHOW ROOM

FOR ALL YOUR

DRESS REQUIREMENTS

★

ALL ITEMS MANUFACTURED

FROM

SELECTED B & C MILLS FABRICS

★

OMER BROS

106-107, Moore Market,

MADRAS - 3

பெரிய குடும்பங்களுக்கும் சிக்கன சுலப உதவி

இளநரை தடுத்து கூந்தல் செழிக்க

காஷ்மீர்-குஸூம்

ஊறின உங்கள் எண்ணெயை உபயோகிக்க

சாதாரணம் - பாக்கெட்டில்

நஞ்சன்கூடு-பல்பொடி

மேலும்

54, அரிய குடும்ப மருந்துகள் விவரப் புத்தகத்திற்கு எழுதுக

யுனைடெட் கன்ஸர்ன் 54, பந்தர் தெரு, சென்னை - 1.

மாக ஒன்றி வாழ்வாரு என்று நான் கேட்டேன். அதற்கு என்னென்னவோ பதில் சொல்லி சமாதானப்படுத்தினார்கள். என்னுள் மாத்திரம் ஒரு ஸந்தேகம் இருந்து வந்தது. அது நிஜமென்று இன்று வெளிச்சமாகி விட்டது.

பார்: முதலாவது என்வீடு என்று ஏன் கருதுகிறாய், நான் அது உன்வீடு என்று சொல்கிறேனே. மற்றும் உன்னுள் இருந்த ஸந்தேகத்தைப் போலவே என்னுள்ளும் ஒரு ஸந்தேகம் எழுந்தது. அதை நான் ஒளிவு மறைவு இல்லாமல் தெரிவித்தது உனக்கு நிலேவிருக்கலாம். அவ்வாறே உன் மனத்திலிருந்ததை நீயும் சொல்லி இருந்தால் எவ்வளவு நன்றாயிருந்திருக்கும்? போனது போகட்டும்...

ராஜ: போனது போகட்டும். போகவேண்டாமென்று உத்தரவு பிறப்பித்தால் செலாவணியாகுமா? இந்த 'இருக்கலாம் இருந்திருக்கும்' இவற்றைக் கேட்டு என் காது புளித்துவிட்டது. எனக்கு இனி பொறுமை இல்லே. என் தீர்மானத்தை நான் தெரிவித்து விட்டேன். அதை மாற்ற முடியாது.

பார்: அப்படியல்ல ராஜலக்ஷ்மி! ஒரு பெண் தன் தந்தையின் ஆதரவில் சிலகாலமிருந்து பிறகு தன் கணவனின் ஆதரவில் வாழ்ந்து பிறகு தன் மகனின் பராமரிப்பில் சலுகை பெறுதலென்பது எல்லோரும் ஒப்புக்கொண்ட விஷயம். மற்றும்...

ராஜ: மற்றும், சுற்றும் இதெல்லாம் வேண்டாம் நான் சொல்லவேண்டியதைத் தீர்மானமாகச் சொல்லிவிட்டேன். என் வீடு என்பது இதுதான், தெரிந்ததா? அவ்வளவுதான். நச்சுப்பிச்சு பேச்சுக்கள் எனக்குக் கட்டோடு பிடிக்காது. என்று விசுக்கென்று முகத்தைத் திருப்பி ஒரு வெட்டு வெட்டி அம்பு வேகத்தில் அவ்விடமிருந்து எழுந்துபோயே விட்டாள்.

பார்த்தஸாரதி சிலேபோல் நின்றவன்தான். நெடு நேரம் வரையில் ஒருவருமே பேசவில்லே. இவ்வளவையும் பார்த்தபடி உட்கார்ந்திருந்த கோவிந்தாசாரியாரும் குன்றுகோபாலனும் மௌனத்தையே ஏற்பவராயிருந்தனர். கடைசியில் பார்த்தசாரதி 'சரி, நான் போய்வரலாமா?' என்று ஒரு கேள்வியைப் பொதுவாகக் கேட்டான். கோவிந்தாசார்யார் ஒரு முறை நிமிர்ந்து பார்த்தஸாரதியின் முகத்தைப் பார்த்தார். பிறகு மௌனமாகவே தலேயைக் கவிழ்ந்துகொண்டார். பார்த்தஸாரதி குன்றுகோபாலனின் முகத்தைப் பார்த்தான். அவனும் தன் தந்தை செய்தபடியே தானுஞ் செய்து தந்தையை ஒட்டி நடக்கும் மகனெனத் தன்னே நிரூபித்தான். பிறகும் கொஞ்சநேரம் ராஜலக்ஷ்மி

ஏதாவது பதில் சொல்வாரோ என்று காத்திருந்தான் பார்த்தஸாரதி. பலனே பூஜ்யம், "சரி அப்படியானல் நான் வருகிறேன்" என்று மறுபடியும் பொதுவாகவே சொல்லிவிட்டுப் பார்த்தஸாரதி தன் வீடு திரும்பினன். இரவு 8-30 மணியாகி விட்டது. மத்யானம் 2 மணிக்குச் சென்றவன். பசி தாகம், களைப்பு சலிப்பு எல்லாம் ஒருங்கே வாட்ட பார்த்தஸாரதிக்கு வாழ்க்கையிலேயே ஒரு சலிப்பு ஏற்பட்டு விட்டது. இரவு நெடுநேரம் வரையில் ஒன்றுமே செய்யத் தோன்றவில்லை. உறக்கமும் பிடிக்காமல் இரவெல்லாம் கழிந்து மறுநாள் காலையில் எழுந்தபோது பேயறைந்தவன் போல் தென்பட்டான்.

காலையில் பார்த்தஸாரதியிடம் வழக்கம்போல் வைத்தியத்திற்கு வந்தவரையும், மற்ற நண்பரையுங்காண அவன் மாடியினின்றும் இறங்கி வரவே இல்லை. இவர்களுக்கெல்லாமும், மற்றும் அக்கம் பக்கம் வாஸிகளுக்கும் இது ஆச்சரியமாகவே இருந்தது. ஆனல் ஒருவராவது மாடிக்குப் போகவோ விஷயமென்னவென்று பார்த்தஸாரதியிடம் விசாரிக்கவோ துணியவில்லை. 10 மணியாகியும் பார்த்தஸாரதி மாடியினின்றும் இறங்கிவராததால் ஒரு சில நண்பர்கள் கவலையுறலாயினர். அவர்களுள் ஒருவரான பஞ்சாக்ஷரம் என்பவர் துணிந்து மாடிக்கே போனர். பஞ்சாபகேசனை அடையாளங்கண்டுகொள்ளவே முடியாதபடி மாறி இருப்பதைக் கண்டு மிரண்டு போய் விஷயமென்னவென்று விசாரித்தார். பார்த்தஸாரதி முதலில் ஒன்றுமே விசேஷமில்லை யென்று ஸாதித்தான், பஞ்சாக்ஷரம் விடுபவராக இல்லை. துருவிதுருவி விசாரித்து எப்படியோ கொஞ்சம் கொஞ்சமாக விஷயங்களையறியலானர். பிறகு பார்த்தஸாரதிக்கு தைரியமூட்ட வேண்டியது அவசியமென்றும் அதையும் உடனடியாகவே செய்ய வேண்டுமென்றும் தீர்மானித்தார். ஆகவே,

பஞ்சாக்ஷரம்: அதனலென்ன ஸார், முரட்டுப் பிடிவாதம் இந்தக்காலத்தில் அரைப்படிப்பும் கால்ப்படிப்பும் படித்துவிட்டு முழுதுங்கற்றுக் கரையேறி விட்டதாய் எண்ணுஞ் சிலரிடம் காண்பது வெகு ஸகஜம், நீங்கள்தான் சென்று அவர்களுடன் தங்கிச் சிலகாலம் கழிந்த பிறகு அந்த அம்மாளின் மனதை மாற்ற முயற்சிக்கலாகாதா? என்றர்.

பார்த்: எப்படி முடியுமய்யா? முதல் இரண்டு மாப்பிள்ளைகளும் வாழும் அவலப்பிழைப்பைப் பார்த்தால் அந்தக் கும்பலில் சேர ஒருவனுக்குமே துணியாது. மற்றும் கோவிந்தய்யங்காருக்கும் அவர் மக்களில் ஒருவருக்கும் கண்டுள்ள பயங்கரமான தொத்து வியாதியைப் பற்றிச் சிந்தித்தால் அக்குடும்பத்

A. K. SHERIFF

5/7, KALMANDAPAM ROAD

Rayapuram, Madras-13.

MANUFACTURER OF

READY MADE DRESSES

FIRST - CLASS CLOTHES

MADE OF SUPERIOR B. & C.

MATERIALS

Prices Moderate

C. C. JACOB

Tailors, Dress Manufacturers & Contractors
(Specialists in B & C Quality Textile Dresses)

10, Thambu Chetty St., Madras - 1.

★

For Readymade garments fabricated out of India's best clothing materials
—B. & C. Mills cloths

Contact us for your requirements.

துடன் வாழ்ந்திடல் என்னும் எண்ணமே குலை நடுக்கத்தைக் கொடுக்கிறது. தொட்டதற்கெல்லாம் கை கழுவும் தொழிலில் ஊறிப்போன எனக்கு அவ்வித வியாதிக்காரருடன் ஒரே குடும்பமாக ஒன்றி ஒரு கூரையின் கீழ் எப்படி வாழத்துணியுமய்யா? மேலும் எனது வயது மிகுந்த தாயாரை என்னுடன் வைத்துப் பேணிக்க வேண்டுமென்னும் ஆசை எனது வாழ்க்கையின் லக்ஷியம், அதையே விட்டுவிட வேண்டுமா? அதுவும் இந்த நரக வேதனைக்காகவா? கொட்டிலில் காமதேனு கட்டுத்தறியில் இருக்க அதைவிட்டுக் கழுதையைப் பேண புல் சுமையுடன் குட்டிச்சுவரைத் தேடிப்போக வேணுமா? என்று சரமாரியாகப் பொழிந்தான்.

பஞ்சாக்ஷரம் சற்று யோசித்தார். பிறகு ஏதோ தனக்குள் ஒரு தீர்மானத்திற்கு வந்தவராய் "சரிதான் ஸார். இந்த விஷயத்தை என்னிடம் ஒப்படைத்துவிட்டு நீங்கள் நிம்மதியாக இருங்கள். இதில் ஆவன செய்வது என் பொறுப்பு. மூன்று தினங்கள் அவகாசங்கொடுங்கள். பிறகு பாருங்கள் இந்த பஞ்சாக்ஷரத்தின் முயற்சியை" என்று சொல்லி பார்த்தஸாரதிக்கு உற்சாகமூட்டினார். மற்றும் இதே தோரணையில் அரைமணி நேரம் பேசி ஒருவாறு பார்த்தஸாரதிக்கு தைரியமூட்டிக் கீழே இறங்கி வந்து ஸ்நானாதிகள் செய்து சாப்பாட்டையும்முடித்த பிறகு தான் தன் வீட்டிற்குத் திரும்பினார்.

அன்று ஸாயங்காலமும் மறுநாளும் தானே நேரில் சென்று கோவிந்தாச்சாரியரிடம் பேசிச் சமாதானப் படுத்தி இருந்த விஷயத்தைச் சமரஸமாக்கிட முயன்றார். முயற்சிகள் வீணாயின. வேறு என்ன விசேஷங்கள் நடந்தனவோ! அதைப் பற்றியெல்லாம் ஒரு தகவலையும் பார்த்தஸாரதியிடமும் தெரிவிக்கவில்லை.

(தொடரும்)

CONSULT

K. M. S. Press
22-A, Narasingapuram St.,
Mount Road, Madras - 2

FOR ALL HIGH CLASS
JOB & BOOK WORK
IN ENGLISH & TAMIL

மணமும் வாழ்க்கையும்

மூன்று செம்படவ ஸ்திரீகள் ஒரு நகரத்தில் மீன்களை விற்று விட்டு தங்கள் வீட்டிற்குத் திரும்பும்பொழுது பலத்த மழை பெய்தது. மழைக்காக, ஒரு பெரிய கட்டிடத்தில் ஒதுங்கினார்கள். அது ஓர் அரண்மனை; இரவு வெகு நேரமாகியும் மழை ஓயவில்லை. அவ்வரண்மனையில் வசித்த ராணி இம்மூவரையுமழைத்து அவர்களுக்கு உணவும் உடையுமளித்து இரவு அகாலமானதால் அரண்மனையிலேயே தங்கவும், அன்றிரவு தன் அந்தப்புரப் படுக்கையறையிலேயே நித்திரை செய்யவும் அனுமதித்தாள்.

ராணியின் படுக்கையறை நானாவித பரிமள புஷ்பங்களாலும் மற்றும் வாசனைத்திரவியங்களாலும் நறுமணத்தை பரப்பிக் கொண்டிருந்தது. இத்தகைய பரிமளம் செம்படவ மாதர்களுக்கு பழக்கமில்லாததால் அவர்கள் தலைவலியால் பாதிக்கப்பட்டு நித்திரையில்லாமல் தவித்தனர்.

ராணி அவர்கள் நித்திரையில்லாமலிருப்பதின் காரணத்தைக் கூறுமாறு அவர்களிடம் கேட்டாள். "இந்த நறுமணத்தை எங்களால் சகிக்கமுடியவில்லை. வெளியே கிடக்கும் எங்கள் மீன் கூடைகளை எங்களருகிலே கொண்டுவந்து வைத்து அந்தக் கூடைகளிலே நிறைந்துள்ள மீன் வாடையை எங்களருகில் பரவச்செய்வதால் மட்டுமே எங்களுக்கு நித்திரை வரும். நாங்கள் கட்டும் சேலைகளில், உபயோகிக்கும் பாத்திரங்களில், எங்கள் குடிசைகளில், ஏன், எங்கள் தேகம் முழுவதிலுங்கூட மீன் வாடையே நிறைந்துள்ளது. இவ்வறையில் வியாபித்துள்ள நறுமணம் எங்களுக்குப் பழக்கமான வாடையை அறவே மாற்றிவிட்டதால் தான் எங்களுக்கு நித்திரை வரவில்லை" என்றார்கள்.

இம்மொழிகளைக் கேட்டு அதிசயித்த ராணி அன்று அம்மாதர்களுக்கு எவ்வாறேனும் நித்திரை யளிக்கக்கருதி அவர்களின் மீன் கூடைகளைக் கொண்டுவந்து அவர்கள் அருகிலேயே வைத்துக் கொள்ள அனுமதித்தாள். அவ்வாறே செம்படவப் பெண்மணிகள் கூடைகளைக் கொண்டுவந்து வைத்துக்கொண்டு அயர்ந்து நித்திரை செய்தார்கள்.

ஆனால் அக்கூடையிலிருந்து வீசிய மீன்வாடை அவ்வறையி லுள்ள நறுமணத்தையே மூழ்கடித்துவிட்டது. இத்துர்க்கந்தத் தினால் ராணிக்குத் தலைவலி ஏற்பட்டு அன்றிரவு முழுவதும் அவள் நித்திரை செய்யவேயில்லை. அதனால் ராணியின் உடல் நலமும் கெட்டுவிட்டது. செம்படவ மாதர்களோ நித்திரையிலிருந்து விழித்துக் காலையில் தங்கள் இருப்பிடம் சேர்ந்தார்கள்.

மேற் கூறிய சுவையான சம்பவத்தின் காரணம் மனித மனப்பான்மையிலுள்ள வேற்றுமைகள் அல்ல; ஆனால் ஒவ்வொரு மனித இனத்திற்கும் பிறவிக்குணத்திலுள்ள விசேஷ வேற்றுமை களேயாகும்.

உல்லாச மாளிகைகளிலேயே வாழ்ந்து கொண்டு சதா நறு மணத்தையே நுகரும் பிரபுக்களுக்குத் துர்க்கந்த மயமானசேரியை நாடுவதே அருவருப்பும் அசௌக்கியமும் தருவதுபோலவே துர்க் கந்தம் மிகுந்த சேரிகளில் பிறந்து வளர்ந்து வாழ்க்கை நடத்தியவர் களுக்கும் நறுமணம் மிக்க உல்லாச மாளிகையும் அதிருப்தி யளிப்பதுமட்டுமல்ல; அசௌக்கியத்திற்கும் காரணமாகிறது.

ஒவ்வொரு மனித இனமும் அவரவர்கள் பிறந்து வளரும் சூழ்நிலைகளால் பாதிக்கப்படுகிறார்கள். இந்த சூழ்நிலைகள் அவர்கள் நடத்தும் வாழ்க்கைக்கும் அவர்கள் மனத்தில் தோன்றும் விகாரங்களுக்கும் காரணமாகிறது.

சிருஷ்டியிலேயே இம்மாதிரியுள்ள வேற்றுமைகளை நாம் தெளிவாகக் காண்கிறோம். சாக்கடைகளிலும் மற்றும் குப்பை கூளங்களிலும் ஜீவிக்கும் ஈக்கள்போன்ற புழுப்பூச்சிகளை எடுத் துக் கொள்ளுங்கள். பூந்தோட்டங்களிலும் காணப்படும் புழு, பூச்சி களையும் கவனியுங்கள். இவை இரண்டினத்திற்கும் உடல் அமைப் பில் வித்தியாசங்களை காணலாம். துர்க்கந்தம் நிறைந்த சாக்கடை போன்ற இடங்களில் ஜீவிக்கும் ஈக்களை மலருக்கு மலர் தாவிக் கொண்டு மகரந்தத் தூளைப் பரவச் செய்யும் ஈக்களிடையே பரீ க்ஷார்த்தமாகக் கொண்டுபோனால் இவை சிரமப்படுவதையும் அதனால் மடிந்து போவதையும் காணலாம். பூந்தோட்டத்தில் புஷ் பங்களிடேயே தாவிக்கொண்டிருக்கும் ஈக்களை சாக்கடைகள்

போன்ற இடங்களுக்கு பரீக்ஷார்த்தமாக கொண்டுசென்ருல் இவற்றிற்கும் இதே கதி ஏற்படுவது கண்கூடு.

பொதுமக்களுக்கு ஆரோக்கியத்திற்குகந்த வாசஸ்தலங்களை யளித்து, அவர்கள் சுகாதார முறைகளை பூரணமாக அனுஷ்டித்து வாழ்க்கையை நடத்தவேண்டுமென்பதைப்பற்றி பிரபலஸ்தர்கள் அக்கறையோடு உழைப்பதற்குக் காரணம் மனிதருக்கெல்லாம் உயர்தர வாழ்க்கையில் பற்றுதல் ஏற்படுவதற்கே தான்.

சாக்கடை யருகே பிறந்து ராஜ வீதியிலேயே வளர்ந்து வாழ்க்கை நடத்த நேரிடும் மனிதர்களின் மூக்குகளுக்கு துர்க்கந்தம் எப்படி வெறுப்பை யளிப்பதில்லையோ அவ்வாறே தான் அவர்களுடைய மனத்திற்கு கேவலமான வாழ்க்கை அருவருப்பாகத் தோன்றுவதில்லை. அதனல் தான் மனிதரின் வாழ்க்கையைச் சரிவர அமைப்பது ஒரு மிக முக்கியமான சாதனையாகிறது இச் சாதனையை எப்படி நாம் பெறுவதற்கு முயற்சிக்கிருேமோ அவ்வளவுக்கவ்வளவு பொது மக்களின் வாழ்க்கைத்தரம் உயருகிறது.

FASHION HOME

Pro: M. U. VARGHESE & BROS

Govt. Diplomaed Dress Makers

4-A Whannels Road, Egmore, Madras.

MAKE

Smash-hit Personal Appearances!
Never before such enduring beauty!
Never before such princely comfort!
At a charge so unbelievably low!

Dealers in:

B & C Mills Products & artists in making dresses to measurement & taste

NANJUNDAN & CO

PROP. C. NANJUNDAN (BOOCHI)

256, RAJA STREET COIMBATORE

Post Box 189 Grams: "BOOCHI" Phone { Res: 603 / Office At 657

Agents For:

COMPLETE RANGE OF TEXTOOL TEXTILE SPINNING MACHINERY

Blow Room Machinery, Carding Engines, Speed Frames, Ring Spinning Frames, Reeling Machines & Bundling Presses.

Manufactured by

TEXTOOL COMPANY LIMITED

COIMBATORE

FOR

Madras, Andhra, Mysore, Travancore and Cochin States

AND

SOLE DISTRIBUTORS

FOR

MESSRS SKINS & LEATHERS LTD.

Manufacturers of

Calf Skins for Roller Covering & Aprons for High Draft, Spinning.

Edited, printed and published by E. BALASUBRAMANIAM at the K. M. S. PRESS, 22-A, Narasingapuram Street, Mount Road, Madras. Associate Editor :- N. S. MANI.

BINNY & Co. (MADRAS) LTD.

THE BANGALORE WOOLLEN COTTON AND SILK MILLS COMPANY LIMITED

BANGALORE

REGISTERED No. 84359

AGENTS SECRETARIES & TREASURERS

USE

BINNY'S COTSWOL

For year - round comfort
Available in smart and attractive colours
An excellent material to keep you comfortable in any weather.

AVAILABLE WITH ALL GOOD CLOTH DEALERS.

Manufactured by :—

The Bangalore Woollen Cotton & Silk Mills Co., Ltd.,
Bangalore City.

Distributors :— H. A. R. MOHAMED & SONS,
6 - A, Godown Street, MADRAS - 1.

WOMEN OF TASTE ALWAYS INSIST ON

BINNY'S

Pure Spun Silk & Georgette Sarees

In attractive GOLD BORDERS and shades

Manufactured by :

The Bangalore Woollen Cotton and Silk Mills Co., Ltd., Bangalore City.

Distributors :

H. A. R. Mohamed & Sons

No. 6–A, GODOWN STREET,

Madras-1.

Colourful

BINNY'S FABRICS

The most suitable material for the tropics. These lovely colourful fabrics in beautiful designs such as seersucker, plain and printed Linen, Lustalin Shirtings, Hanava Suitings, etc., are available at our Show Rooms.

VENKATESH VASTRALAYA

Phone: 4688

Retail Show Room:
2, THAMBU CHETTY STREET, MADRAS-1.